# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

''கொங்கு மாமேதை'' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர்
தெய்வத்திரு. அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம்
**(2006 ஆம் ஆண்டு)**

'கொங்கு மாமணி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

2001 ஆம் ஆண்டு

1. தெய்வத்திரு.கே.எம்.சென்னியப்பன்
2. டாக்டர் பழனி ஜி.பெரியசாமி
3. திரு. ஜெம் ஆர். வீரமணி

2002 ஆம் ஆண்டு

4. திரு. எஸ்.வி.பாலசுப்பிரமணியம்
5. திரு. இரா. காந்தி

2003 ஆம் ஆண்டு

6. திரு. டி.ஆர்.கார்த்திகேயன், I.P.S. (Retd.)
7. திருச்சி திரு. ஆர். தேவராசன்
8. திரு. ஜி.ஆர்.சுந்தரவடிவேல்

2004 ஆம் ஆண்டு

9. முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்
10. டாக்டர் சி.பழனிவேலு
11. டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்

2005 ஆம் ஆண்டு

12. NSIT. டாக்டர் எம்.முருகேசன்
13. திரு. கே.பழனியப்பன்
14. திரு.சி.கே.இராமசாமி

2006 ஆம் ஆண்டு

15. டாக்டர் நல்லா கோவிந்தசாமி
16. சக்தி மசாலா டாக்டர் பி.சி.துரைசாமி
17. திரு. வி.கே.தங்கவேல்

2007 ஆம் ஆண்டு

18. புலவர் செ.இராசு
19. திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி
20. பத்மஸ்ரீ டாக்டர் க.ரா.பழனிசாமி

2008 ஆம் ஆண்டு

21. ஆடிட்டர் திரு. மு.பாலசுப்பிரமணியம்
22. டாக்டர் என்.எம்.வீரய்யன்
23. தெய்வத்திரு. ப.செங்கோடன்

2009 ஆம் ஆண்டு

24. பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ்.நடராஜன்
25. திரு.கே.செல்லமுத்து
26. பத்மஸ்ரீ ஏ.சக்திவேல்

2011 ஆம் ஆண்டு

27. அட்லஸ் திரு. எம்.நாச்சிமுத்து
28. திரு. கே.ஏ.செங்கோட்டுவேல்

2012 ஆம் ஆண்டு

29. கலைமாமணி சிவகுமார்

2013 ஆம் ஆண்டு

30. டாக்டர் நல்லா ஜி.பழனிசாமி

2014 ஆம் ஆண்டு

31. இராசி சீட்ஸ் டாக்டர் எம். இராமசாமி

2015 ஆம் ஆண்டு

32. திரு. பி.காசியண்ண கவுண்டர்

2016 ஆம் ஆண்டு

33. திரு.வி.இரத்தினசபாபதி
34. டான் ஸ்ரீ எம்.கேவியஸ்
35. டாக்டர் வீரப்பன் சுப்பிரமணியன்

2017 ஆம் ஆண்டு

33. திரு.எஸ்.அருணாச்சலம்
34. திரு.பி.தேவராஜன்
35. திரு.கே.ஆர்.அப்பாவு

# கொங்கு மாமேதை



## திரு. காலிங்கராய கவுண்டர்

12ஆம் நூற்றாண்டிற்கும் 13 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் கொங்கு நாட்டின் மையப்பகுதியான ஈரோடு அருகில் வாழ்ந்த பெருநிலக்கிழார் லிங்கையன் என்பவர்.

பாண்டிய மன்னன் வீரபாண்டியனிடம் படைவீரனாகச் சேர்ந்த லிங்கையன் தனது அதீத திறமை, ஆழ்ந்த அறிவாற்றல், சீரிய மதிநுட்பம், வியக்கத்தக்க வீரமிக்க செயல்கள் போன்றவை காரணமாக, அமைச்சராக்கப்பட்டார். உத்தமராயர், காலிங்கராயர் என்ற உயர்பட்டங்கள் இவரது சிறந்த செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு வழங்கப்பட்டன. பின்னர், கொங்குப் பகுதிக்குத் தலைவராக்கப்பட்டார்.

ஈரோடு மாவட்டத்தில் காவிரியாற்றின் மேற்குப்பகுதியின் வறட்சியைப் போக்கவேண்டுமெனக் காலிங்கராய கவுண்டர் அவர்களால் திட்டமிட்டு, அரும்பாடுபட்டு வெட்டப்பட்டது, காலிங்கராயன் பெயரால் அழைக்கப்படும் காலிங்கராயன் கால்வாய். ஈரோடு மாவட்டத்தில் பல பகுதிகள் பாசன வசதி பெற நற்பணியாற்றியவர், காலிங்கராயன் ஆவார். ஈரோடு மாவட்டத்தில் அழகிய அணிகலனாக விளங்கி வருவது காலிங்கராயன் கால்வாய் ஆகும்.

காலிங்கராயன் பாண்டிய நாட்டுத் தலைமைப்பொறுப்பேற்ற பிறகு, அவரது ஆளுகைக்குட்பட்ட புன் செய் நிலங்களை, நன்செய் நிலங்களாக மாற்றவேண்டும் என்று திட்டமிட்டு, நாட்டு மக்களின் உதவியுடன் காலிங்கராயன் அணையினைக் கட்டி, கால்வாயினையும் வெட்டிச் சாதனை படைத்தார். 1270 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கால்வாய் வெட்டும் பணி, 1282 ஆம் ஆண்டு நிறைவுற்றது. 1282 ஆம் ஆண்டு தை மாதம் ஐந்தாம் நாள் முதன்முதலாக, கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

காவிரி ஆற்றின் கிளை நதிகளான பவானியையும் நொய்யலையும் இணைக்கும் கால்வாய்தான், காலிங்கராயன் கால்வாய். இதன்மூலம் பவானி ஆற்றிலிருந்து நீர்

பிரித்தெடுக்கப்பட்டு, காவிரி ஆற்றின் ஓரமாகவே அதன் தென்கரையில் 56 1/2 மைல்கள் கிழக்காக ஓடி ஆவுடையார்பாறை என்ற இடத்தில் நொய்யல் ஆற்றில் சங்கமமாகிறது.

பவானி ஆற்றை நொய்யல் ஆற்றுடன் இணைக்க 32மைல் தூரம் கால்வாய் வெட்டினால் போதும் என்ற நிலை இருந்த போதிலும், மிக அதிகமான நிலங்கள் பாசனம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடனும், நீர் தேங்கி நின்று வயல்களுக்குப் பாய வேண்டும் என்ற எண்ணத்துடனும், நீரின் வேகத்தைக் குறைத்துக் கரைக்கு வெள்ளத்தினால் ஏற்படும் அழிவுகள் தடுக்கப்படவேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டும், 56 1/2 மைல் தூரத்திற்கு இந்தக் கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. பவானி ஆறு ஈரோடு வழியாகக் கொடுமுடியைக் கடந்து நொய்யல் ஆற்றில் கலக்குமாறு மதகுகள் அமைத்து வெட்டப்பட்ட இக்கால்வாய், கொங்குநாட்டு வரலாற்றில் ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியது என்றால் அது சற்றும் மிகையன்று.

கால்வாயின் இரு கரைகளும் காரையால் கட்டப்பட்டு இருப்பதால், ‘காரை வாய்க்கால்’ என்றும், பாம்புபோல் நெளிந்து செல்வதால் ‘கோண வாய்க்கால்’ என்றும் இதனை அப்பகுதி மக்கள் அழைக்கின்றனர். இந்தக் கால்வாய் மூலம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள 15,743 ஏக்கர் நிலம் தற்போது பாசன வசதி பெற்று வருகிறது. வானம் பார்த்த பூமியைப் பொன்விளையும் பூமியாக மாற்றியவர், காலிங்கராயன்.

காலிங்கராயனைப் பற்றி, போற்றிப் பெருமைப்படத் தக்க அம்சம் ஒன்று உண்டு. தான் வெட்டும் வாய்க்கால் தன் சொந்த நிலத்தின் மேம்பாட்டுக்காக வெட்டப்பட்டதாக மக்கள் எண்ணிவிடக்கூடாது என்று கருதினார். மேலும் சாத்தந்தை குலத்தைச் சேர்ந்த தன் பங்காளிகள் மட்டும் பயன் பெறுவதற்காககவே இக்கால்வாயை வெட்டினார் என்று சிலர் விமர்சனம் செய்ததையும் கேள்விப்பட்டார். தான் வெட்டிய வாய்க்கால் நீரைத் தன் நிலங்களுக்கும், தன் பங்காளிகளின் நிலங்களுக்கும் பயன்படுத்த மாட்டேன் என்றும், அந்த நீரில் ஒரு சொட்டுத் தண்ணீரைக் கூடக் குடிக்கமாட்டேன் என்றும் சபதம் செய்து, வாய்க்கால் வெட்டி முடித்தவுடன், அங்கிருந்து குடும்பத்துடன் வெளியேறிப் பொள்ளாச்சி அருகில் ஊத்துக்குளி என்ற இடத்தில் குடியேறினார். எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் இந்தக் கால்வாய்த் தண்ணீரைச் சாத்தந்தை குலத்து மக்கள் பயன்படுத்தக்கூடாது, மற்ற அனைவரும் பயன்படுத்தலாம் என்று சொன்னாராம். இன்றும் இது பின்பற்றப்பட்டு வருவதை நாம் காண்கிறோம்.

தொழில் நுட்பம் வளராத காலத்தில், கல்வி அறிவு அதிகமில்லாத ஒரு விவசாயியான காலிங்கராயன், தனது அதீத அறிவுத் திறத்தைக்கொண்டு வெட்டிய கால்வாய் பற்றி, மேலை நாட்டுப் பொறியியல் வல்லுனர்கள் பெரிதும் வியந்து பாராட்டுகின்றனர். ஆனால் தமிழ்நாட்டில் காலிங்கராயன் வரலாற்றை, பெருமையைச் சமீப காலம்வரை மக்கள் முழுமையாக அறிந்துகொள்ளாத நிலை இருந்து வந்தது.

ஒரு வலுவான அணையினையும், கால்வாயினையும் வெட்டிக்கொடுத்துச் சாதனை படைத்துள்ள காலிங்கராயன், நதிகள் இணைப்பின் முன்னோடியாக விளங்கினார்.

சமுதாய மக்களின் மேம்பாட்டிற்காக, கால்வாய் வெட்டி உழவர் பெருமக்களின் வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளித்து நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்த காலிங்கராயனின் ஒப்பற்ற சாதனை அனைவராலும் பெரிதும் போற்றப்படுகின்றது. காலிங்கராயன் கால்வாய் வெட்டிய வரலாறு குறித்துச் செவிவழிச் செய்திகள் பல உள்ளன. குறிப்புகளும் சில உள்ளன. அவற்றுள் இரண்டு செய்திகள் மட்டுமே கொங்குப்பகுதி மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டும், நம்பப்பட்டும் வருகின்றன. ஒன்று மாமன் மகளைத் திருமணம் செய்யும் நோக்கத்தில் பெண் கேட்டுச் சென்றபோது 'மேட்டாங்காட்டுக்காரன்' என மாமன் கூறி அவமானப்படுத்தியதால் எழுந்த வைராக்கியத்தில் மாமனுக்குச் சவால் விடும் வகையில்தான் கால்வாய் வெட்டும் பணியைத் தொடங்கினார் என்பது. இரண்டாவது சிவலிங்கேஷ்வரர் கடவுள் காலிங்கராயனின் கனவில் தோன்றி, 'ஒரு மயில், பாம்பு ஒன்றைத் துரத்திச் சென்ற அடையாளம் உள்ளது; அதன் வழியே கால்வாய் வெட்டவேண்டும்' எனக் கூறியதாகவும், அதன்படியே கால்வாய் வெட்டப்பட்டது என்ற செய்தியாகும்.

காலிங்கராயன் பற்றி பத்மஸ்ரீ பெரியசாமி தூரன் 'காலிங்கராயன் கொடை' என்ற நூலையும், திரு.ஏ.எஸ்.வேலுசாமி 'காலிங்கராயன் காவியம்' எனும் நூலையும், புலவர் பாஸ்கரதாசன் 'காலிங்கராயன் கதை' என்ற நூலையும், புலவர் செ.இராசு, 'காலிங்கராயன் கால்வாய்' என்ற நூலையும், தமிழன்பன் ப.முத்துசாமி 'காலிங்கராயன் காவியம்' எனும் நூலையும் படைத்துள்ளனர்.


ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகள், திரு.முத்துராமசாமி காலிங்கராயன் எழுதி வெளியிட்ட 'வம்சாவளி தாக்கீது' முதலானவற்றின் அடிப்படையில், கொங்குமாமணி புலவர் செ.இராசு அவர்கள் எழுதி வெளியிட்ட 'காலிங்கராயன் கால்வாய்' என்னும் நூல், காலிங்கராயன் பற்றிச் சான்றுகளுடன் மிகச் சிறந்த ஆவணமாக அமைந்துள்ளது. அந்நூலையொட்டி திரு.நா.புஷ்பராஜ் ஆங்கிலத்தில் 'Kalingarayan the great and Kalingarayan Canal' எனும் நூலை எழுதி வெளியிட்டுள்ளார். மேற்கண்ட நூல்கள் காலிங்கராயன் சாதனையைப் பதிவு செய்து, அவருடைய புகழுக்குப் புகழ் சேர்த்துள்ளன. காலிங்கராயன் புகழ் பாரெங்கும் பரவ வேண்டும் எனும் நோக்கில் அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்கள் அளித்த ஆலோசனைப்படி, கொங்குநாடு அறக்கட்டளை ஆண்டுதோறும் தகுதிவாய்ந்த சான்றோர்களுக்கு 'காலிங்கராயன்' விருது வழங்கி வருகிறது.

நதிகள் இணைப்புத் திட்டத்தின் முன்னோடி, குளம் பல வெட்டியவர், கோயில்கள் பல கட்டியவர், பசுமைப் புரட்சி செய்திட்ட தியாக மறவர், கொங்கு நாட்டுக்கும் கொங்குச்

சமுதாயத்திற்கும் ஈடு இணையில்லாப் பெருமை சேர்த்த உத்தமர், அகிலமெல்லாம் வியந்து போற்றிப் பாராட்டும் அற்புதப் பணியைச் செய்து முடித்த பெருமகனார், வாய்க்கால் வழியே வரலாறு படைத்த கொங்கு நாட்டுத் தியாகச் செம்மல், படிக்காத அறிவியல் மேதை எனப் பன்முகங்கொண்டு, வரலாற்றுச் சிறப்பு மிக்க வாய்க்கால் வெட்டிக் கொங்கு நாட்டை வளமாக்கிய காலிங்கராயன் அவர்களை, ''கொங்கு மாமேதை காலிங்கராய கவுண்டர்'' எனப் போற்றிப் பெருமை கொள்கிறது, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்.

'கொங்கு மாமேதை காலிங்கராய கவுண்டர் எனப் போற்றிப் புகழ்கின்ற இந்தச் சமயத்தில் அவரது வழித்தோன்றல்களாகவும், அவருடைய பெரும் புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கின்ற பணியில் தொடர்ந்து தங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ளவர்களுமான திரு.ஆர்.கிருஷ்ணராஜ் காலிங்கராயர், திரு.ஆர்.மோகன்ராஜ் காலிங்கராயர், திரு.ஆர்.அருண்குமார் காலிங்கராயர் ஆகிய மூன்று சான்றோர்களையும் கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் மிக்க மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறது.

## திரு. ஆர்.கிருஷ்ணராஜ் காலிங்கராயர்



ஜமீன் ஊத்துக்குளியின் **35**ஆவது ஜமீன்தார் திரு.அகத்தூர் முத்து இராமசாமி காலிங்கராயர் – திருமதி ருக்மணி தம்பதியரின் மகனாகப் பிறந்தவர், திரு.கிருஷ்ணராஜ் காலிங்கராயர். கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்கியவர். விவசாயத்தில் மிக்க ஈடுபாடு கொண்டுள்ளவர். தொழிலதிபராகவும் விளங்கும் இவர் தற்போது கோவையில் வசித்துவருகிறார். காலிங்கராய கவுண்டரின் வழித்தோன்றல் திரு.கிருஷ்ணராஜ் காலிங்கராயர் அவர்களைக் கௌரவிப்பதில், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமை கொள்கிறது.

# திரு. ஆர்.மோகன்ராஜ் காலிங்கராயர்



ஜமீன் ஊத்துக்குளியின் 35ஆவது (1918–1969) ஜமீன்தார் திரு.அகத்தூர் முத்து இராமசாமி காலிங்கராயர் – திருமதி ருக்மணி தம்பதியரின் மூன்றாவது மகனாக 1941 ஆம் ஆண்டுப் பிறந்தவர், திரு.மோகன்ராஜ் காலிங்கராயர். ஊட்டி லவ்டேல் லாரன்ஸ் பள்ளியில் 1949 முதல் 1959 ஆம் ஆண்டு வரை படித்தார். PUC சென்னை லயோலா கல்லூரியில் முடித்தபிறகு, 1962 ஆம் வருடம் இந்திய விமானப்படையில் சேர்ந்தார். நான்காண்டுகள் கழித்து ஊத்துக்குளி திரும்பி, விவசாயத்தில் ஈடுபட்டார். 9 ஆண்டுக் காலம் ஜமீன் ஊத்துக்குளி ஊராட்சித் தலைவராகப் பணிபுரிந்தார். 1971 ஆம் ஆண்டு பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, 6 ஆண்டுகள் எம்.பி.ஆக மிகச் சிறப்பாகச் செயல்பட்டார்.

1967 ஆம் ஆண்டு திருமதி ஜகரதி குமாரி அவர்களை மணந்து கொண்டார். தற்போது கோவையில் தங்கி, தொழில் செய்து வருகிறார். இவருக்கு ஹரிராஜ் என்ற மகனும், அகத்தூர் சாமுடி ஆர்த்தி காலிங்கராயர் என்ற மகளும் உள்ளனர். மருமகன் விஸ்ணுராம் சரவணவேல். பேரன் ஆதித்யா. மகன் ஹரி ராஜ் ஒரு சினிமா நடிகர். இவருக்கு தாரிணி, ஷிவாணி என இரு மகள்கள் உள்ளனர்.

கொங்கு மாமேதை காலிங்கராய கவுண்டர் அவர்களுடைய வழித்தோன்றல் திரு.மோகன்ராஜ் காலிங்கராயர் அவர்களைக் கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமை கொள்கிறது.

# திரு. ஆர்.அருண்குமார் காலிங்கராயர்



திரு.அருண்குமார் காலிங்கராயர் அவர்கள், ஜமீன் ஊத்துக்குளியின் 35வது ஜமீன்தாரர் திரு.அகத்தூர் முத்து இராமசாமி காலிங்கராயர் – திருமதி ருக்மணி தம்பதியரின் மகனாகப் பிறந்தவர். திரு.மோகன்ராஜ் காலிங்கராயர் அவர்களின் தம்பி ஆவார். பொள்ளாச்சியில் வசித்து வருகிறார். ஊட்டி லவ்டேல் லாரன்ஸ் பள்ளியில் படித்த பின்னர், சென்னை லயோலா கல்லூரியில் B.A., (History) பட்டம் பெற்றார். சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தார். Basket Ball Captain ஆக இருந்து பல வெற்றிகளை ஈட்டியவர் இவர்.

தற்போது விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார். ஆளியாறு Anjali Essential oils Pvt. Ltd., நிறுவனத்தின் இயக்குநராகவும், Maitreyi Resorts Pvt. Ltd., நிறுவனத்தின் இயக்குநராகவும், ஊத்துக்குளி ஷிவாணி அறக்கட்டளை நிர்வாக இயக்குநராகவும் பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றார். சமூக சேவையில் ஈடுபட்டுத் தொண்டாற்றி வருகின்றார்.

இவருடைய மகன் திரு.சித்தார்த் ஏஎம்ஆர் காலிங்கராயர் ஆவார். மகள் ஸ்ரீநிதி காலிங்கராயர். பேத்தி அலன்கிருதா காலிங்கராயர்.

கொங்குமாமேதை காலிங்கராய கவுண்டர் அவர்களுடைய வழித்தோன்றல் திரு. அருண்குமார் காலிங்கராயர் அவர்களைக் கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமை கொள்கிறது.

# கொங்கு மாமணி



## திரு. கே.பி.இராமசாமி

ஈரோடு மாவட்டம், கள்ளியம்புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனிசாமி கவுண்டர் – திருமதி செல்லம்மாள் தம்பதியரின் மகனாக 1950 ஆண்டுப் பிறந்தவர், திரு.கே.பி.இராமசாமி அவர்கள்.

ஒரு மனிதனின் சிறிய தொடக்கம்தான் மிகப் பெரிய பயணமாக மாறும். அதுபோல் தான் நமது கே.பி.இராமசாமி அவர்கள் விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, பல இன்னல்களுக்கு இடையில் பியுசி பயின்று, பிறகு இரண்டு ஆண்டுகள் விவசாயம் செய்தார்.

பிறகு அவர் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற வேட்கையில் தனது பார்வையை ஆடை நெய்தல் அதாவது, விசைத்தறிகளுடன் ஆடை சார்ந்த தொழிலில் நுழைந்தார். நான்கு விசைத்தறிகள் நாற்பதாக மாறின. பிறகு அவருடைய சகோதரர்கள் கே.பி.டி.சிகாமணி, பி. நடராஜன் ஆகியோரின் படிப்பு முடிந்து கே.பி.இராமசாமி உடன் தொழிலில் இணைந்தனர். பிறகு கோவைக்கு இடம் பெயர்ந்து 1984இல் தரம் ஒன்றையே தாரக மந்திரமாகக் கொண்டு துணி ஏற்றுமதித் துறையில் நுழைந்தார். அதன் பின்னர் அதன் விரிவாக்கமாக 1989இல் திருப்பூரில் ஆயத்த ஆடை ஏற்றுமதி நிறுவனத்தையும் ஆரம்பித்தார். அதன் சிறப்பான செயல்பாடுகள் கே.பி.இராமசாமி அவர்களின் ஊக்கத்தையும், சிந்தனையையும் அடுத்தகட்ட நிலைக்குக் கொண்டு சென்றன. இதன் விளைவாக, சத்தியமங்கலத்தில் 1996இல் 6000 கதிர்களில் (Spindle) ஆரம்பித்த நூற்பாலை நிறுவனம். இன்று 3,54,000 கதிர்களாக வளர்ச்சி அடைந்துள்ளது.

மேலும் ஆயத்த ஆடை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு மொத்தம் 20,000 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பினையும், கல்வி வாய்ப்பினையும், சுயதொழிலில் கற்று அதன்மூலம் அவர்கள் சொந்த வாழ்க்கையில் சுயமாக முன்னேறும் வாய்ப்பினையும் ஏற்படுத்தித் தந்துள்ளார்.

சமுதாயத்திற்கு உதவ வேண்டும் என்ற சீரிய எண்ணம் கொண்ட இவர், கிராமப்புற மக்கள் கஷ்டப்படுவதைக் கண்டு தனது தொழில் விரிவாக்கத்திற்குக் கிராமப்புற பெண்களைப் பணியாளர்களாக நியமித்து, அவர்களுக்கு அனைத்துப் பயிற்சிகளையும், வசதிகளையும், வாய்ப்புகளையும் உருவாக்கிப் பிறரின் தயவின்றித் தன் சொந்தக்காலில் நிற்கும் அளவிற்குச் சமூக சூழ்நிலையையும், பொருளாதார முன்னேற்றத்தையும் ஏற்படுத்திக்கொடுத்தார்.

ஒரு நாள் சத்தியமங்கலம் ஆலையில் பணியாளர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது, ஒரு பெண் ‘நான் படிக்க விரும்புகிறேன். ஆனால், அதற்கான பொருளாதார வசதி இல்லை’ என்று அழுதுகொண்டே கூறினார். மனதில் அனைவருக்கும் கல்வி வழங்கவேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது. பின் அவரின் எண்ணம் செயலாக மாறியது. அதன் விளைவாக, தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகம் மூலம் இலவசமாகக் கல்வி வழங்கும் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். கல்வி பயிலும் மாணவிகளுக்கென ஆசிரியர்களை நியமித்து அதன் விளைவாக ஆலையில் பணிபுரியும் பெண்கள் கல்வி மூலம் பதவி உயர்வும் பெறத் தொடங்கினர். அங்குப் பணிபுரிய வரும் பெண்கள் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பைத் தகுதியாகக்கொண்டு பணியில் சேர்ந்து கல்வி பயின்று கொண்டே பட்டதாரிகளாகி விடுகின்றனர்.

இதுவரை சுமார் 21,000 க்கும் மேற்பட்ட பெண் பணியாளர்கள் உயர் கல்வி பெற்றுள்ளனர். இதுவரை +2 பொதுத்தேர்வில்

2014–2015 ஆம் ஆண்டு 175 பேரும் (100 சதவீதம் தேர்ச்சி)
2015–2016 ஆம் ஆண்டு 164 பேரும் (100 சதவீதம் தேர்ச்சி)
2016–2017 ஆம் ஆண்டு 189 பேரும் (100 சதவீதம் தேர்ச்சி)
2017–2018 ஆம் ஆண்டு 146 பேரும் (100 சதவீதம் தேர்ச்சி)

தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதில் பல பணியாளர்கள் 1100 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

தன்னிடம் பணியாற்றும் பெண்மணிகளை ஊக்கப்படுத்தும் விதமாக +2 படிப்பில், 1000 த்துக்கும் மேல் மதிப்பெண் பெற்ற பெண்களுக்கு 10,000 ரூபாயும், 1050க்கும் மேல் மதிப்பெண் பெற்ற பெண்களுக்கு 25 ஆயிரம் ரூபாயும், 1100 க்குமேல் மதிப்பெண் பெற்ற பெண்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும், 1150 க்குமேல் மதிப்பெண் பெற்ற பெண்களுக்கு 1 இலட்சம் ரூபாயும் எனப் பரிசளித்து வருவது பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்.

2017 ஆம் ஆண்டு 1149 மதிப்பெண் பெற்ற கலைவாணி என்ற பெண் ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசைப் பெற்றுத் தன்னுடைய மேற்படிப்பைத் தொடர்ந்துள்ளார்.

இளங்கலை பட்டப்படிப்பில்,
2014–2015 ஆம் ஆண்டு 118 பேரும்
2015–2016 ஆம் ஆண்டு 186 பேரும்
2016–2017 ஆம் ஆண்டு 204 பேரும்
2017–2018 ஆம் ஆண்டு 231 பேரும் பட்டம் பெற்றுள்ளனர்.

2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகத் தேர்வில் முத்து என்ற பெண்மணி மாநிலத்திலேயே முதல் மதிப்பெண் பெற்று, தமிழக ஆளுநர் திரு.ரோசையாவிடமிருந்து ‘செம்கா’ (CEMCA) விருதையும், தங்கப் பதக்கத்தையும் பெற்றுள்ளார். 2017 ஆம் ஆண்டு இதேபோல், ரூபா என்ற பெண்மணியும் பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்றுத் தமிழக ஆளுநர் திரு.வித்யாசாகர் அவர்களிடமிருந்து செம்கா விருதையும், தங்கப்பதக்கத்தையும், 25000 ரூபாய் பரிசினையும் பெற்றார். தொடர்ச்சியாகப் பல பெண்கள் பல்கலைக்கழக அளவில் தங்கப்பதக்கம் பெற்று வருகின்றனர்.

இந்த முறையில் கல்வி பயின்ற பெண்கள் இன்று கனடா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா போன்ற மேலை நாடுகளில் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் முழு நேரக் கல்வி வழங்க கே.பி.ஆர்.பொறியியல் கல்லூரி நிறுவப்பட்டுத் திறம்படச் செயல்பட்டு வருகின்றது. முழுமையான அர்ப்பணிப்பு உணர்வோடும், ஊக்கமுடனும், திறமையுடனும் தொடர்ந்து செயல்பட்டதே அவரது வெற்றிக்கான அடிப்படை.

மேலும், கோவையில் ஐ.ஏ.எஸ்.தேர்விற்கான பயிற்சியும் இலவசமாக அளிக்கப்படுகிறது. அங்கேயே விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளில் I.A.S. ஆக ஒருவரும், I.P.S. ஆக ஒருவரும், I.F.S. ஆக ஒருவரும், I.R.S. ஆக எட்டு பேரும், TNPSC GROUP 2, GROUP IV ஆகிய போட்டித் தேர்வுகளில் 75 பேரும், வங்கித் தேர்வில் 50 பேரும் பெற்றி பெற்றுப் பணியமர்ந்துள்ளனர். மேலும் மாலை நேரங்களில் அந்தப் பகுதியில் உள்ள மாநகராட்சிப் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடம் பயிற்றுவிக்கப்படுகிறது.

கே.பி.இராமசாமி அவர்களுக்கு மரம் வளர்ப்பதில் மிகுந்த நாட்டமுண்டு. அதனால் அவர் தனது அனைத்து ஆலைகளிலும், கல்லூரியிலும் கழிவு நீர் அனைத்தையும் நவீன முறையில் சுத்திகரிப்புச் செய்து மரங்களுக்கு உரமாகப் பயன்படுத்துகின்றார். இதன் மூலம் நீர் மேலாண்மையும், மரம் வளர்த்தலும் ஒரு சேரச் சிறப்பாகச் செயல்படுகின்றன.

இதுவரை சுமார் 1,20,000 க்கும் மேற்பட்ட மரங்களை நட்டு அவற்றைச் சீரிய முறையில் தொடர்ச்சியாகப் பராமரித்தும் வருகிறார். தான் சார்ந்த அனைத்து இடங்களிலும் மரம் வளர்த்தலையும் பராமரிப்பதையும் ஓர் அதீத ஈடுபாடுடன் செய்து வருகிறார். தொடர்ச்சியாகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்.


அவரது நிறுவனம் சிறந்த செயல்திறன்கள் மூலம் சீரிய முன்னேற்றம் கண்டு, நல்ல தரம் வாய்ந்த பொருட்களையும், சேவைகளையும் அளிப்பதுடன் பணியாளர்களுக்கும், சமூகத்திற்கும் இயன்ற சேவையாற்றி வருகிறது. மக்கள் நல்லாசியுடன் தொடர்ந்து சீரிய பணிகளைச் செவ்வனே செய்கிறார். இதற்கு எல்லாம் உறுதுணையாகச் செயல்படும் அவரது சகோதரர்கள் திரு. கே.பி.டி.சிகாமணி (MD), திரு.பி.நடராஜன் (MD) - SIMA Chairman, மகன் திரு. ஆனந்த கிருஷ்ணன் (ED) மற்றும் மருமகன் திரு. E.K.சக்திவேல் (ED) ஆகியோர் அவரது முயற்சியை மூச்சாய்ச் சுவாசித்து அவரின் சிந்தனையைச் செயலாகக்கொண்டு வருகின்றனர்.

இவருடைய மனைவி திருமதி பார்வதி. இத்தம்பதியருக்கு திருமதி உமா ராஜசேகர், திருமதி கல்பனா ஆனந்த் ஆகிய இருமகள்கள் உள்ளனர். மருமகள் பெயர் திருமதி காயத்திரி ஆனந்தகிருஷ்ணன்

இவருடைய சமூக அக்கறையைப் பல்வேறு அமைப்புகளும் நிறுவனங்களும் பாராட்டிச் சிறப்புச் செய்துள்ளன. அவற்றுள் 1. முன்னாள் பிரதமர் திரு.தேவ கவுடா அவர்களின் கரங்களால் Star of India விருது, 2) கொங்கு நாட்டுச் சாதனையாளர் விருது – மகாலிங்கம் நினைவு அறக்கட்டளை, 3) Best Entrepreneur Award - CMA 4) காலிங்கராயர் விருது - KCT, 5) Best Citizen of Coimbatore - Lions Club, 6) One among the top 100 C.E.O's in India - Business Today, 7. Best Entrepreneur Award - Nanayam Vikatan ஆகியன குறிப்பிடத்தக்கன.

எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்து தன்னுடைய அயரா உழைப்பு, இடைவிடா முயற்சி, அளப்பரிய ஆற்றல், தன்னம்பிக்கை முதலான அருங்குணங்களைத் துணைகொண்டு, தொழில் துறையிலும் சமுதாயப் பணியிலும் பெரும் சாதனைகள் படைத்துள்ள திரு.கே.பி.இராமசாமி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு மாமணி' விருது வழங்கி மகிழ்கிறது.

# கொங்கு மாமணி



## திரு. எம்.பொன்னுசுவாமி

நாமக்கல் மாவட்டம், புதூர் எனும் சிற்றூரில் ஓர் எளிய விவசாயக் குடும்பத்தில் திரு.பி.முத்துசாமி கவுண்டர் – திருமதி சோலியம்மாள் தம்பதியருக்கு, 1954ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் திரு.எம்.பொன்னுசுவாமி அவர்கள்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் அங்கமாக அன்றைய நாளில் இருந்ததும், தமிழகத்தின், சிறந்த கலைக் கல்லூரிகளுள் ஒன்றாகத் திகழ்கின்றதுமான கோவை பி.எஸ்.ஜி.கலைக் கல்லூரியில் 1974 ஆம் ஆண்டு B.Sc., (Chemistry) பட்டம் பெற்றார். பள்ளியிலும் கல்லூரியிலும் படிக்கும்போது, படிப்பிலும், அறிவிலும், விளையாட்டிலும் சிறந்தவராகத் திகழ்ந்தார்.

1981 ஆம் ஆண்டு, தனது 27 ஆவது வயதில் பியூர் கெமிக்கல்ஸ் கம்பெனி எனும் சொந்த நிறுவனத்தை இரண்டு பணியாளர்களை மட்டும் கொண்டு தொடங்கினார். ஈரோடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் செயல்பட்டு வந்த டெக்ஸ்டைல்ஸ், தோல் மற்றும் கெமிக்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு இரசாயனப் பொருட்களை விற்பனை செய்யத் தொடங்கினார். தன்னம்பிக்கை, அயரா உழைப்பு, நேர்மை, சாதிக்கவேண்டும் எனும் மன உறுதி போன்ற அருங்குணங்களைக் கொண்ட இவரின் நிறுவனம் ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரூன்றி, பியூர் கெமிக்கல்ஸ் குழுமம் எனும் ஆலமரத்தின் ஓர் அங்கமாக, குழும நிறுவனங்களுள் ஒன்றாக வளர்ந்துள்ளது. முயற்சி திருவினையாக்கும், ‘உழைப்பு உயர்வு தரும்’ எனும் முதுமொழிகளுக்கேற்ப, இவரது நிறுவனங்கள் வியக்கத்தக்க வளர்ச்சியடைந்துள்ளன.

பியூர் கெமிக்கல்ஸ் குழுமம் தற்போது இந்தியாவில் மட்டும் 28 கிளைகளைக் கொண்டுள்ளது. மேலும் இலங்கை, சிங்கப்பூர், பங்களாதேஷ், ஆஸ்திரேலியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் ஆகிய நாடுகளிலும் கிளைகளைக்கொண்டு, பன்னாட்டு அளவில் புகழ்பெற்ற ஒரு நிறுவனமாகத் திகழ்கிறது.

தற்போது இக்குழுமத்தில் 1000 க்கும் மேற்பட்ட திறமையான பணியாளர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். திரு.பொன்னுசுவாமி அவர்களின் சீரிய வழிகாட்டுதல் மற்றும் பெரும் துணையுடன், இக்குழுமம் பல துறைகளிலும்

கால்பதித்து மேலும் விரிவடையத் தொடங்கியது. Industrial Purpose Chemicals, Total Logistics Solutions, Textile Spinning ஆகியவற்றை வினியோகம் செய்வதில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இன்றைய தினம் ரூபாய் 2100 கோடி வர்த்தகம் செய்யும் குழுமமாக, பியூர் கெமிக்கல்ஸ் குழுமம் ஓங்கி உயர்ந்து வளர்ந்துள்ளது.

தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்கான கெமிக்கல்ஸ் பிரிவு மற்றும் தனித்துவம் வாய்ந்த சிறப்பு இரசாயனங்கள் தயாரிப்புப் பிரிவு ஆகியன Pharma, Automobiles, Agro-chemicals, Textiles, Leather, Paints, Coatings, Polymers, Sugar, Lubricants, Engineering, Water Treatment, Paper உட்பட அனைத்து வகையான தொழிற்சாலைகளுக்குத் தேவையான இரசாயனப் பொருட்களைத் தயாரித்து அனுப்புகின்றன. இக்குழுமத்தின் Kandala SEZ Facility பிரிவு இலங்கை, பங்களாதேஷ், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளுக்கு, இரசாயனப் பொருட்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்கின்றது. இக்குழுமத்தின் Logistics பிரிவு, போக்குவரத்து 3 PL, Customs Clearing ஆகியவற்றிற்கான தீர்வுகளைத் தருகிறது.

உலகெங்கிலும் உள்ள Fortune 500 நிறுவனங்களுள் உள்ள இரசாயனத் தயாரிப்பு தொழிற்சாலைகளுக்குத் தேவையான இரசாயனப் பொருட்களை வாங்குவதற்கு, பியூர் கெமிக்கல்ஸ் குழுமம், மிகவும் விரும்பி அணுகும் வகையில் முன்னணியில் உள்ளது. CHEMEXCIL எனும் உயர் அமைப்பு, பியூர் கெமிக்கல்ஸ் குழுமத்தை மிகச் சிறந்த ஏற்றுமதியாளர் என அங்கீகரித்து “Trishul Award” எனும் மிக உயரிய விருதை வழங்கியுள்ளது.

ஒரு தொண்டு நிறுவனத்தைப் பெரிய அளவில் தொடங்கிச் சமூக மற்றும் சமுதாயச் சேவையில் தன்னை மிகுந்த அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்திக்கொண்டுள்ளார். இடது கை கொடுப்பது வலது கைக்குத் தெரியாது என்பது திரு.பொன்னுசுவாமி அவர்களுக்கு முற்றும் பொருந்தும். சிறிதும் விளம்பரமின்றி, ஏழை எளியோருக்கும், மாணவ மணிகளுக்கும், தன்னை நாடி வந்தோர்க்கும் பலவகையிலும் எண்ணற்ற உதவிகளைச் செய்துள்ளார். பல அறக்கட்டளைகளுக்குப் பெருமளவில் நிதியுதவி புரிந்துள்ளார். எண்ணற்ற ஆரம்பப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளிகளுக்கான கட்டமைப்பு மற்றும் அவசியத் தேவைகளுக்குப் பெருமளவில் உதவி செய்துள்ளார். இந்த வகையில் தொலைதூரமுள்ள, வசதியற்ற அரசு மேல்நிலைப்பள்ளி ஒன்றைத் தத்தெடுத்து, தனது அறக்கட்டளை மூலமாகப் பல்வேறு வசதிகளைச் செய்துள்ளார். ஏழை மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை, ஆண்டுக் கல்விக்கட்டணத் தொகை போன்றவை வழங்கி அவர்கள் முன்னேற்றத்திற்கும் உயர்கல்வி கற்பதற்கும் உதவிகளை வழங்கி வருகின்றார்.

பியூர் கெமிக்கல்ஸ் குழும நிறுவனர், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக உள்ள இவர், தன்னுடைய நிறுவனங்கள் மட்டுமின்றி, சிறு குறு தொழிற்சாலைகள் பலவற்றிற்கும்

விபத்துப் பற்றி விழிப்புணர்ச்சியூட்டியும், இரசாயனப்பொருள்களை எவ்வாறு கையாள்வது என்பது பற்றித் தக்க பயிற்சியளித்தும் தேவையான நடவடிக்கைகளைச் சீரிய முறையில் எடுத்து வருகின்றார். 2000ஆம் ஆண்டு மத்திய அரசின் Central Board of Direct Taxes, 1994-1999 ஆம் ஆண்டுகளில் மிக அதிகமாக, வருமான வரி கட்டியவர் என்பதற்காக, இவருக்கு 'Rashtriya Samman Patra' எனும் விருது வழங்கியது என்பது மிகவும் பெருமைக்குரியது. 2010 ஆம் ஆண்டு CII அமைப்பு இவரை, 'வளர்ந்து வரும் தொழில் முனைவோர்' எனப் பாராட்டியது.

குஜராத் மாநிலத்தில் உள்ள காண்டலா துறைமுக அறக்கட்டளை (KPT) யின் அறங்காவலராக 2004–2008 ஆம் ஆண்டுகளில் பொறுப்பேற்று, சிறப்புறப் பணியாற்றினார். தற்போது தமிழ்நாடு மாநில கவுன்சில், Confederation of Indian Industry (EII) எனும் உயரிய அமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்புரிந்து வருகின்றார். தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் பல அரிய யோசனைகளைத் தமிழக முதல்வருக்கும், உயர் அலுவலர்களுக்கும் வழங்கியுள்ளார். தற்போது தமிழ்நாடு Dr.MGR மருத்துவப் பல்கலைக்கழகத்தின் செனட் உறுப்பினராக உள்ளார். 1961ஆம் ஆண்டு மனோரஞ்சிதம் எனும் மங்கை நல்லாளை மணம் புரிந்தார். திரு.பொன்னுசுவாமி அவர்களின் வெற்றிகளுக்கும் சாதனைகளுக்கும் பெருந்துணையாய் விளங்கி மனோரஞ்சித மணம் கமழ இல்லறத்தை நல்லறமாக நடத்துபவர் இவர்.

இந்தத் தம்பதியருக்கு திரு. எம்.பி.சூர்யபிரகாஷ் B.E., Chemical (Hons), M.Sc., (Hons) Economics, திரு.எம்.பி.இலட்சுமிபதி B.E., (EEE) ஆகிய இரு மகன்கள் உள்ளனர். திரு.சூர்யபிரகாஷ் மனைவி பெயர் திருமதி நித்யஸ்ரீ. இளைய மகன் திரு.இலட்சுமிபதியின் மனைவி பெயர் திருமதி சுஸ்மிதா. இவர் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச்செயலாளரும், சங்கத்தின் முன்னாள் செயலாளருமான திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் – திருமதி நளினி ஆகியோரின் மகளாவார். இரண்டு மகன்களும் தந்தைக்குத் துணையாக, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றனர்.

வியத்தகு எளிமை, மனிதநேயத் தொண்டு, ஈத்துவக்கும் பண்பு, தொழிலில் வல்லமை, சீரிய தலைமைப் பண்புகள், சமுதாயத்திற்கும் சமூகத்திற்கும் சேவைகள், அயரா உழைப்பு என அருங்குணங்கள் பலவற்றை ஒருங்கே கொண்டு, தொழில் துறையில் மாபெரும் சாதனைகள் புரிந்து, கொங்குச் சமுதாயத்திற்குப் பெரும் பெருமை சேர்த்துள்ள திரு.எம்.பொன்னுசுவாமி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு மாமணி' எனும் விருது வழங்கிப் பெருமை கொள்கிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. என்.துரைசாமி கவுண்டர்

கோவை மாவட்டம் சோமனூர் அருகில் உள்ள கோம்பக்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. M.நாதண்ண கவுண்டர் - திருமதி N.ராயம்மாள் தம்பதியரின் மகனாக 1953 ஆம் ஆண்டுப் பிறந்தவர், திரு.N.துரைசாமி கவுண்டர்.

இவர் பள்ளிக்குச் சென்று படித்தது நான்காவது வகுப்பு வரை மட்டும்தான். ஆனால் தன்னம்பிக்கை, கடின உழைப்பு, விடா முயற்சி முதலானவற்றை முதலீடாகக் கொண்டு, 1980 ஆம் ஆண்டு தந்தையிடம் இருந்து தொழிற் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவர் பொறுப்பேற்கும் போது 8 விசைத்தறிகள் மட்டுமே இருந்தன. இன்று சோமனூரில் உள்ள இவரது 'பாலசுப்பிரமணியா டெக்ஸ்டைல்ஸ்' நிறுவனம் 88 நவீன சுல்சர் தறிகளுடன் பெரிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. இந்த வெற்றிக்குக் காரணம் இவருடைய நேர்மை, நிர்வாகத் திறன் மற்றும் முறையான தொழிற்பயிற்சி போன்றவை.

தொழிலில் வெற்றி பெற்று வளர்ச்சி பெற்றவுடன் பொதுப்பணி, சமூக சேவை, சமுதாயச் சேவை, ஆன்மிகச் சேவை ஆகியவற்றில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, தன்னை வளர்த்துவிட்ட சமுதாயத்திற்குத் தன் கடனைத் திருப்பிச் செலுத்தும் வகையில் தொண்டுகள் ஆற்றிவருகின்றார்.

1996 ஆம் ஆண்டு சின்ன அய்யன் கோவில் நற்பணியில் தன்னை இணைத்துக் கொண்டு, ஒரு மேடை மேல் இருந்த சின்ன அய்யனை, 2001ஆம் ஆண்டு சிறப்பாக ஆலயம் அமைத்திட முடிவு செய்து பணியைத் தொடங்கினார். 2011ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாகச் செய்து இன்று வரை அனைத்துப் பூஜைகளும் சிறப்புடன் நடைபெற இவர் முக்கியக் காரணமாவார்.

இச்சிப்பட்டி கிராமம், சிங்கப்பூர் நகர் அருகில் புறம்போக்கில் குடிசை போட்டு வசித்து வந்த ஏழை மக்கள் 2003இல் பட்டா பெறக் காரணமாவார். அப்பகுதி மக்கள்

வழிபாடு செய்ய மாகாளியம்மன் கோவில் அமைத்து 01/02/2014 தேதியில் கும்பாபிஷேகம் தலைமை வகித்து நடத்தினார்.


அரசியல் பணியை 1972 ஆம் ஆண்டு ADMK கட்சியில் இணைந்து செய்து வந்தவர், 2008 ஆம் ஆண்டு தனது சமுதாயத்திற்காகக் கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையில் இணைந்து பணியாற்றினார். மிகச் சிறப்பான கருமத்தம்பட்டி அரசியல் எழுச்சி மாநாடு 15/02/2009 தேதியில் நடைபெற்ற பொழுது நிதிக் குழுத் தலைவர் பொறுப்பேற்று மாநாடு சிறப்படைய பணி புரிந்தார்.

இவருடைய திருமணம் 1978ஆம் ஆண்டு நடைபெற்றது. மனைவி பெயர் திருமதி டி.கிருஷ்ணவேணி. இத்தம்பதியருக்கு ஒரு பெண், இரண்டு ஆண்கள் உள்ளனர். பெண் திருமதி சங்கீதா. திரு.கிருஷ்ணகுமார், திரு.பாலசுப்பிரமணி ஆகியோர் மகன்கள். மூவருக்கும் திருமணமாகிவிட்டது. மருமகன் பெயர் திரு.ஆர்.கிருஷ்ணமூர்த்தி. திரு.கிருஷ்ணகுமார் மனைவி பெயர் திருமதி ஜோதிமணி. திரு.பாலசுப்பிரமணி மனைவி பெயர் திருமதி கஸ்தூரிபிரியா. செல்வி அனுபிரியங்கா, செல்வி சஷ்டிகாஸ்ரீ, செல்வி காவ்யவர்ஷினி, செல்வன் நிதர்ஷன், மழலை யுகன் ஆகிய பேரக்குழந்தைகள் உள்ளனர்.

மகன்கள் இருவரும் தந்தையுடனேயே நமது பாரம்பரியமான கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு என்ற பாடல் வரிகளுக்கேற்ப, தொழிலில் சாதனை படைத்துச் சிறப்பாகச் சமுதாயப் பணியாற்றி வருகின்ற திரு.என்.துரைசாமி கவுண்டர் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. எஸ்.ஆர்.சுப்பிரமணியம்

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி செங்கரைப்பாளையம் கிராமத்தில் திரு.அரங்கசாமி கவுண்டர் - திருமதி அம்மணியம்மாள் தம்பதியருக்கு 1952ஆம் ஆண்டு இரண்டாவது மகனாகப் பிறந்தவர், திரு.எஸ்.ஆர்.சுப்பிரமணியம். பூந்துறை காடை குலத்தைச் சேர்ந்த இவர், எம்.ஏ. (வரலாறு) பட்டம் பெற்றவர் ஆவார். எழுத்தாளர், சமுதாயக் காவலர், தொழிலதிபர், சமூகச் சேவையாளர், சொற்பொழிவாளர், வரலாற்று ஆய்வாளர் எனப் பன்முகம் கொண்டுள்ள இவர், சமுதாயத்திற்கு ஆற்றிய பல பணிகளுள் கீழ்க்காண்பவை குறிப்பிடத்தக்கன.

1972ஆம் ஆண்டு கொங்குச் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட நடந்த மாணவர் போராட்டத்தை வழி நடத்தியவர்.

1974இல் பிறப்படுத்தப்பட்டோர் பட்டியலில் கொங்கு வேளாளர் இனத்தைச் சேர்த்ததற்கு அன்றைய முதல்வர் கலைஞருக்குக் கோவையில் நடந்த பாராட்டு விழாவில் இவரின் வரவேற்புரை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

1982ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற கொங்கு வேளாளர் சமுதாய மாநில மாநாட்டின் பொதுச் செயலாளராகப் பங்கேற்றுச் செயலாற்றியது. (பழைய கோட்டை பட்டக்காரர் தலைவராகவும், அருட்செல்வர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவராகவும் அம்மாநாட்டில் பொறுப்பேற்று இருந்தனர்). அம்மாநாட்டில் வெளியிடப்பட்ட மாநாட்டு மலர் இவரால் உருவாக்கப்பட்டது.

2003ஆம் ஆண்டு தீரன் சின்னமலை பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடவும், மணி மண்டபம் கட்டவும் அன்றைய முதல்வர் அம்மா அவர்களின் சீரிய கவனத்திற்குக் கொண்டு சென்று, அனுமதியைப் பெற்றார். அம்மா அவர்களால் விழாவின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட இவர், சிறப்பாகப் பணியாற்றி மாநாட்டு மலரும் வெளியிட்டதை நமது சமுதாயம் பாராட்டி மகிழ்ந்தது.

2014 ஆம் ஆண்டு இவர் எழுதி வெளியிட்டுள்ள "கொங்கு வேளிர் மரபு" என்ற நூலை அனைத்துச் சமுதாயப் பெரியோர்களும், மூத்த ஆதினங்களும், பத்திரிகைகளும் பாராட்டிச் சிறப்பித்தனர். இந்த நூலுக்கு சிலம்பொலி செல்லப்பனார் அளித்த அணிந்துரை, நூலுக்கு மேலும் சிறப்புச் சேர்த்துள்ளது.

<u>இவர் படைத்துள்ள பல நூல்களுள் கீழ்க்காண்பவை குறிப்பிடத்தக்கன :-</u>

1. தண்ணீரைத் தேடி
2. நதிகளின் சங்கமம் (டாக்டர் அப்துல்கலாம் அவர்களால் வெளியிடப்பட்டு, பாராட்டப்பெற்றது).

3. அண்ணா ஓர் அண்ணல்
4. சரங்கள்
5. தேசிய நீர் வளமும் நதிநீர் இணைப்பும் (தமிழ்நாடு அரசால் சிறந்த நூலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சிறப்புப் பரிசும், பாராட்டும் கிடைக்கப் பெற்றது).
6. மெய்ப்பொருள் கண்டேன். (உலகத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்பட்ட நூல்) (இந்திய வரலாறு, மகாத்மாவின் அகிம்சை, குமரப்பாவின் பொருளாதாரம் போன்றவற்றைச் சிறப்பாகப் பேசிய நூல்)
7. நட்சத்திரங்கள் பறிப்போம் (இது ஒரு தன்னம்பிக்கை நூல்) (மலேசிய தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுப் பல பரிசுகளைப் பெற்றது.)
8. அன்புத் தவம் செய்யும் அறிஞர் (கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களின் குடும்ப வாரிசுகள் பற்றிய நூல்)
9. தாய் வீடு எம்.ஜி.ஆர். (தமிழ்நாடு அரசின் பரிசு பெற்ற நூல்)
10. நதிகளின் பிரச்னை (பல பரிசுகளைப் பெற்ற நூல்)
11. Springs of Life (மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, துபாய் போன்ற நாடுகளில் உள்ள தமிழர்களால் பாராட்டப்பெற்ற நூல்)

திரு.எஸ்.ஆர்.சுப்பிரமணியம் பல மாநாடுகளை முன்னின்று நடத்தியுள்ளார். 1974 ஆம் ஆண்டு கோவை மாநாடு, 1982ஆம் ஆண்டு சமுதாய மாநாடு, 1984 ஆம் ஆண்டு பேரூர் ஆதினம் இராமசாமி அடிகளார் வெள்ளிவிழா மாநாடு, 1987 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்கள் மாநாடு, மலேசியா, 2003 தீரன் சின்னமலை விழா, 2017 ஆம் ஆண்டு உலகத் தமிழ் எழுத்தாளர்கள் மாநாடு ஆகியன இவர் பொறுப்பேற்று, சிறப்பாக நடத்தப்பட்ட மாநாடுகள் ஆகும்.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென் ஆப்பிரிக்கா, நமீபியா, அங்கோலா, துபாய் முதலான வெளிநாடுகளுக்குச் சென்று வந்துள்ள இவர், தமிழ் இலக்கியத்திற்கும், சமுதாயத்திற்கும் ஆற்றியுள்ள தொண்டுகளுக்காகவும், புரிந்துள்ள சேவைகளுக்காகவும் பல விருதுகளைப் பெற்றுள்ளார். அவற்றுள் டெல்லி தமிழ்ச் சங்கம் விருது, துபாய் தமிழ்ச் சங்கம் விருது, உலகத் தமிழ்ச் சங்கம் (மதுரை) விருது, கொங்குத் தோன்றல் (பேரூர் அடிகளார் விருது), கே.எம்.எஸ்.டெல்லி விருது, சிறந்த எழுத்தாளர் விருது (தமிழ்நாடு அரசு), மலேசியா தமிழ்ப் பல்கலை விருது ஆகியன குறிப்பிடத்தக்கன.

இவருடைய மனைவி திருமதி பத்மா சுப்பிரமணியம்தான், இவருடைய வளர்ச்சிக்கும், தொண்டுகளுக்கும், சாதனைகளுக்கும் முக்கியக் காரணமாகத் திகழ்கின்றார். இத்தம்பதியருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். மூத்த மகன் திரு. ஆர்.எஸ்.அருண், B.E., ஈரோட்டில் Arun Construction எனும் நிறுவனத்தைத் திறம்பட நடத்தி வருகிறார். இவருடைய மனைவி திருமதி சண்முகப்பிரியா M.Com. இளைய மகன் திரு. S.ஆனந்த் B.Tech., UK ல் TCS நிறுவனத்தில் திட்ட மேலாளராய்ப் பணியாற்றி வருகிறார். இவருடைய மனைவி திருமதி சண்முகப்பிரியா B.E.,

நமது சமுதாயத்திற்கும், தமிழ் இலக்கியத்திற்கும், நாட்டிற்கும் பல்வேறு துறைகளில் ஆற்றியுள்ள மிகச் சிறப்பான பணிகளைப் பாராட்டி, திரு.எஸ்.ஆர்.சுப்பிரமணியம் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு சாதனையாளர்" விருது அளித்து மகிழ்கிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. டி. குழந்தைவேலு

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், வெண்ணந்தூர் அருகில் உள்ள நாச்சிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. திருமலை கவுண்டர் - திருமதி அத்தாயி தம்பதியினரின் மகனாக 1955 ஆம் ஆண்டுப் பிறந்தவர், திரு. T.குழந்தைவேலு

பண்ணை குலத்தைச் சார்ந்த இவர் தமது பள்ளிப் படிப்பைக் கருப்பூர் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் முடித்தார். 1977 ஆம் ஆண்டு பொள்ளாச்சி நாச்சிமுத்து கவுண்டர் பாலிடெக்னிக் கல்லூரியில் DME முடித்தார்.

பின்னர், பொதுப்பணித்துறையில் மூன்று ஆண்டுகள் பொறியாளராய்ப் பணியாற்றினார். தந்தை காலமாகிவிட்டதால், அரசுப்பணியைத் துறந்து குடும்பப் பொறுப்பையும் விவசாயத்தையும் கவனித்து வந்தார். அதே சமயம் அரசுத்துறையில் ஒப்பந்ததாரராகப் பதிவு செய்து, கட்டடப் பணிகளையும், சாலைப் பணிகளையும் ஒப்பந்தம் பேரில் செய்யத் தொடங்கினார்.

1993 ஆம் ஆண்டு தொழில் முன்னேற்றத்திற்காக, சேலத்திற்குக் குடிபெயர்ந்தார். கடின உழைப்பாலும், தொழில் திறமையாலும், தலைமைப் பண்புகளாலும் படிப்படியாக உயர்ந்து தற்போது சேலத்தில் அஷ்வா பார்க் ஹோட்டல் தலைவராகவும், TK & Co., Construction எனும் நிறுவனத்தின் தலைவராகவும், T.K.Bharat Gas நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகவும், இராசிபுரத்தில் உள்ள ஸ்ரீ ராசி மஹால் எனும் திருமண மண்டபத்தின் பங்குதாரராகவும் பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றார்.

நெடுஞ்சாலை, கட்டடங்கள் அரசு ஒப்பந்ததாரராக, தரமான சாலைகள், கட்டடங்கள் பலவற்றை உருவாக்கியுள்ளார். தனது அயராத உழைப்பால் ஒப்பந்தத் தொழிலில் உயர்ந்து, நல்ல வளர்ச்சியடைந்துள்ளார்.

1997 இல் சேலத்தில் ‘கொங்கு சமுதாய நலச் சங்கம்’ என்ற ஒரு சங்கத்தை உருவாக்கி, அதன் செயலாளராக 12 ஆண்டுகள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்தார்.

சங்கத்திற்குச் சொந்தமாக ஒரு கட்டடம் வாங்கியது, சங்க உறுப்பினர்கள் விவரம் கொண்ட குடும்ப மலரை வெளியிட்டது, ஏழை மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கியது முதலானவற்றில் இவருடைய பங்கு மிக அதிகம். பல ஏழைக் குழந்தைகளுக்கு மேற்படிப்பு படிக்க, கல்வி உதவித்தொகை, கோவில் திருப்பணிகளுக்குத் தாராள நிதி உதவி போன்றவை இவரால் வழங்கப்பட்டன.

இவரது உழைப்பையும் சாதனைகளையும் பாராட்டி இவர் பயின்ற நாச்சிமுத்துக்கவுண்டர் பாலிடெக்னிக் கல்லூரியின் பொன்விழாவில் "Jewal of NPTC" என்ற விருது இவருக்கு 2007ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. மேலும் 2009 ஆம் ஆண்டு சென்னையில் செயல்பட்டு வரும் "South India Social and Cultural Academy" சார்பில் இவருக்கு "சேவா ரத்னா" விருது வழங்கப்பட்டது.

இவரது குல தெய்வமான "ஸ்ரீ பண்ணையம்மன்" திருக்கோவில் கொங்கு நாட்டுவேளாளர் அறக்கட்டளைத் தலைவராக 2014 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

1980 ஆம் ஆண்டு இவருக்குத் திருமணம் நடைபெற்றது. மனைவி பெயர் திருமதி சாந்தி. மகன் திரு.மணிகண்டன் M.E., MBA., தந்தைக்கு உதவியாகக் குடும்ப நிறுவனங்களைக் கவனித்து வருகிறார். மருமகள் திருமதி நித்தியா. மகள் திருமதி சரண்யா. செல்வன் அஸ்வதி, ஆதிஸ், செல்வி பிரதிக்ஷா ஆகியோர் இவருடைய பேரக்குழந்தைகள்.

பொறியாளர், ஒப்பந்ததாரர், ஹோட்டல் உரிமையாளர், திருமண மண்டபம் பங்குதாரர், ஆன்மிகவாதி, சமுதாயச் சேவையாளர், தொழிலதிபர் எனப் பன்முகங்கள் கொண்டுள்ள இவர் எளிமைக்கும், உழைப்பிற்கும், சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார்.

உழைப்பால் உயர்ந்து, தொழிலில் வியத்தகு சாதனைகள் படைத்துள்ளதோடு, மிகச் சிறந்த வகையில் பலரும் போற்றும் வகையில் சமுதாயப் பணியாற்றி வருகின்ற திரு. T.குழந்தைவேல் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. சி.சண்முகன்

ஈரோட்டில் திரு.எம்.சின்னப்ப கவுண்டர் – திருமதி விசாலாட்சி ஆகியோருக்கு நான்காவது மகனாக 1960ஆம் ஆண்டுப் பிறந்தவர், திரு.சி.சண்முகன். இவரது மனைவி திருமதி எஸ்.காயத்ரிதேவி. மகன் சி.எஸ்.விக்ரம்குமார், பி.இ. பட்டதாரி.

1982 இல் ஈரோடு, சூரம்பட்டியில் Sun Brand இரும்புச் சட்டி தயாரிக்கும் தொழிலை ஆரம்பித்து இன்று தமிழ்நாடு, கேரளா மாநிலங்களில் உள்ள ஹார்டுவேர்ஸ், கட்டட ஒப்பந்ததாரர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இந்த இரும்புச்சட்டியைச் தயாரித்து வினியோகிக்கின்றார்.

இந்தத் தொழிலில் சுமார் 100 பேர் போட்டியாளர்களாக இருக்கின்றனர். தனி ஒரு மனிதனாக அரசுக்குக் கோரிக்கை வைத்துப் போராடி விற்பனை வரியில் விலக்கு பெற்று, இந்தத் தொழிலுக்குப் பெருமை சேர்த்தார். ஈரோடு மற்றும் சென்னையில் காயத்ரி ஸ்டீல்ஸ் என்ற பெயரில் Iron and Steels வியாபாரம் பெரிய அளவில் செய்து வருகிறார். சைனா, ஜப்பான், மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து இரும்புப் பொருட்கள் இறக்குமதி செய்து சிறப்பான முறையில் தொழில் செய்து வருகிறார்.

1981 லிருந்து இவர் கல்விப்பணியில் ஈடுபட்டு வருகின்றார். ஆரம்பத்தில் ஜெய்சீஸ் பிறகு அரிமா சங்கம் போன்ற தொண்டு நிறுவனங்களில் முழு ஈடுபாட்டுடன் சமூகப் பணியைத் தொடங்கினார். அதன் பிறகு 1989இல் கொங்கு மெட்ரிகுலேசன் பள்ளியை நம் சமுதாயத்தைச் சேர்ந்த சுமார் 100 பேர் சேர்ந்து தலா ரூ.1,000/– முதலீட்டில் ஆரம்பித்தார்கள். அந்தப் பள்ளியில் சுமார் 3000 மாணவ, மாணவியர்கள் கல்வி கற்று வருகிறார்கள். இன்று வரை அப்பள்ளி 10ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு இறுதித் தேர்வுகளில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்று வருகிறது. இந்தக் கல்விக் கோயிலுக்கு இவரது பங்கு மகத்தானது என்பது பெருமைக்குரியது. இன்று அதன் மதிப்பு சுமார் ரூபாய் 50 கோடியாகும்.

ஈரோடு மாவட்டச் சிறுதொழில் சங்கத்தில் (EEDISSIA) முழு ஈடுபாடு கொண்டு அந்தச் சங்கத்திற்குச் சொந்தமாக ஒரு கட்டிடத்தை இவர் தலைவராக இருந்த காலத்தில் கட்டி முடித்தார். சுமார் 1000 சிறு தொழில் அதிபர்கள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இவர் தலைவர் பதவி ஏற்றது முதல் இன்று வரை வருடத்திற்கு சுமார் 1500 புதிய தொழில் முனைவோர்களுக்குச் சிறப்பான பயிற்சி அளித்து, தொழிலை மிகச் சிறப்பாக நடத்த உதவி வருகின்றார். மேலும் தற்போது சுமார் 6.5 கோடி ரூபாயில் சங்கத்திற்குப் புதியதாகக் கட்டிடம் கட்டுவதற்கு உண்டான வேலையில் ஈடுபட்டுள்ளார்.

பில்லன் கூட்டத்தைச் சேர்ந்த இவர், எடுத்த காரியத்தை முடிப்பதில் வல்லவராக விளங்குகிறார். ஈரோடு மாவட்டம், முத்தூருக்கு அருகில் அமைந்துள்ள பொன்அழகுநாச்சியம்மன் திருக்கோயிலுக்காக, சென்னையிலிருந்து 10 ஆண்டுகள் சனி, ஞாயிறு என இரண்டு தினங்களில் ஈரோடு சென்று நம் சமுதாயப் பெரியவர்களின் மூலம் சுமார் ரூ.10 கோடி செலவில் மாந்தீஸ்வரர் கோயில், பெருமாள் கோயில், பொன்அழகுநாச்சியம்மன் கோயில் ஆகிய கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் நடத்தி முடித்ததில் மிக முக்கியப் பங்காற்றி உள்ளார்.

இந்த ஆன்மிகக் கோயில்களுக்கு உதவியதில் இவரது பங்கு போற்றத் தக்க வகையில் பல வகையிலும் அமைந்தது. சமுதாயப் பற்று மிக்க இவர் கொங்கின மக்களுக்கு இயன்ற வரையில் உதவிகள் புரிந்து வருகின்றார்.

தன்னம்பிக்கை, கடின உழைப்பு, தொழிலில் ஆற்றல் மற்றும் சீரிய நிர்வாகம் போன்ற அருங்குணங்களைக்கொண்டு தொழில்துறை மற்றும் சமுதாயப் பணியில் சிறந்து விளங்கிச் சாதனைகள் படைத்துள்ள திரு.சி.சண்முகம் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், கொங்கு சாதனையாளர் விருது கொடுத்தது, ''பத்ம பூஷன்'' விருது பெற்றதைப் போல் மனம் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்துக்கொள்கிறார் இவர்.

# கொங்கு சாதனையாளர்



## திரு. கே.பி.அளகேசன்

திரு.கே.பி.அளகேசன் அவர்கள் 1959 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், பச்சாம்பாளையம் கிராமம், கந்தாம்பாளையம் என்னும் சிற்றூரில் பிறந்தார். தெய்வத்திரு.ஜி.பொன்னுசாமி B.A., B.T., – தெய்வத்திரு. ராசம்மாள் (எ) தனலட்சுமி ஆகியோரின் மூத்த மகன் இவர்.

இவர் தம் பள்ளிப் படிப்பு எடப்பாடி அருகே உள்ள சிலுவம்பாளையம் என்னும் சிற்றூரில் தொடங்கியது. பின்னர், அந்தியூர் கிழக்குப் பள்ளி, நம்பியாம்பாளையம் பள்ளி, ஆலாம்பாளையம் உயர்நிலைப்பள்ளி, இறுதியாக கணபதிபாளையம் உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் படித்துப் பள்ளிப் படிப்பை முடித்தார்.

1975ஆம் ஆண்டு P.U.C.படிப்பை ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரியிலும், 1977 முதல் 1980 வரை B.A., பட்டப்படிப்பை ஈரோடு ஸ்ரீவாசவி கல்லூரியிலும், 1980 முதல் 1982 வரை M.A., மேற்படிப்பைச் சென்னை மாநிலக் கல்லூரியிலும் வெற்றிகரமாக முடித்தார். பின்னர், குமாரபாளையம் கல்வியியல் கல்லூரில் சேர்ந்து படித்து B.Ed., பட்டம் பெற்றார். அதே நேரத்தில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் Diploma in Labour Law and Administrative Law பெற்றார். 1983ஆம் ஆண்டு ஈரோடு பள்ளிப்பாளையம் Ponni Sugars and Chemicals நிறுவனத்தில் Personnel Department ல் உதவியாளராகப் பணியில் சேர்ந்தார். 1985 ஆம் ஆண்டு திருச்செங்கோடு வட்டம் கொல்லப்பட்டியைச் சேர்ந்த திரு.இராமசாமி – தெய்வத்திரு. அருக்காணியம்மாள் ஆகியோரின் மகள் வசந்தியைத் திருமணம் செய்து கொண்டார்.

1987ஆம் ஆண்டு பொள்ளாச்சி சக்தி நிறுவனத்தின் ஒரு துணை நிறுவனமான Anamallais Engineering (P) Ltd., என்னும் பஸ் பாடி கட்டும் தொழில் நிறுவனத்தில் Asst. Personnel Officer ஆகப் பணியில் சேர்ந்தார். அதன் பின்னர், படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று அதே நிறுவனத்தில் Personnel Manager ஆகப் பணிபுரிந்தார். 1994ஆம் ஆண்டு தன் பணியிலிருந்து விலகிய இவர், தம் கல்லூரி நண்பர்கள் ஈரோடு நகரைச் சேர்ந்த திரு.கைலாசபதி, திரு.இராதாகிருஷ்ணன், திரு.பொன்னுசாமி ஆகியோருடன் சேர்ந்து வெல்டிங் ராடுகளைத் தமிழகம் முழுவதும் மொத்தமாக விற்பனை செய்ய A.V.Distributers என்னும் நிறுவனத்தைத் தொடங்கினார். 1997ஆம் ஆண்டு அதே


கல்லூரி நண்பர்களின் உதவியுடன் வெல்டிங் ராடுகள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தைச் சொந்தமாகத் தொடங்கினார். அதற்கு மெகா என்று பெயரிட்டு, இவர்கள் உற்பத்தி செய்து வரும் பொருள்களான M.S.Welding Rods, Stainless steel Welding Rods மற்றும் Cast iron welding Rods ஆகியவற்றை, தமிழகம், கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் விற்பனை செய்துவருகின்றனர். இந்நிறுவனத்தில் நூற்றுக்கணக்கான பேருக்கு வேலை வாய்ப்பை நல்கியுள்ளார்.

இவருக்கு ரமா (எ) மோனிஷா என்ற மகளும், முகேஷ் என்னும் மகனும் உள்ளனர். மகள் ரமா (எ) மோனிஷா B.B.M., மற்றும் M.B.A., பட்டங்கள் பெற்றுள்ளார். இவருடைய கணவர், பவானி திப்பிச்செட்டிபாளையத்தைச் சேர்ந்த Frontier Processing Mills நிறுவனத்தின் உரிமையாளர் திரு. ஆர்.பழனிச்சாமி – திருமதி பத்மாவதி ஆகியோரின் மகன் திரு.பி.எஸ்.பிரபுராகவன் M.F.M. (NIFT). இத்தம்பதியருக்கு பி.ஆர்.ஷனன்யா என்னும் மகள் உள்ளார். மகன் ஏ.முகேஷ் தன் பொறியியல் படிப்பை சென்னை SSN கல்லூரியில் முடித்தார். பின்னர் University of Technology, Sydney யில் மேற்படிப்பு முடித்து, தற்போது அங்கேயே பணிபுரிந்து வருகிறார். திரு.அளகேசன் கொங்குச் சமுதாயத்தின் மீது உள்ள ஈடுபட்டால் 1982ஆம் ஆண்டு காலிங்கராயன்பாளையத்தில், கொங்கு வேளாளக் கவுண்டர்கள் சங்கத்தை உருவாக்கி அதற்குத் தலைமை ஏற்றார். தற்போது கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினராகவும் உள்ளார்.

மேலும் இவர், கோவையில் பிரபலமான மூளை மற்றும் தண்டுவட அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் கே.மாதேஸ்வரன், இருதய சிகிச்சை நிபுணர் டாக்டர் கே.சொக்கலிங்கம் ஆகியோருடன் இணைந்து கோவையில் 750 படுக்கை வசதிகள் கொண்ட ராயல் கேர் சூப்பர் ஸ்பெசாலிட்டி மருத்துவமனையைத் தொடங்கி அனைத்துத் துறையிலும் பிரபலமான மருத்துவர்கள் மூலம் தரமான, நிறைவான சிகிச்சை அளித்து வருகிறார்கள். தற்போது கோவையில் குடியிருந்து வரும் இவர் சாத்தந்தை குலத்தைச் சேர்ந்தவர். குலதெய்வக் கோவில் வெள்ளோடு இராசாக் கோவில் ஆகும். ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து இன்று தமிழகத்தில் பெயர் சொல்லக்கூடிய நிறுவனத்தின் Managing Partner ஆகவும், சிறந்த மருத்துவமனையான Royal Care Super Speciality Hospital Ltd., Coimbatore இன் இயக்குநராகவும், பொறுப்பேற்று, மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

முயற்சி திருவினையாக்கும், உழைப்பு உயர்வு தரும் என்ற பொன் மொழிகளைக் கடைப்பிடித்து எளிமை, மனிதநேயம், கடின உழைப்பு, மனஉறுதி, போன்ற அருங்குணங்களை ஒருங்கே பெற்றுத் தொழில் துறையில் சாதனைகள் படைத்துவரும் திரு.கே.பி.அளகேசன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. பொ. இராஜராஜன்

ஈரோட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற முதன்மைக் கல்வி அலுவலர் திரு.எஸ்.பொன்னுசாமி – திருமதி பி.ஜெயலட்சுமி தம்பதியருக்கு 1957ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் திரு.பி.இராஜராஜன் அவர்கள். இவர் பள்ளிப்படிப்பை உடுமலை, அமராவதி நகர் சைனிக் பள்ளியில் முடித்தார். பின்னர், திருச்சி ரீஜனல் எஞ்சினியரிங் கல்லூரியில் படித்து B.E., (Elec) பட்டம் பெற்றார்.

1979 ஆம் ஆண்டு படிப்பு முடித்தவுடன் ஈரோட்டில் 10000/– ரூபாய் முதலீட்டில் இவருக்குத் தனது சித்தப்பா டாக்டர் எஸ்.காளியண்ணன் அவர்கள், பிரப் ரோட்டில் ஒரு சிறிய ரேடியோ மற்றும் அயர்ன் பாக்ஸ் ரிப்பேர் செய்யும் கடை ஆரம்பித்துக் கொடுத்தார். பின்னர் மோட்டார் ரீவைண்டிங் தொழிலையும் செய்தார்.

தன் குடும்பத்தார், இவரது மனைவியின் அக்கா மற்றும் தம்பி குடும்பத்தார் அனைவரும் இந்தத் தொழிலில் ஈடுபட்டு ஒரே குடும்பமாக வாழ்ந்து கொண்டு சிறப்பான முறையில் முன்னேறி உள்ளார்கள்.

இன்று இவர்களது நிறுவனத்தில் பத்து லட்சம் HP மோட்டார் & ஜெனரேட்டர் ரிப்பேர் செய்கின்றார்கள். இதுபோக, இதற்குத் தேவையான காயில்களைச் செய்து வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்கிறார்கள். இவர்களது நிறுவனத்தில் தற்போது சுமார் 350 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

Bouncing Board மற்றும் ஒளிரும் ஈரோடு என்ற அமைப்புகளில் இணைந்து, முடிந்த அளவிற்குப் பலரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவி செய்து வருகின்றார். இவருடைய மனைவி பெயர் திருமதி கிருஷ்ணவேணி. இத்தம்பதியருக்கு

கே.ஆர்.ராஜ்குமார் B.Ed., (Electrical) M.Sc., (IB) - UK எனும் மகன் உள்ளார். மருமகள் திருமதி தங்கம் சுஜித்தா B.Sc., (Bio-Tech) M.Sc., (IB). தாரா ராஜ்குமார், உத்ரா ராஜ்குமார் என்ற இரு மழலை பேத்திகள் உள்ளனர்.

கொங்குச் சமுதாயத்தில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த குடும்பங்கள், காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப, தற்போது மிகவும் குறைந்துவிட்டன. கணவன், மனைவி, குழந்தைகள் எனக் குடும்பம் மிகவும் சுருங்கிவிட்டது. அதிலும் குழந்தைகள் மேற்படிப்பு மற்றும் வேலை நிமித்தமாக, பெற்றோரைப் பிரிந்து வாழ்கின்ற சூழ்நிலை உள்ளது. இத்தகைய சூழலில் திரு.இராஜராஜன் அவர்களின் குடும்பம், கூட்டுக்குடும்பமாக உள்ளது மிகவும் பாராட்டுக்குரியது.

மாதா, பிதா, குரு தெய்வம் என்ற வாக்கிற்கிணங்க தாம் படித்த அமராவதி சைனிக் பள்ளி ஆசிரியர்கள் பலரையும், தமது மகன் திருமணத்திற்கு நேரில் சென்று அழைத்து வந்து அவர்களிடம் ஆசி பெற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாமல், அவர்களையும் பெருமைப்படுத்திய செயல் அவரது போற்றுதலுக்குரிய பண்பை எடுத்துக்காட்டுவதாகும்.

மிகச் சிறிய அளவில் தொழில் ஆரம்பித்து, தனது அயரா உழைப்பு, தொழில் நேர்மை, தன்னம்பிக்கை, விடா முயற்சி, குடும்பத்தார் ஒற்றுமை ஓங்கச் செய்தல். பிறர்க்குதவி செய்யும் ஆவல் முதலான அரும்பண்புகள் கொண்டு, தொழில்துறையில் சாதனை படைத்துள்ள திரு.பி.இராஜராஜன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. வி.அசோக் ராம்குமார்

சரியான நேரத்தில் தயாரிப்புகளின் சரியான தரம் மற்றும் விலையை உறுதி செய்வது, பணியாளர்களுக்கும், சமுதாயத்திற்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்குவது என்ற உயர்ந்த தொலைநோக்குப் பார்வையோடு, வீட்டு உபயோக ஜவுளி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனமாக Asian Fabrics Private Limited 1974 ஆம் ஆண்டு திரு.என்.ஆர்.வெங்கடாச்சலம் அவர்களால் கரூரில் நிறுவப்பட்டது.

தனக்கென்று ஒரு சரியான வாழ்க்கை முறையையும், சமூக மேம்பாட்டிற்கான வணிக நெறிகளையும் வகுத்துத் தன்னோடு நூற்றுக்கணக்கானவர்களின் கனவுகளைச் சுமந்து தன் சுய முயற்சியாலும், கடும் உழைப்பினாலும் வெற்றி கண்டவர் திரு.என்.ஆர்.வெங்கடாச்சலம். இவருடைய மனைவி திருமதி கௌரி. இத்தம்பதியரின் மகன்தான் திரு.வி.அசோக் ராம்குமார் அவர்கள்.

இவர் தன்னுடைய 20ஆம் வயதில் வர்த்தகப் பட்டப்படிப்பை முடித்து, 1995 ஆம் ஆண்டு, நிர்வாக இயக்குநராகப் பொறுப்பேற்று, தன் தந்தையின் துணையோடு தொழில் பயணத்தைத் தொடங்கினார்.

தொலைநோக்குப் பார்வை, தெளிவான சிந்தனை, அயராத உழைப்பு, சிறந்த நிர்வாகத் திறமை, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, வெற்றிபெற வேண்டும் என்ற உத்வேகம் போன்ற அருங்குணங்களை ஒருங்கே கொண்டுள்ளதாலும், தந்தையின் சீரிய வழிகாட்டுதலாலும் ஏசியன் பேப்ரிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை ஆல்போல் தழைக்க வைத்து, அருகு போல் வேரோட வைத்துப் பெரும் வளர்ச்சியைக் காண வைத்துச் சாதனை படைத்தார்.

Asian Fabrics ன் வருடாந்திர விற்பனையை ரூபாய் நானூற்றி ஐம்பது கோடியாகப் பன்மடங்கு வளர்ச்சி அடையச் செய்து, இந்நிறுவனத்தை வர்த்தக உலகில் அதற்கென ஓர் இடத்தைக் கைப்பற்றச் செய்து சாதனை புரிந்தார். தரமான தயாரிப்பு, செயல்முறை

ஒருங்கிணைப்பு, நிறுவன உள்கட்டமைப்பு, சிறந்த தொழில்நுட்பம், திறமையான பணியாளர்கள் எனப் பலதரப்பட்ட விருதுப் பூக்கள் திரு. அசோக் அவர்களின் தலைமையில் பூத்துக் குலுங்குகின்றன.

ஜவுளி உற்பத்தி மட்டுமல்லாது சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிற்காக Green Energy எனச் சொல்லப்படும் சூரிய சக்தி தகடுகள் மற்றும் காற்றாலைத் தொழிலிலும் ஈடுபாட்டுடன் கவனம் செலுத்தி வெற்றி கண்டார்.


இவருடைய மனைவி பெயர் திருமதி வாணி. இத்தம்பதியருக்கு அஞ்சனா என்ற மகளும், ஆதித்யா அசோக் என்னும் மகனும் உள்ளனர். இருவரும் பள்ளியில் படித்து வருகின்றனர்.

திரு. அசோக் அவர்கள் எடுக்கும் எல்லா முக்கிய முடிவுகளிலும் அவரது தந்தை மட்டுமில்லாமல், அவரின் தாயார் திருமதி கௌரி மற்றும் மனைவி திருமதி வாணியும் முக்கியப் பங்களிக்கின்றனர்.

திரு. அசோக் அவர்கள் தொழில் ஈடுபாட்டுடன், சமூக மேம்பாட்டிற்காகவும், தனது தொழிலாளர்களுக்காகவும் பல்வேறு நலத்திட்டங்களைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தியுள்ளார். ஒரு துறையில் பேரார்வமும், ஈடுபாடும், திறமையும், உழைப்பும் இருந்தால், எந்த வயதிலும் சாதனை படைக்கலாம் என்பதற்குச் சிறந்த உதாரணமாக விளங்குகிறார் இவர்.

இளம் வயதிலேயே தொழிற்சாலை நிர்வாகப் பொறுப்பேற்று, தொழில்துறையில் சாதனை படைத்துள்ள திரு.வி.அசோக் ராம்குமார் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் ப.செந்தில்நாதன்

தமிழகத்தின் தலைசிறந்த மருத்துவர்களுள் ஒருவராகத் திகழ்பவரும், கோவை ஜெம் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருமான டாக்டர் எஸ்.பழனிவேலு - திருமதி ஜெயா தம்பதியரின் மகனாக 1975 ஆம் ஆண்டுப் பிறந்தவர், டாக்டர் ப.செந்தில்நாதன். டாக்டர் எஸ்.பழனிவேலு நமது சங்கத்தின் 'கொங்கு மாமணி' விருதைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்' என்ற முதுமொழிக்கேற்ப, மருத்துவத் துறையில் தந்தையை மிஞ்சும் அளவுக்குச் சாதனைகள் புரியத் தொடங்கியுள்ளார், டாக்டர் செந்தில்நாதன்.

கோவை PSG Institute of Medical Science & Research Centre இல் MBBS பட்டம், 2004 ஆம் ஆண்டு கோவை மருத்துவக் கல்லூரியில் M.S., (General Surgery) பட்டம், 2004 ஆம் ஆண்டு கோவை மருத்துவக் கல்லூரியில் DNB (General Surgery) பட்டம், 2005 ஆம் ஆண்டு MRCS தகுதி, 2008 ஆம் ஆண்டு கோவை ஜெம் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் DNB (GI. Surgery) பட்டம், 2011 ஆம் ஆண்டு FACS தகுதி, பின்னர் FMAS மற்றும் FAIS தகுதி என இவருடைய தகுதிகளும், பெற்ற பட்டங்களும் வியக்க வைக்கின்றன.

டாக்டர் செந்தில்நாதன் தற்போது ஜெம் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் HPBLT & MAC துறையின் தலைவராக உள்ளார். மேலும் Asian - Pacific Laparoscopic Hepatectomy Promotion and Development Expert Committee யின் உறுப்பினராகவும், AMASI அமைப்பின் பொருளாளராகவும் பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றார். IHPBA, India அமைப்பின் செயற்குழு உறுப்பினராகவும் உள்ள சிறப்புக்குரியவர் இவர்.

மருத்துவத்துறையில் இவருடைய மிகச் சிறப்பான சேவையைப் பாராட்டியும் சாதனைகளை அங்கீகரித்தும் இவருக்குப் பல உயரிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றுள் டாக்டர் எம்.ஜி.ஆர்.மருத்துவப் பல்கலைக்கழகம் வழங்கிய டாக்டர் ஆசிர்வாத நாடார் நினைவு தங்கப்பதக்கம் (1998), 2008 ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டு யோகோஹாமா நகரில் நடைபெற்ற "14th World Congress of Endoscopic Surgery" மாநாட்டில் வழங்கிய 'Young Investigator Award', National Board of Examinations, New Delhi 2008 ஆம் ஆண்டு நடத்திய இறுதித் தேர்வில் முதலிடம் பெற்றமைக்காக வழங்கப்பட்ட 'Gold Medal in DNB Surgical Gastroenterology', 2014 ஆம் ஆண்டு உலகத்திலேயே முதன்முறையாக, லேப்பரோஸ்கோபிக் அறுவை சிகிச்சையைச் செய்து, அதை நேரடியாக ஒளிப்பரப்பச் செய்த 'First Surgeon' எனும் பெருமைமிகு பட்டம், பிரேசில் நாட்டில் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற அனைத்துலக மாநாட்டில் 'Best Paper Award' என இவருடைய மருத்துவக் கட்டுரை நேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பு முதலானவை இவருடைய பெருமைக்கும் சிறப்புக்கும், சாதனைகளுக்கும் சிறந்த சான்றுகளாகத் திகழ்கின்றன.

Laparoscopic Pancreaticoduo denectomy, Pancrectico - Jejunostomy, Art of Laparospic Surgery ஆகிய இவரின் படைப்புகள் நூலாக்கம் பெற்றுள்ளன.

இந்திய அளவிலும், உலக அளவிலும் நடைபெற்ற முக்கியக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியுள்ளார். எண்ணற்ற மாநாடுகளில் பங்கேற்று, இவர் சமர்ப்பித்த மருத்துவக் கட்டுரைகள் உலக அளவில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

இவருடைய மனைவி பெயர் திருமதி சங்கீத பிரியா. M.B.A., பட்டம் பெற்றவர். இத்தம்பதியருக்கு முகில், சாரல் என இரு குழந்தைகள் உள்ளனர்.

மருத்துவத் துறையில் சாதனைகள் பல படைத்துத் தமிழகத்திற்கும், கொங்குச் சமுதாயத்திற்கும் பெரும் பெருமை சேர்த்துள்ள டாக்டர் ப.செந்தில்நாதன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு சாதனையாளர்" விருது வழங்கிப் பாராட்டுகிறது.

கணவர் டாக்டர் எஸ்.பழனிவேல் 'கொங்கு சாதனையாளர்' மற்றும் 'கொங்கு மாமணி' விருதுகளையும், மூத்தமகன் டாக்டர் ப.பிரவீன்ராஜ் 'கொங்கு சாதனையாளர்' விருதையும், தற்போது இளைய மகன் டாக்டர் ப.செந்தில்நாதன் 'கொங்கு சாதனையாளர்' விருதையும் பெற்றதற்கு முக்கியக் காரணகர்த்தாவாக விளங்கும் திருமதி ஜெயா பழனிவேல் அவர்களுக்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறது.



# கொங்கு சாதனையாளர்



## திரு. கு.இரா.மஞ்சுநாதன்

ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், நம்பியூர் அருகில் உள்ள குட்டிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு.கே.எம்.இராஜேந்திர கவுண்டர் – திருமதி சரஸ்வதி தம்பதியர்க்கு **1985**ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர், திரு.கு.இரா.மஞ்சுநாதன்

B.Tech., பட்டம் பெற்ற இவர், விவசாயத்தில் விரும்பி ஈடுபட்டார். குட்டிப்பாளையம் கிராமத்தில் கொங்குப் பண்பாட்டு மையம் என்ற அமைப்பை ஏற்படுத்தி, சமூக சேவையாற்றி வருவதுடன் கொங்குச் கலாச்சாரம், பண்பாடு, சடங்குகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றையும் அவற்றின் சிறப்புகள் பற்றியும் செல்லுமிடமெல்லாம் எடுத்துரைத்து வருகின்றார்.

நகைச்சுவை ததும்பவும், கேட்போர் சிந்தனையைத் தூண்டுமாறும் பேசுவதில் வல்லவர். சிறந்த மேடைப் பேச்சாளர். அன்றைய கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் போல், சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் கொங்கு நாட்டுப் பண்பாளர். தமிழில் நல்ல புலமை கொண்டுள்ள இவர் ஒரு சிறந்த பட்டிமன்றப் பேச்சாளராக விளங்குகிறார். இதுவரை **4000** மேடைகளுக்கு மேல் பேசியுள்ளார் என்பது இவருடைய திறமைக்குச் சான்றாகத் திகழ்கிறது.

சன் டி.வி. அரட்டை அரங்கம் நிகழ்ச்சியில் 7 முறையும், ஜெயா டி.வி மக்கள் அரங்கம் நிகழ்ச்சியில் **4** முறையும், ராஜ் டி.வி அகடவிகடன் நிகழ்ச்சியில் **5** முறையும், விஜய் டிவி கலக்கப்போவது யாரு நிகழ்ச்சியில் 7 முறையும் பங்கேற்ற சிறப்புக்குரியவர் இவர்.

இவருடைய மனைவி பெயர் திருமதி கே.எம்.இராஜேஸ்வரி. இத்தம்பதியருக்கு கே.எம்.ஆதிரை வேந்தன், கே.எம்.அஸ்விக் ஆகிய இரண்டு மகன்கள் உள்ளனர். ஆதிரை வேந்தன் இரண்டாம் வகுப்பிலும், அஸ்விக் எல்கேஜி வகுப்பிலும் நம்பியூரில் உள்ள காமராசர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் படித்து வருகின்றனர்.

நாட்டுப்புறப் பாடல்களில் அதிக ஈடுபாடு கொண்டவர். எண்ணற்ற நாட்டுப்புறப் பாடல்களை, குறிப்பாக, கொங்கு நாட்டுப்புறப் பாடல்களை நன்கு அறிந்துள்ள இவர், சிறந்த நாட்டுப்புறப் பாடகராகவும் உள்ளார்.

இவருடைய நகைச்சுவை கலந்த சிந்தனையைத் தூண்டும் பேச்சுகளை அங்கீகரிக்கும் வண்ணம் பல பரிசுகளும், விருதுகளும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் 2004 ஆம் ஆண்டு சன் டிவி வழங்கிய "கலக்கல் நாயகன்" பட்டம், தென்னிந்தியத் திரைப்படச் சங்கம் வழங்கிய 'மக்கள் மொழி நாயகன்' விருது, கோவையில் செயல்பட்டு வரும் 'ஈரம்' எனும் அமைப்பு வழங்கிய 'கொங்குச் சிரிப்பு அரசன்' ஆகியன குறிப்பிடத்தக்கன.

நாட்டுப்புறக் கலையிலும், பேச்சுக்கலையிலும் திறமை பெற்றுள்ள இவர் மலேசியா, குவெய்த், துபாய் போன்ற நாடுகளிலும், டெல்லி, மும்பை, கல்கத்தா போன்ற நமது நாட்டின் முக்கிய நகரங்களிலும் உள்ள தமிழ் அமைப்புகளின் அழைப்பையேற்று அங்கெல்லாம் சென்று தனது சிரிப்புடன் கூடிய சிந்தனைப் பேச்சால் அவையைக் கட்டிப்போட்டுச் சாதனை படைத்துள்ளார் என்றால் அது மிகையன்று.

சிந்தனையைத் தூண்டும் நகைச்சுவைப் பேச்சால் சாதனை படைத்துள்ள திரு.கு.இரா.மஞ்சுநாதன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திருமதி எம்.எஸ்.சாமுண்டீஸ்வரி கொங்கரசன்

சேலம் மாவட்டம் மேட்டூர் நகரைச் சேர்ந்த திரு.சாமிதுரை கவுண்டர் - திருமதி சரோஜா தம்பதியரின் மகளாக 1966 ஆம் ஆண்டுப் பிறந்தவர், திருமதி சாமுண்டீஸ்வரி கொங்கரசன் அவர்கள். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சேலம் கண்ணன் இவருடைய நெருங்கிய உறவினர்.

மேட்டூர் St.Mary's மேல்நிலைப்பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்தார். மாவட்ட அளவில் 12 ஆம் வகுப்பு இறுதித் தேர்வில் முதலிடம் பிடித்துச் சாதனை படைத்தார். கோவை GCT பொறியியல் கல்லூரியில் B.E., (Electronics and Communications) பட்டப் படிப்பில் சேர்ந்து படித்து, 1988 ஆம் ஆண்டு Distinction சிறப்புடன் தேர்ச்சி பெற்றார். படிக்கும்போது National Merit Scholarship பெற்றார்.

பட்டம் பெற்றவுடன் தமிழக அரசின் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் தன் பெயரைப் பதிவு செய்து கொண்டார். அரசுத்துறையில் வேலை கிடைப்பது இன்றுபோலவே அன்றும் மிகவும் அரிதானதாகவே இருந்தது. வேலைதான் கிடைக்கவில்லையே தவிர, மனத்திற்குப் பிடித்த நல்ல மாப்பிள்ளை கிடைத்தார். தருமபுரி மாவட்டம் அ. பள்ளிப்பட்டியைச் சேர்ந்த திரு.அ.இராசன் - திருமதி சொர்ணம் தம்பதியரின் மகன் திரு.இரா.கொங்கரசன் - சாமுண்டீஸ்வரி திருமணம் 1988 ஆம் ஆண்டு நடைபெற்றது. திரு.கொங்கரசன் M.Com., ITP பட்டங்கள் பெற்றவர். தற்போது அருணாசல கவுண்டர் கல்வி அறக்கட்டளைத் தலைவராகவும், நாளந்தா கல்வி நிறுவனங்களின் நிறுவனர் மற்றும் தலைவராகவும், மனைவியின் செயல்களுக்கும் சாதனைகளுக்கும் பெருந்துணையாகவும் இவர் விளங்குகின்றார்.

அரசுத்துறையிலோ, தனியார் துறையிலோ பல வகையில் முயற்சி செய்தும் திருமதி சாமுண்டீஸ்வரிக்கு வேலை கிடைக்கவில்லை. கிருஷ்ணகிரி அரசுப் பாலிடெக்னிக் கல்லூரியில் சுமார் ஓராண்டு தற்காலிகமாகப் பணிபுரிந்தார். நிரந்தர வேலை கிடைக்காத இச்சூழ்நிலையில் கிருஷ்ணகிரியில் சிறிய அளவில் ஒரு வாடகைக் கட்டடத்தில் 1992 ஆம் ஆண்டு ஒரு Nursery and Primary School தொடங்கினார். இவ்வாறு சிறிய அளவில் தொடங்கப்பட்ட பள்ளி, இன்று ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரூன்றி

சுமார் **4500** மாணவர்கள் படிக்கும் நாளந்தா கல்வி நிறுவனங்களாக உருவெடுத்து, இன்றைய தினம் தமிழகத்தின் சிறந்த பள்ளிகள் வரிசையில் இடம் பெற்றுள்ளன.

Nalandha Primary and Nursery School, Krishnagiri, Nalandha Matriculation Higher Secondary School, Krishnagiri, Nalandha CBSE School, Krishnagiri, Nalandha International Public School and Junior College, Nalandha International Public School in Hosur, Nalandha CBSE School in Mettur, Nalandha Play Schools in Krishnagiri, Hosur and Mettur ஆகிய கல்வி நிறுவனங்கள், தாளாளர் திருமதி சாமுண்டீஸ்வரி அவர்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலில் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இக்கல்வி நிறுவனங்களில் படித்த எண்ணற்ற மாணவர்கள் IPS Officer, Engineer, Doctor, Professor எனப் பல உயரிய பதவிகளில் உள்ளனர். இங்குப் பயிலும் மாணவர்கள் படிப்பில் மட்டுமல்லாது. ஒழுக்கம், விளையாட்டு மற்றும் பிற துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள். ஒவ்வோர் ஆண்டும், குறிப்பிட்ட சில ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு நடந்த CBSE பன்னிரெண்டாம் வகுப்புத்தேர்வில் தர்ஷணா என்ற மாணவி இந்திய அளவில் மூன்றாம் இடம் பெற்றதும், QCFI போட்டிகளில் இப்பள்ளிகள் முதலிடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கன.

திருமதி சாமுண்டீஸ்வரி பொறியாளர், ஆசிரியர், எழுத்தாளர், பேச்சாளர், கல்வியாளர், நிர்வாகி, சமுதாயச் சேவையாளர் எனப் பன்முகங்கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றார். திருமதி சாமுண்டீஸ்வரி - திரு.கொங்கரசன் தம்பதியருக்கு கௌதம், புவியரசன் என இரண்டு மகன்கள் உள்ளனர். கௌதம் B.Com., MBA., LLB., பட்டங்கள் பெற்றவர். நாளந்தா கல்வி நிறுவனங்களின் நிர்வாக இயக்குநராக உள்ளார். புவியரசன் MBBS., MD பட்டங்கள் பெற்றவர். இவரும் நாளந்தா கல்வி நிறுவனங்களின் நிர்வாக இயக்குநராக உள்ளார். இருவருக்கும் திருமணமாகவில்லை.

ஒவ்வோர் ஆண்டும் தங்கள் தந்தை திரு.கொங்கரசன் அவர்களின் பிறந்தநாள் அன்று, மகன்கள் இலவச மருத்துவ முகாம் நடத்தி வருகின்றனர். மருந்து, உணவு பரிசோதனை போன்றவை முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் இந்தத் திட்டத்தால் கிருஷ்ணகிரியைச் சுற்றியுள்ள ஏழை மக்கள் பெரிதும் பயனடைந்து வருகின்றனர்.

தோல்விகள் கண்டவிடத்துத் துவண்டுவிடாமல், அறிவாற்றல், கடின உழைப்பு, விடா முயற்சி, சரியாய்த் திட்டமிடும் தன்மை போன்றவை துணைகொண்டு, கல்வித்துறையில் பல சாதனைகள் படைத்துள்ள, பாட்டுக்கோர் புலவன் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகத் திகழ்கின்ற திருமதி எம்.எஸ்.சாமுண்டீஸ்வரி கொங்கரசன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனை விருது

## 'வனம்' இந்தியா அறக்கட்டளை

பேரூராதீனம் திரு.சாந்தலிங்க அடிகளார், தனது **90**ஆவது பிறந்த நாளையொட்டித் தன்னைக் காண வந்த அன்பர்களிடம், "மரங்கள் வளர்த்துப் பசுமையை மலரச் செய்யுங்கள்" என்று சொன்னார். அடிகளாரின் வேண்டுகோளை ஏற்று, பல்லடத்தில் ஒரு சிறிய பரப்பளவில் 'அடிகளார் வனம்' அமைக்கப்பட்டது.

உலகின் பிரதான பிரச்சனையான புவி வெப்பமாகுதல், சுற்றுச்சூழல் மாசு போன்றவற்றிற்குத் தீர்வுகளுள் மரம் வளர்ப்பது முக்கியப் பங்கு வகிக்கிறது. இதைக் கருத்தில்கொண்டு பல்லடம் பகுதியில் உள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஒன்றிணைந்து "வனம் இந்தியா அறக்கட்டளை" எனும் அமைப்பைப் பல்லடம் பகுதி மக்களின் பேராதரவுடன் **02–11–2015** அன்று உருவாக்கினர்.

அமைப்பின் நிர்வாகக் குழுவிற்கு திரு.பி.எம்.நாச்சிமுத்து கௌரவத் தலைவராகவும், ஸ்வாதி கே.சின்னசாமி தலைவராகவும், திரு.எஸ்.கணேஷ்வர், திரு.சாமிநாதன், திரு.கே.முகேஷ், திரு.சுந்தரராஜ், திரு.பி.ராஜேஸ்குமார் ஆகியோர் துணைத்தலைவர்களாகவும், திரு.Sky V.சுந்தரராஜ் செயலாளராகவும், திரு.பி.எம்.ஆர்.சுந்தரமூர்த்தி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளனர்.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பசுமையை ஏற்படுத்துதல், மழைநீரை வளமாக்கி நீராதாரத்தை மேம்படுத்துதல், கழிவுகளை வளமாக்குதல், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக்கொண்டுள்ள இந்த அறக்கட்டளை வருடத்திற்கு ஒரு இலட்சம் மரக்கன்றுகளை நட்டு வளர்த்தலையும், வறட்சி மிகுந்த பல்லடம் பகுதியைப் பசுமையாக்குவதையும் இலக்காகக்கொண்டு செயல்பட்டு வருகின்றது.

தற்போது 120 அறங்காவலர்களையும், 52 புரவலர்களையும் கொண்டுள்ள இந்த அறக்கட்டளை தனியார் மற்றும் பொது இடங்களில் மரக்கன்றுகள் நட்டுப் பராமரித்தல், டிராக்டர்கள் மூலம் தொடர்ச்சியாக நீர் அளித்தல் மற்றும் கண்காணித்தல், வாரம் ஒரு முறை ஆலோசனைக் கூட்டம் நடத்துதல் போன்ற செயல்பாடுகளைக் கொண்டு சீரிய முறையில் இயங்கி வருகிறது. நிர்வாகக்குழு மட்டுமின்றி அறங்காவலர்களைக் கொண்டும் அவர்களது ஆலோசனைகள் பேரிலும் செயற் குழு, பாவையர் குழு, நெறிமுறைக் குழு, தகவல் தொழில்நுட்பக் குழு கலைக் குழு முதலான பல குழுக்கள் அமைக்கப்பட்டு அறக்கட்டளையின் செயல்பாடுகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

மாதாந்திர கருத்தரங்குகள் 'வான்மழை' என்ற பெயரில் நடத்தப்பட்டு வருகின்றன. வாரம் தவறாமல் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. வளரும் தலைமுறைக்கு அறக் கல்வியையும், இயற்கைக் கல்வியையும் உணர்த்தி, அறம் சார்ந்த எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கத்துடன், வனம் இந்தியா அறக்கட்டளை சார்பில் 'வனம்' என்னும் சுற்றுச்சூழல் மாத இதழ் 19–06–2016 முதல் வெளியிடப்படுகிறது. இயற்கையின் விந்தைகள், வேளாண்மை நுட்பங்கள், மரம் வளர்ப்பதற்கான அறிவுரை, புதிய தொழில் நுட்பங்கள் போன்ற நல்ல தகவல்களைத் தாங்கி வெளிவந்து கொண்டிருக்கிறது 'வனம்' மாத இதழ்.

அறக்கட்டளையின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் கோவை–திருச்சி நெடுஞ்சாலையில் உள்ள தனது 18 ஏக்கர் நிலத்தைப் பயன்படுத்திக்கொள்ள வழங்கியுள்ளார், அறங்காவலர் திரு.கணேஷ்வர். இந்த இடம் வனாலயம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. வனாலயம் அலுவலகத்தின் திறப்பு விழா 31–01–2018 அன்று மருதாசல அடிகளார் முன்னிலையில் நடைபெற்றது. ராம்ராஜ் காட்டன் உரிமையாளரும், வனம் இந்தியா அறக்கட்டளையின் அறங்காவலருமான திரு.கே.ஆர்.நாகராஜன், தனது நிறுவனத்தின் பல்லடம் கிளையின் மூலம் வரும் மொத்த வருவாயையும், அறக்கட்டளையின் செயல்பாடுகளுக்காக வழங்கியுள்ளார்.

பசுமைப்பணி, மரக்கன்றுகள் நடுதல், சொட்டு நீர்ப்பாசன வசதி செய்தல், 'மியாவாக்கி' முறையில் மரம் நட்டுப் பராமரித்தல், பனை விதைகள் வினியோகம், வேப்ப மரங்கள் நட்டுப் பராமரித்தல், பூங்காக்கள் உருவாக்குதல் முதலான பணிகள் ஆங்காங்கே நடைபெற்றுள்ளன. கலை நிகழ்ச்சிகள் மூலம் மரம் வளர்ப்பு விழிப்புணர்வு மக்களுக்கு ஊட்டப்படுகிறது.

மனிதன் நோயின்றி நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்ந்திடவும், எதிர்காலச் சந்ததியருக்கு வாழ்க்கைக்கு அவசியமாகத் தேவைப்படும் இயற்கை வளங்களைக் கொண்டுசேர்த்திடவும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மிக அவசியம். எங்கும் எதிலும் மாசு என்றாகிவிட்ட இன்றைய சூழ்நிலையில், வனம் இந்தியா அறக்கட்டளையின் பணி மிகவும் பாராட்டத்தக்கது; போற்றத்தக்கது; மற்றவர்களால் அவசியம் பின்பற்றத்தக்கது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோயற்ற வாழ்விற்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மிகவும் இன்றியமையாதது. இந்த உன்னதமான பணியில் அனைவரும் வியந்து போற்றும் சாதனைகளைப் புரிந்துவரும் வனம் இந்தியா அறக்கட்டளைக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், 'கொங்கு சாதனை' விருது வழங்கிப் பாராட்டி மகிழ்கிறது.

மேலும், இந்த விருது பெற முக்கியக் காரணமாக உள்ள அறக்கட்டளை நிர்வாகிகள், அறங்காவலர்கள், புரவலர்கள் அனைவருக்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் நன்றி கலந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

# கொங்கு பெண் சாதனையாளர்



## டாக்டர் பி.சித்ரா தங்கவேல்

ஈரோடு மாவட்டம், கொல்லம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு.பூசப்ப கவுண்டர் – திருமதி ராஜாமணி தம்பதியருக்கு மகளாக 1963 ஆம் ஆண்டுப் பிறந்தவர், டாக்டர் பி.சித்ரா தங்கவேல்.

ஈரோடு ஜி.டி.எஸ்.பள்ளியில் பயின்ற இவர், தஞ்சை மருத்துவக் கல்லூரியில் MBBS பட்டமும், Manipal Academy of Higher Education - இல் DGO பட்டமும் பெற்றார். சென்னை அப்போலோ மருத்துவமனையில் IVF Training எடுத்து இத்துறையில் சிறந்த நிபுணத்துவம் பெற்றார். மேலும் சென்னை Mediscans Systems நிறுவனத்தில் Ultra Sound Training எடுத்துத் தேர்ச்சி பெற்றார். இவை மட்டுமல்லாமல் Infertility, IVF, High Risk Pregnancy, Ultra sound & Colposcopy ஆகிய துறைகளில் சிறப்புப் பயிற்சி பெற்று, தன்னுடைய திறமைகளையும், மருத்துவ அறிவையும், ஆற்றலையும் நன்கு வளர்த்துக்கொண்டார்.

அயரா உழைப்பு, அர்ப்பணிப்பு, சாதிக்க வேண்டும் என்ற உறுதி, குழந்தைப் பேறு இல்லாத குடும்பப் பெண்களுக்கு உதவவேண்டும் என்ற உயரிய எண்ணம் முதலான பண்புகளை ஒருங்கே கொண்டுள்ள இவர், ஈரோடு நகர் சூரம்பட்டியில் (Ashwin Hospital) அஸ்வின் மருத்துவமனையை ஏற்படுத்தினார். Ashwin Modular Test Tube Baby Centre ஆகவும் விளங்கும் இம்மருத்துவமனையில் டாக்டர் சித்ரா தங்கவேல் அவர்கள் Infertility Specialist மற்றும் IVF Consultant ஆக மிகச் சிறப்பான முறையில் மருத்துவச் சேவை புரிந்து வருகின்றார்.

மகளிர் மேம்பாட்டுச் சேவையில் 30 ஆண்டுகள் முடித்துப் பெரும் சாதனை படைத்துள்ளார். 1998–1999 ஆம் ஆண்டு இவர் ஈரோடு Obs & Gynae Society இல் இணைச்செயலாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றிக்கொண்டிருந்தபோது, இவரது சிறந்த சேவையைப் பாராட்டித் தேசிய அளவிலான விருது வழங்கப்பெற்ற பெருமைக்குரியவராவார்.

2000 ஆம் ஆண்டு Adolescent Health Education Programme மிகச் சிறந்த முறையில் நடத்தியமைக்காக இரண்டு தேசிய விருதுகள் பெற்றார். 2002ஆம் ஆண்டு நடைபெற்ற எட்டாவது தெற்காசிய மாநாட்டில், Best Poster Presentation செய்தமைக்குப் பரிசு பெற்றார். தேசிய அளவில் நடைபெற்ற மாநாடுகளில் 11 ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துப் பாராட்டுப் பெற்றார். IJM இல் இரண்டு மருத்துவக் கட்டுரைகளைப் பதிப்பித்துள்ளார். 2011 ஆம் ஆண்டு 'TIMA' Research day விருதைப் பெற்றார். அதே ஆண்டில் 'Outstanding Woman citizen' விருதையும் பெற்றார்.

செய்திப் பத்திரிகைகளில் பல பயனுள்ள மருத்துவக் கட்டுரைகளை எழுதிப் பலரது பாராட்டைப் பெற்றுள்ளார். கிராமப்புறங்கள், பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பல மருத்துவ முகாம்கள் நடத்தி, விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளார். அஸ்வின் மருத்துவமனையில் அமைந்துள்ள Modular test tube baby centre குழந்தைப் பேறு தாமதமாகும் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையன்று. மகப்பேறு கிடைக்காமல் இருக்கும் பல மகளிர் வாழ்வில் மகிழ்ச்சியளிக்கும் சிறந்த சேவையைச் செய்து வருகின்றார். மகளிர் மேம்பாட்டிற்கும், மன மகிழ்ச்சிக்கும், சர்க்கரை நோய், ரத்த அழுத்த, புற்றுநோய் போன்ற நோய்கள் வராமல் தடுப்பதற்காகவும் சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார் இம்மருத்துவர்.

1998 ஆம் ஆண்டு இவருக்குத் திருமணம் நடைபெற்றது. இவருடைய கணவர் டாக்டர் ஏ.தங்கவேல் ஈரோட்டில் சிறந்த மருத்துவர்களுள் ஒருவராக விளங்குகிறார். மனைவியின் சேவைகளுக்கும் சாதனைகளுக்கும் நற்துணையாக விளங்குகிறார். இத்தம்பதியரின் மகன் அஸ்வின்; இவரும் ஒரு மருத்துவர். தற்போது M.D., (General Medicine) மேற்படிப்புப் பயின்று வருகிறார்.

மகளிர் மருத்துவத்துறையில் சாதனை படைத்துள்ளதோடு, மகளிர் மேம்பாட்டிற்காகப் போற்றத்தக்க தொண்டுகள் பல ஆற்றிவருகின்ற டாக்டர் சித்ரா தங்கவேல் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு பெண் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு பெண் சாதனையாளர்



## திருமதி கவின் திருமுருகன்

"சிறப்புக் குழந்தைகளிடம் நிபந்தனையற்ற அன்பை முழுமையாக உணரலாம். பொறாமை, வெறுப்பு, காழ்ப்புணர்ச்சி இல்லாத தூய்மையான மனம் இவர்களுடையது. அதே போல் சராசரி மனிதர்களைக் காட்டிலும் அபாரமான திறமைகள் இவர்களிடம் உண்டு. இவர்களைத் தவறாகப் புரிந்து கொண்ட நம்மிடம் தான் மனப்பிரச்சினையே தவிர இவர்களிடம் இல்லை. நம்முடைய மனத்தை விட இவர்கள் மனம் சற்றே மாறுபட்டது. அவ்வளவு தான்"

சிறப்புக் குழந்தைகளிடம் அந்நியோன்யமாக, ஆழமாகப் பழகிய ஒருவராலேயே இத்தகைய பண்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்த முடியும். ஒரு பிரபல நாளிதழில் வெளிவந்த இந்தப் பேட்டியை அளித்தவர் திருப்பூர் காந்தி நகரில் சாய் கிருபா சிறப்புப்பள்ளியை நடத்திவரும் திருமதி கவின் திருமுருகன் அவர்கள். மறைந்த புகழ்பெற்ற மருத்துவர் திரு.இளங்கோ (கவின் மருத்துவமனை, ஈரோடு) - திருமதி மாலதி தம்பதியரின் மகளான திருமதி கவின் திருமுருகன் அவர்களின் சகோதரர் திரு. நம்பி அவர்களும், கரூரைப் பூர்விகமாகக்கொண்ட இவரது கணவர் திருமுருகன் அவர்களும், இவரது மாமனார் திரு. இராமச்சந்திரன் அவர்களும் மருத்துவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய மருத்துவப் பின்னணியைக் கொண்ட கவின் அவர்கள் Counselling and Psycho Therapy ல் முதுகலைப் பட்டமும், சிறப்புக் குழந்தைகளுக்கான கல்வியில் B.Ed., பட்டமும் பெற்றவர். இவரது இரு குழந்தைகள் ஆருத்ரா மற்றும் ஆதித்யா இருவரும் பள்ளியில் படித்து வருகின்றனர்.

சிறப்புக் குழந்தைகளுக்கான பள்ளியில் 2011இல் தன்னார்வலராகப் பணியைத் துவக்கிய இவர் இத்துறையில் மிகுந்த ஆர்வமும், ஈடுபாடும் கொண்டு 2014இல் திருப்பூர் காந்தி நகரில் சாய் கிருபா சிறப்புப் பள்ளியைத் துவக்கினார். பொதுவாகவே இத்தகைய சிறப்புக் குழந்தைகளுக்கான கல்வி மற்றும் சிகிச்சை முறைகளுக்குக் கட்டணம் அதிகம். ஏழை, எளிய மக்களால் இவற்றை அளிக்க இயலாது. ஏற்கனவே குறைவான

பொருளாதாரச் சுமையில் வாழ்ந்து வரும் இவர்களுக்கு இஃது இரட்டிப்புச் சுமையே. அவர்களின் வலியை உணர்ந்து அவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது தான் இப்பள்ளி. ஆரம்பத்தில் நான்கு குழந்தைகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளியில் இப்போது 106 குழந்தைகள் உள்ளனர்.

Down's மற்றும் William Syndrome, Cerebral palsy, ஆட்டிசம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர் மனவளர்ச்சி மற்றும் கற்றல் குறைபாடுகளை உடைய குழந்தைகளுக்கு இங்குக் கல்வியும், சிகிச்சையும் அளிக்கப்படுகின்றன. இவர்களை எப்படியாவது சமூகத்தின் ஓர் அங்கத்தினராக, தங்கள் பணிகளைத் தாங்களே செய்பவர்களாக மாற்றிவிட வேண்டும் என்பதே இவரது தலையாய நோக்கமாக இருக்கிறது. ஐந்து குழந்தைகளுக்கு ஓர் ஆசிரியர் என்கிற விகிதத்தில் சீரிய பணியாற்றி வருகிறார். இரண்டரை முதல் 28 வயது வரையிலான ஆண், பெண் இருபாலரும் உள்ளனர். குறைவான கட்டணம் வசூலிக்கப்பட்டாலும் மிகச் சிறப்பான சேவை இங்கு அளிக்கப்படுகிறது. நீச்சல், யோகா, கணினி, இசை, இவற்றோடு, நடனம், பேச்சு, உரையாடல் பயிற்சி எனப் பல்வேறு வகையான பயிற்சிகள் சிறப்புக் குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. இவற்றோடு National Institute of Open Schooling ன் பாடத்திட்டத்தில் சிறப்பான கல்வியும் வழங்கப்படுகிறது. மேலும் ஒரு மாணவர் தேசிய அளவில் ஈட்டியெறிதல் போட்டியில் பங்கேற்று Paraolympics ல் கலந்து கொண்டார் என்கிற செய்தி நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது.

இதற்குப் பின்னணியில் உள்ள உழைப்பை நம்மால் உணர முடிகிறது. உடை மாற்றுவது, பல் துலக்குவது போன்ற அன்றாடப் பணிகளில் ஆரம்பித்து, அவர்களுக்குத் தேவையான கல்வியையும், உரிய பிசியோதெரபி போன்ற சிகிச்சை முறைகளையும் அளித்து, இவற்றோடு யோகா, விளையாட்டுப் போன்ற சிறப்புப் பயிற்சிகளையும் அளித்து – எண்ணிப்பார்க்கவே நமக்கு மலைப்பாக இருக்கிறது. கவின் அவர்கள் இது பற்றிக் கூறும்போது "சராசரி குழந்தைகளுக்கு ஒரு பத்துமுறை சொல்லிக்கொடுக்க வேண்டும் என்றால் இவர்களுக்கு ஒரு நூறு முறை அவ்வளவுதான்" என்று அவர் எளிதாகக் கூறிவிட்டாலும் இந்த இளம் வயதிலேயே அவருக்கு அமைந்த அளவு கடந்த பொறுமையையும், அன்பான இயல்பையும் எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை.

தீவிர சாய் பக்தையான இவர் இத்தகைய குழந்தைகளிடம் ஒளிந்திருக்கும் ஏதோ ஓர் ஆற்றலை இனங்கண்டு அதில் அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும் எனக் கூறுகிறார். இங்குப் படிக்கும் ஒரு மாணவர் பேருந்தில் ஏறுவதற்கு இவர்கள் கொடுத்த பயிற்சியால் இப்போது தனியாகப் பேருந்திலேயே இப்பள்ளிக்கு

வீட்டிலிருந்து வந்து செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றொரு சிறப்பம்சமாக, சாய்கிருபா பள்ளியில் மளிகைக்கடை இயங்கி வருகிறது. விற்பனைக்கான பொருட்களைப் பாக்கெட் செய்வது. வியாபாரக் கணக்குகளை நிர்வகிப்பது, வாங்குபவர்களுக்கு உரிய பொருட்களைத் தருவது என அனைத்து வேலைகளையும் இக்குழந்தைகளே செய்து வருகின்றனர். மேலும் இங்குள்ள உணவகத்தில் தேநீர் தயாரிப்பது, காய் கறிகள் நறுக்குவது உள்ளிட்ட பணிகளையும் சிறப்பாகச் செய்து நம்மை பிரமிப்பில் ஆழ்த்துகின்றனர். இத்தகைய பணிகள் அவர்களுக்கான ஒரு சுய வேலை வாய்ப்பைப் பிற்காலத்தில் அளிக்கும். பெற்றோருக்கு ஒரு சுமையாக இருக்கமாட்டார்கள் என்ற நோக்கிலேயே இப்பயிற்சி அளிக்கப்படுகிறது என்று கவின் அவர்கள் தெரிவிக்கிறார்.

இக்குழந்தைகளின் பெற்றோரின் உணர்வுகளையும் புரிந்துகொண்டு அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் விதமாகச் செயல்பட்டு வருகின்றனர். அடித்தட்டு மக்களாகிய இந்தக் குழந்தைகளின் பெற்றோர் உளவியல் ரீதியாகச் சந்திக்கும் பிரச்சனைகளை நிவர்த்தி செய்யும் விதமாகவும் செயலாற்றுகின்றனர். உதாரணமாக, குழந்தைகளை மாதமொருமுறை மாலைநேரங்களில் இவர்கள் கவனித்துக்கொண்டு பெற்றோரை ஒரு திரைப்படம் பார்க்க அனுப்புவது போன்ற மகிழ்வளிக்கும் சிறிய விஷயங்களைக்கூட யோசித்துச் செய்துவருவதைப் பார்த்தால் நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. பெற்றோருடைய கோணத்தில் யோசித்து அவர்களின் உணர்வுகளைப் புரிந்து செயலாற்றுவதற்கு இந்நிகழ்வு ஒரு சிறிய உதாரணம்!

மற்ற துறைகளில் பணியாற்றுவதை விட இக்களம் மிகுந்த சவாலானது. உண்மையான அன்பும், பொறுமையும், அர்ப்பணிப்பும், எளிமையான சுபாவமும் இயல்பாகவே கொண்டுள்ள திருமதி கவின் திருமுருகன் அவர்கள் இந்தச் சேவையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சாதனை படைத்து வருகிறார்.

நம் கொங்கு மண்ணில் இன்றைய இளம் பெண்களுக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டு, சீரிய தொண்டாற்றி வருகின்ற திருமதி கவின் திருமுருகன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு பெண் சாதனையாளர்” விருது வழங்கி வாழ்த்துகிறது.

# கொங்கு வேளாண் சாதனை விருது

Uyir

ORGANIC FARMERS MARKET

## 'உயிர்' அமைப்பு

Uyir Agriculture Private Ltd., (UAPL) நிறுவனத்தின் தோற்றத்திற்குக் காரணம் ஈரோடு நகரிலுள்ள Uyir Organic Farmers Association (உயிர் இயற்கை வேளாண்மை விவசாயிகள் சங்கம்) எனும் அமைப்பு. 2015ஆம் ஆண்டு கரிம வேளாண்மையை, இயற்கை வேளாண்மைக்கு மாற்றுவதற்கான நோக்கத்துடன் இந்த அமைப்பு தொடங்கப்பட்டது. இவ்வாறு விளைவிக்கப்படும் இயற்கை வேளாண் பொருள்கள் ஒவ்வோர் வாரமும் உறவினர் மற்றும் நண்பர்களுக்கு விற்கத் தொடகப்பட்டது.

இயற்கை வேளாண்மைக்கு மாறிடச் சொன்னால், விவசாயிகள் கேட்கும் முதற்கேள்வி, 'நாங்கள் எங்கே விளைபொருட்களை விற்க முடியும்?'' என்பதாகும். மேலும், 'அதனால் எங்களுக்கு என்ன ஆதாயம்?' என்றும் வினவினர். அதனால் நாங்களே கடைகளை ஏற்பாடு செய்து நுகர்வோருக்கு நேரடியாக விற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனைக் கருத்தில் கொண்டுதான் UAPL அமைப்புத் தொடங்கப்பட்டது. இந்த அமைப்பில் விவசாயிகள்தான் பங்குதாரர்கள்.

இந்த உயிர் அமைப்பின் நோக்கம் ஒவ்வொரு இயற்கை வேளாண் விவசாயியும் ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் ரூ.1000 ரூபாய் சம்பாதிக்க வழி செய்வதோடு, விளைவிக்கப்படும் பொருட்களுக்குச் சந்தை விலையைக் கருத்தில் கொள்ளாது, குறைந்தபட்ச விலையை ஒவ்வொரு பொருளுக்கும் நிர்ணயிக்க வேண்டும் என்பதாகும். நுகர்வோருக்கு நியாயமான விலையில் பொருட்கள் கிடைப்பதற்கும் உதவிடவேண்டும் என்பதும் இந்த அமைப்பின் நோக்கமாகும்.

உயிர் அறக்கட்டளை ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது. இந்த அறக்கட்டளை மூலம் விவசாயிகளுக்கு தேசி பசுக்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. சொந்த மாடு வைத்திராத ஏழை விவசாயி, இயற்கை வேளாண்மை செய்ய விரும்பினால் பசு இலவசமாக வழங்கப்படுகிறது. கடந்த ஓராண்டில் இருபது பசுக்கள் இவ்வாறு கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்பின் முக்கிய நோக்கம், அடுத்த தலைமுறை தற்போதைய தலைமுறையைவிட நலமாகவும், நோய்கள் குறைந்தும் வாழவேண்டும் என்பதுதான். அஃது இயற்கை வேளாண்மையால் மட்டுமே இயலும்.


இந்த அமைப்பு 7 உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. உற்பத்தி மற்றும் பயிற்சி,கொள்முதல், கணக்கு, மனிதவளம், தணிக்கை மற்றும் ஆய்வு, தரக்கட்டுப்பாடு மற்றும் சந்தைப்படுத்துதல், விற்பனை ஆகிய 7 உட்பிரிவுகள் உள்ளன. ஒவ்வோர் பிரிவும் வெவ்வேறு மட்டத்தில் செயல்பட்டாலும், அமைப்பின் முக்கியக் குறிக்கோள்களை நோக்கிச் செல்வதாகும். விவசாயிகளுக்குத் தக்க பயிற்சியளித்து அவர்களை இயற்கை வேளாண்மைக்கு மாற்றுவது, சமுதாயத்திற்கு இயற்கை உணவை வழங்குவது மற்றும் நலிவுற்ற விவசாயிகளுக்கு உதவிகள் புரிவது ஆகியன அமைப்பின் முக்கியக் குறிக்கோள்கள் ஆகும்.

இதுவரை 3000 விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மையில் பயிற்சி அளித்தது, அவர்களுள் 1000 விவசாயிகளை இயற்கை வேளாண்மைக்கு மாறச்செய்தது, இதுவரை 1500 ஏக்கர் நிலத்தை இயற்கை வேளாண்மைக்குப் பயன்படுத்தியது, Whatsapp குழுமங்கள் மூலம் விவசாயிகளுக்குத் தக்க பயிற்சியளித்தது, 20 ஏழை விவசாயிகளுக்கு பசு நன்கொடை அளித்தது போன்றவை உயிர் அமைப்பின் குறிப்பிடத்தக்க சாதனைகள் ஆகும். ஈரோடு நகரில் இயற்கை வேளாண் விவசாயிகள் நேரடி விற்பனை நிலையம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கடந்த நிதியாண்டில் இந்நிறுவனத்தின் வர்த்தக மதிப்பு ரூபாய் ஐந்து கோடி அளவுக்கு மேல் இருந்தது. இது தமிழகத்தின் சந்தை மதிப்பில் மூன்று சதவிகிதம் என்பது குறிப்பிடத்தக்கது.

உயிர் அமைப்பின் மூலம், கரிம விவசாயத்திலிருந்து இயற்கை வேளாண்மைக்கு விவசாயிகளை மாறச்செய்கின்ற நற்காரியத்தைச் செய்து, மக்கள் அடுத்த தலைமுறையிலாவது நல்ல உடல்நலத்துடன் வாழ்ந்திட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் சாதனை புரிந்து வருகின்ற ‘உயிர்’ அமைப்பிற்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு வேளாண் சாதனை’ விருது வழங்கிப் பாராட்டுகிறது. இந்த விருதைப் பெற்றிடும் ‘உயிர்’ அமைப்பின் நிர்வாகிகளுக்குச் சங்கம் பாராட்டுதல்களைத் தெரிவிக்கிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வி ஹரிணி ராஜேந்திரன்

கோவை ஸ்ரீ சரஸ்வதி வித்யா மந்திர் பள்ளியில் பதினொறாம் வகுப்புப் படித்து வரும் மாணவி ஹரிணி ராஜேந்திரன். 2002 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 14ம் தேதி பிறந்தவர். இவரின் தந்தை திரு.இராசி ராஜேந்திரன், தாயார் மேனகா ராஜேந்திரன்.

தேசிய அளவிலான குதிரையேற்றப்போட்டியில் பங்கேற்றுப் பெரும் சாதனை படைத்துள்ளார். இவர் கடந்த ஆண்டு பெங்களூரில் நடைபெற்ற தென்னிந்திய அளவில் குதிரையேற்றப்போட்டி நடைபெற்றது. இதில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா முதலான பல மாநிலங்களில் இருந்து 165க்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் இப்போட்டியில் கலந்து கொண்டனர். தமிழகம் சார்பில் இப்போட்டியில் செல்வி ஹரிணி 60 செ.மீ. மற்றும் 90 செ.மீ. உயரம் தாண்டுதல் பிரிவுகளில் பங்கேற்று 2ம் இடம் மற்றும் 5ம் இடத்தை பிடித்து தமிழகத்திற்கு பெருமை சேர்த்தார். அதற்காக அவருக்கு பரிசு மற்றும் வெள்ளி பதக்கங்கள் வழங்கப்பட்டது.

மத்திய பிரதேச மாநிலம், போபாலில் நடைபெற்ற தேசிய அளவிலான குதிரையேற்றப்போட்டியில் 1 மீட்டர் உயரம் தாண்டுதல் பிரிவில் 8வது இடத்தை பெற்றார். இவரின் திறமையை பாராட்டி கோவை சென்ட்ரல் ரோட்டரி கிளப் இவருக்கு இளம் சாதனையாளர் விருது வழங்கி பாராட்டியது. இவர் தனக்கு கிடைக்கும் பரிசு தொகையை இராசி பஃவுண்டேஷன் என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களுக்கு கல்வி மற்றும் மருத்துவ உதவி செய்து வருகிறார். மேலும் விளையாட்டு துறையில் திறமை இருந்தும், போதிய பண வசதி இல்லாமல் மேலும் சாதிக்க முடியாத மாணவ, மாணவிகளுக்கு இயன்ற பண உதவியை செய்து வருகிறார்.


தடகள போட்டியில் மாநில அளவில் விளையாடி உள்ள இவர், துப்பாக்கிச் சுடுதல் போட்டியிலும் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றுள்ளார். படிப்பில் படு சுட்டியாக விளங்கும் இவர், ஓவியம் வரைவதிலும் திறமைசாலி. செல்லப் பிராணிகள் மேல் மிகவும் பிரியம் கொண்டவர். இவருக்கு மிகவும் பிடித்த விலங்கு குதிரை. காரணம் அதன் தோற்றம்,

வேகம், சுறுசுறுப்பு, அழகான முடி, நீள உடல், விரைந்து ஓடும் சக்தி, சொல்வதைக் கேட்கும் குணம் முதலானவை எனக் கூறும் இவர், 'இலக்கியத் திலகம்' எனும் விருதையும் பெற்றுள்ளார்.

பெண் சமுதாயம் தற்போது மேலோங்கி நிற்பதற்குச் சிறந்த உதாரணமாக விளங்கும் செல்வி ஹரிணி, மிகவும் அரிதான திறமைகளைத் தனக்குள் வைத்துக்கொண்டு வெற்றிமாலை சூடி வலம் வருவதோடு, பெற்றோர்க்கும், பள்ளிக்கும், கொங்குச் சமுதாயத்திற்கும், தமிழகத்திற்கும் பெரும் பெருமை சேர்த்துள்ளார்.

குதிரையேற்றப் போட்டிகளில் கலந்துகொண்டு அரிய சாதனை படைத்துள்ள செல்வி ஹரிணி ராஜேந்திரன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுவதோடு, பன்னாட்டு அளவிலும் பல சாதனைகள் புரிந்திடச் சங்கம் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் கே.எஸ்.கவின் கார்த்திக்

கரூர் அருகில் உள்ள புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பி.செந்தில்குமார் – திருமதி எஸ்.கிருத்திகா ஆகியோருக்கு 2005 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் செல்வன் கே.எஸ்.கவின்கார்த்திக். இவர் தற்போது கரூர் வேலம்மாள் வித்தியாலயா பள்ளியில் எட்டாம் வகுப்புப் படித்து வருகிறார்.

இவர் இந்திய அளவில் சிறந்த டென்னிஸ் விளையாட்டு வீரர்களுள் ஒருவராய்த் திகழ்கின்றார். டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்று, 12 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் தமிழக அளவில் முதல் இடத்தையும், இந்திய அளவில் ஏழாவது இடத்தையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். தற்போது 14 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் அகில இந்திய அளவில் 38 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ஆறாவது வயது முதலே டென்னிஸ் விளையாடத் தொடங்கிய கவின் கார்த்திக், பெற்றோரின் ஊக்குவிப்பு, விளையாட்டில் கடுமையான பயிற்சி, அசாத்திய திறமை, தன்னம்பிக்கை ஆகியவற்றின் மூலம் டென்னிஸ் விளையாட்டில் மாநில அளவிலும், இந்திய அளவிலும் நடைபெற்ற ஏராளமான போட்டிகளில் பங்கு பெற்றுச் சாதனைகள் பலவற்றை நிகழ்த்தியுள்ளார். 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மதுரையில் நடைபெற்ற AITA Junior Championship Series போட்டியில் கலந்துகொண்டு, முதலிடம் பெற்று வெற்றிக் கோப்பைகளைக் கைப்பற்றியது இவரது சாதனைகளுள் முக்கியமானதொன்றாகும். இந்த ஆண்டு டெல்லியில் நடைபெற்ற Asian Tennis Championship என்னும் பன்னாட்டுப் போட்டியில் கலந்துகொண்ட இவர், 16ஆவது இடத்தைப் பிடித்துச் சாதனை படைத்துள்ளார்.

மாநில அளவில் 4 போட்டிகளில் முதல் இடம், 5 போட்டிகளில் இரண்டாம் இடம், தென்னிந்திய அளவில் 6 போட்டிகளில் முதல் இடம், 6 போட்டிகளில் இரண்டாம் இடம். தேசிய அளவில் 13 போட்டிகளில் முதல் இடம், 5 போட்டிகளில் இரண்டாம் இடம் என இவரது சாதனைகள் வியக்க வைக்கின்றன. டென்னிஸ் விளையாட்டில் சாதனைகள் பல நிகழ்த்தியுள்ள செல்வன் கவின் கார்த்திக் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுவதோடு, மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் அமுது சுந்தரம்

ஈரோடு மாவட்டம், வெள்ளோடு, செம்மாண்டாம்பாளையத்தைச் சேர்ந்த திரு.இரா.கொ.சண்முகசுந்தரம் (இயக்குநர் மற்றும் கணினி மென்பொருள் வடிவமைப்பாளர்) – திருமதி ப.கௌசல்யா (கணினி பொறியாளர்) ஆகியோரின் மகனாக **2006** ஆம் ஆண்டு பிறந்தவர் செல்வன் அமுது. தற்போது சென்னை SBOA பள்ளியில் படித்து வருகிறார். இயற்கை மற்றும் விண்வெளி அறிவியலில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். கடந்த பல வருடங்களாகப் பொது மற்றும் பள்ளிகளுக்கான அறிவியல் போட்டிகளில் கலந்துகொண்டு பல வெற்றிகளைப் பெற்றுள்ளார்.


கடந்த ஜனவரி மாதம் நடந்த தென்மண்டல அளவிலான சிறந்த அறிவியல் முனைவுகளுக்கான போட்டியில் கடல் நீரில் கலந்திருக்கும் எண்ணெய்ப் படிமங்களைப் பிரித்தெடுக்கும் முறைக்காக முதல் இடம் பிடித்தார். அதைத் தொடர்ந்து புது டெல்லியில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு அறிஞர்கள் மற்றும் ஆர்வலர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார். மேலும், சென்னை மாவட்டப் பள்ளிகளுக்கிடையேயான போட்டியில் தங்க பதக்கத்தையும் வென்று சாதனை படைத்துள்ளார்.

18-22 ஜூன் **2018** கோலாம்பூர், மலேசியாவில் நடைபெற்ற உலகளாவிய பள்ளிகளுக்கிடையேயான அறிவியல் விவாதம் மற்றும் தர்க்கப் போட்டிகளில் கலந்துகொண்டு மூன்று தங்கம் மற்றும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளார். **2017** மற்றும் **2018** இல் இந்து பத்திரிக்கையின் இளம் உலக அறிவியல் மற்றும் பொது வினாடி வினா போட்டியில் பங்கேற்று வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளார். **2016** இல் கிடோவேட்டர் படைப்பாற்றல் மற்றும் பொது அறிவுப் போட்டியில் இந்திய அளவில் முதலிடம் மற்றும் ஒரு இலட்ச ரூபாய் பரிசையும் வென்று சாதனை படைத்துள்ளார்.

**2015** ஆம் ஆண்டு டேக்வாண்டோ கறுப்புப் பட்டை (Black Belt-Madiem Don) பெற்ற இவர் வீணை, சதுரங்கம், கணிதப் புதிர்கள், டேபில் டென்னிஸ், கிரிக்கெட் ஆகியவற்றிலும் சிறந்து விளங்குகிறார்.

அறிவியல் போட்டிகளில் சாதனைகள் புரிந்துள்ள செல்வன் அமுது சுந்தரம் அவர்களுக்குச் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது. இத்துறையில் மேலும் பல சாதனைகள் படைத்திடச் சங்கம் வாழ்த்துகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் மு. பிரபு

மோகனூர் மணியன் குலத்தைச் சார்ந்த உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.K.R.A.முத்துக்கிருஷ்ணன் - திருமதி விஜயலட்சுமி ஆகியோரின் மகன் பிரபு மற்றும் அவரின் நண்பர்கள் நால்வருடன் சேர்ந்து, 'ஸ்ட்ராகலக்டர்' அதாவது நெல் சாகுபடியில் வரும் வைக்கோலைச் சேகரிக்கும் கருவி ஒன்றினைக் கண்டுபிடித்துள்ளனர். தற்போது இருக்கும் கருவிகள் விலை ரூ.30,000/- முதல் ரூ.50,000/- வரை உயர்ந்ததாக உள்ளன. இவர் பனிமலர் தொழில்நுட்பக் கல்லூரியில் B.E., (Mech) கடந்த ஆண்டுப் பயின்றபோது இந்தக் கருவியின் விலையை ரூ. 10,000/- வரை ஒரு சிறிய யோசனையின் மூலம் குறைத்துள்ளனர்.

இந்தக் கருவி 'ஐசிடிஎசிடி ஸ்டுடண்ட் இன்னோவேஷன் அவார்டு' என்னும் விருதினைப் பெற்றுள்ளது. இந்திய அளவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் கலந்து கொண்டு 'காந்தியன் யங் டெக்னாலஜிக்கல் இன்னோவஷன் அவார்டு 2017' எனும் விருதைப் புதுடில்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் 05/05/2017 அன்று நடைபெற்ற விழாவில் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். விவசாயிகளுக்குப் பயன்தரும் கருவியைக் கண்டுபிடித்துள்ளனர்.

நடக்கமுடியாத மாற்றுத் திறனாளிகளுக்கான நிற்க, உட்கார, படுக்க உதவும் புதுமையான நாற்காலியை, பனிமலர் கல்லூரியில் படித்துக் கொண்டே, பிரபு மற்றும் அவர் நண்பர்கள் குழு தன் சொந்தச் செலவிலேயே உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். 20/10/2017 அன்று சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த அறிவியல் திருவிழாவில் (India International Science Festival 2017) இவர்கள் கண்டுபிடிப்புக்குப் பரிசு, விருது மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டன. சந்தையில் இதுபோன்ற நாற்காலிகள் இலட்சங்களிலேயே கிடைக்கின்றன. ஆனால் இந்த நாற்காலிக்கு 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தாலே போதும். அண்ணா

பல்கலைக்கழகத்தில் நடந்த அறிவியல் திருவிழாவில் இந்த நாற்காலி, பார்வையாளர்கள் மற்றும் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது.

கோயம்புத்தூரில் நடைபெற்ற கல்லூரி மாணவர்களுக்கு இடையேயான ‘பைக்’ (இரு சக்கர வாகனம்) போட்டியில், பிரபு மற்றும் அவர்கள் குழு உருவாக்கிய பைக் ‘Best Remodel Bike’ ஆகத் தேர்வு செய்யப்பட்டுப் பரிசு வழங்கப்பட்டது. எந்த உருவத்தை வைத்தாலும் அதை அப்படியே உருவாக்கும் ஒரு புது வகையான 3D Printer-ஐ பிரபு மற்றும் குழு நண்பர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சென்னை Trade Centreல் நடைபெற்ற Machine Tool Exhibition - ல் பங்கேற்ற இவர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளைப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்துப் பலரின் பாராட்டுகளைப் பெற்றனர். விவசாயிகளுக்குப் பயனுள்ள வகையில் வைக்கோல் சுருட்டும் ‘ஸ்ட்ரா கலக்டர்’ இயந்திரத்தைக் கண்டுபிடித்து அதனை Patent செய்வதற்கு இந்திய அரசாங்கத்திடம் விண்ணப்பித்துள்ளனர்.

மாற்றுத் திறனாளிகள், முதியோர்கள், நோயாளிகள் ஆகியவர்களுக்கு உதவும் வகையில் மாடிப்படிகளில் ஏற மற்றும் இறங்கும் Wheel Chair-ஐ குறைந்த விலையில் கண்டுபிடித்து அதையும் Patent செய்வதற்கு இந்திய அரசாங்கத்திடம் விண்ணப்பித்துள்ளனர்.

செல்வன் பிரபு IIT கரக்பூரில் நடந்த National Student Space Challenge 2016 Seminar & Designer போட்டி, சிங்கப்பூரில் நடந்த 23rd Singapore Robatic Games 2016’ போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றுள்ளார். தமிழகத்தில் நடைபெற்ற பல கல்லூரிகளில் Seminars மற்றும் Designs போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளைப் பெற்றுள்ளார்.

தற்போது கனடா நாட்டில் உள்ள வின்சார் பல்கலைக்கழகத்தில் M.S.படித்து வருகிறார். தன்னுடைய திறமை, அர்ப்பணிப்பு, நண்பர்களின் ஒத்துழைப்பு முதலானவற்றின் மூலம் அறிவியல் துறையில் பல சாதனைகளைப் படைத்துள்ள செல்வன் பிரபு அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.



# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வி கே.பி.தனிஷ்கா

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நன்னியூர் புதூரில் வசிக்கும் நமது சங்க உறுப்பினர் திரு.கே.பழனிச்சாமி - திருமதி நிர்மலா தம்பதியரின் 12 வயது மகள் செல்வி கே.பி.தனிஷ்கா கரூர் கொங்கு வெள்ளாளர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 6ஆம் வகுப்பு வரை பயின்று தற்போது கரூர் வேலம்மாள் வித்யாலயாவில் 7ஆம் வகுப்புப் பயின்று வருகிறார்.

செல்வி கே.பி.தனிஷ்கா தனது பதினொன்றாவது வயதிலேயே மத்திய அரசின் "Dakshina Bharat Hindi Prachar Sabha" நடத்தும் ஹிந்தி தேர்வில் B.A., பட்டம் பெற்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார். இவருடைய அண்ணன் கே.பி.ஸ்ரீராம் அவர்களும் 12 ஆவது வயதில் ஹிந்தியில் B.A., பட்டம் பெற்றுள்ளார். அதற்கு நமது சங்கம் 2015-2016 ஆம் ஆண்டு "கொங்கு இளம் சாதனையாளர்" விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது.

கே.பி.தனிஷ்கா யோகாவில் மாநில அளவில் பலமுறை முதல் மூன்று இடங்களுள் ஒன்றைப் பெற்றுப் பரிசுகளை வென்று சாதனை படைத்துள்ளார். அவர் 2ஆம் வகுப்பிலேயே ஹிந்தி கற்றுக்கொள்ள ஆரம்பித்தார், மேலும் அவர் LKG முதல் 6ஆம் வகுப்பு வரை வகுப்பில் முதல் ரேங்க் பெற்று வருகிறார். அவர் படிப்பில் மட்டும் அல்லாமல் பேச்சுப் போட்டி, ஓவியம், நடனம் போன்ற போட்டிகளிலும் கலந்துகொண்டு நிறைய பரிசுகளைப் பெற்றுள்ளார்.

English Proficiency Test, Triple A, Unified International English Olympiad போன்ற போட்டிகளில் கலந்துகொண்டு மாநில அளவில் பல பரிசுகளை வென்றுள்ளார்.

இவ்வாறு 12 வயதில் வியத்தகு சாதனைகள் படைத்து, அவருடைய பெற்றோருக்கும், பள்ளிக்கும், நமது கொங்குச் சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துள்ள செல்வி கே.பி.தனிஷ்கா அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு இளம் சாதனையாளர்" விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வி கா.கமலி

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், அக்கியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த தெய்வத்திரு. காளியப்பன் - திருமதி கலைச்செல்வி ஆகியோரின் மகளாக 1996ஆம் ஆண்டுப் பிறந்தவர் செல்வி கா.கமலி. பள்ளிப்படிப்பை சேந்தமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் முடித்த இவர், B.C.A., பட்டப்படிப்பை நாமக்கல் டிரினிடி பெண்கள் கலைக்கல்லூரியில் முடித்து, தற்போது சென்னை புனித ஜோசப் பொறியியல் கல்லூரியில் MCA மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார்.


செல்வி கமலி ஏழாம் வகுப்புப் படிக்கும் பொழுது அவரது தந்தையார் மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாயில் ஏற்பட்ட அடைப்பின் காரணமாக இயற்கை எய்திவிட்டார். தாயின் அரவணைப்பிலும், அத்தை அளித்த ஊக்கத்தாலும், தனது தன்னம்பிக்கை மற்றும் விடா முயற்சியாலும் செல்வி கமலி பளுதூக்கும் போட்டிகளில் பங்கேற்று தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல்வேறு பதக்கங்களை வென்றுள்ளார்.

மேலும் 2018இல் உதயபூரில் (இராஜஸ்தான்) சர்வதேச அளவில் நடைபெற்ற ஆசியான் பளு தூக்கும் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று. இந்தியாவிற்கும், தமிழகத்திற்கும், கொங்கு இனத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடைபெற்ற பளு தூக்கும் போட்டியில் கலந்து கொண்டு பல பதக்கங்களையும் பரிசுகளையும் பெற்றுள்ளார். நாமக்கல், குடியாத்தம், திருச்செங்கோடு, சென்னை, ஓசூர், கோவை, திருச்சி, சேலம் ஆகிய தமிழக நகரங்களிலும், உதயபூர், ஜம்மு, ஆலப்பி, ஜாம்ஷெட்பூர், குண்டூர் ஆகிய பிற மாநில நகரங்களிலும் நடைபெற்ற மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளிலும் பங்கேற்று ஐந்து தங்கப்பதக்கம் உட்பட பல பதக்கங்களையும், பரிசுகளையும், பாராட்டுகளையும் பெற்றுச் சாதனைகள் நிகழ்த்தியுள்ளார்.

பளூ தூக்குதல் போட்டிகளில் கலந்து கொண்டு பெரும் சாதனைகள் படைத்துத் தமிழகத்திற்கும், சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துள்ள செல்வி கா.கமலி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் "கொங்கு இளம் சாதனையாளர்" விருது வழங்கிப் பாராட்டுகிறது. மேலும் பல சாதனைகள் படைக்கச் சங்கம் வாழ்த்துகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வி சமிதா சிவகுமார்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை நகரைச் சேர்ந்த திரு. சிவகுமார் - திருமதி மகேஸ்வரி தம்பதியரின் மகளாக 2001 ஆம் ஆண்டுப் பிறந்தவர் செல்வி சமிதா சிவகுமார். இவர் தற்போது சென்னை வேளச்சேரியில் உள்ள St.Brittos Matric Hr.Sec.School - இல் 12 ஆம் வகுப்புப் படித்து வருகிறார்.

இவர் Squash விளையாட்டில் வல்லவர். பல போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் பதக்கங்கள், விருதுகள் ஆகியவற்றைப் பெற்றுச் சாதனைகள் நிகழ்த்தியுள்ளார். 2010 ஆம் ஆண்டு முதற்கொண்டே சென்னை SRFI இல் தக்க பயிற்சி எடுத்துக்கொண்டு, தன்னுடைய இடைவிடாத முயற்சியாலும், கடுமையான பயிற்சியாலும், பெற்றோர் தந்து வருகின்ற ஊக்கத்தாலும் ஸ்குவாஸ் விளையாட்டில் மிகச் சிறந்து விளங்குகிறார்.

மாநில அளவிலும், தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் பல போட்டிகளிலும் கலந்துகொண்டுள்ள இவர், தற்போது 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் இந்திய அளவில் மூன்றாவது இடத்தைப் பிடித்துச் சாதனை புரிந்துள்ளார். கடந்த எட்டு ஆண்டுகளாக அவுரங்காபாத், ஆஜ்மீர், சென்னை, மும்பை, ஜோர்டான், நோய்டா, இந்தூர், கோலாலம்பூர், டெல்லி, சிங்கப்பூர், ஈரான், கிரீஸ் தீவு, பெங்களூரு முதலான இடங்களில் பல்வேறு அமைப்புகள் நடத்திய ஸ்குவாஷ் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுச் சாதனைகள் படைத்துள்ளார். அவற்றில் 13 Gold Medal, 7 Silver Medal பெற்றுத் தங்க மங்கையாகத் திகழ்கிறார், இந்தக் கொங்குக் குல நங்கை நல்லாள்.

SQUASH விளையாட்டில் அரிய சாதனைகள் புரிந்து சமுதாயத்திற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்துள்ள செல்வி சமிதா சிவகுமார் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது. இவர் மேன்மேலும் இத்துறையில் சாதனைகள் படைத்திடச் சங்கம் வாழ்த்துகிறது.

## 2018 ஆம் ஆண்டு 10-ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

**முதல் இடம்**

| | | |
|---|---|---|
| பெயர் | : | செ.லேகா |
| த/பெ | : | கே.செல்வராஜ் |
| ஊர் | : | கஞ்சநாயக்கனூர், நாமக்கல் |
| பள்ளி | : | ஸ்ரீவித்யாமந்திர், பதின்ம மேல்நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | **495/500** |

**இரண்டாம் இடம்**

| | | |
|---|---|---|
| பெயர் | : | க.கீர்த்தனா |
| த/பெ | : | கதிர்வேலு |
| ஊர் | : | ஆண்டாங்கோவில், கரூர் |
| பள்ளி | : | வீனஸ் மெட்ரிக்குலேசன் பள்ளி |
| மதிப்பெண் | : | **493/500** |

**இரண்டாம் இடம்**

| | | |
|---|---|---|
| பெயர் | : | G.T.C.நித்தின் கார்த்திக் |
| த/பெ | : | கே.சி.திருமூர்த்தி |
| ஊர் | : | கோபி, ஈரோடு |
| மதிப்பெண் | : | **493/500** |

**மூன்றாம் இடம்**

| | | |
|---|---|---|
| பெயர் | : | இரா.தர்ஷனா |
| த/பெ | : | ராஜா |
| ஊர் | : | பெரியப்பட்டி, நாமக்கல் |
| பள்ளி | : | டிரினிடி அகாடமி பதின்ம மேல்நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | **492/500** |



## 2018 ஆம் ஆண்டு 10-ஆம் வகுப்பு (CBSE) தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | கே.தனுசியா |
| த/பெ | : | கனகராஜு |
| ஊர் | : | நாமக்கல் |
| பள்ளி | : | The Navodaya Academy, Keerambur, Namakkal. TN |
| மதிப்பெண் | : | **484/500** |

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | கே.எம்.ஜெயந்த் |
| த/பெ | : | ஆர்.முருகன் |
| ஊர் | : | கவுந்தப்பாடி, ஈரோடு |
| பள்ளி | : | Jawahar Vidyalaya S.S.School |
| மதிப்பெண் | : | **482/500** |

### மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | N.N.கனிகா |
| த/பெ | : | S.K.நடராஜன் |
| ஊர் | : | பெரியப்பட்டி, நாமக்கல் |
| பள்ளி | : | Green Park Int. School |
| மதிப்பெண் | : | **475/500** |

# 2018 ஆம் ஆண்டு 12-ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

## முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | ப.நிவேதா |
| த/பெ | : | கே.பச்சையப்பன் |
| ஊர் | : | கோவை |
| பள்ளி | : | விக்னேஷ்வர் வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | **1186/1200** |

## இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | ர.சுஸ்ருதன் |
| த/பெ | : | கே.ரத்தினசாமி |
| ஊர் | : | பி.பொள்ளாச்சி |
| பள்ளி | : | விக்னேஷ்வர் வித்யா மந்திர் பதின்ம மேல்நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | **1181/1200** |

## இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | கே.மதுமிதா |
| த/பெ | : | கருப்பசாமி |
| ஊர் | : | கரட்டூர், திருப்பூர் |
| பள்ளி | : | அன்னை அபிராமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | **1181/1200** |

## 2018 ஆம் ஆண்டு 12-ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

### மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜீ.சிவானி |
| த/பெ | : | ஜீவானந்தம் |
| ஊர் | : | கொல்லம்பாளையம், ஈரோடு |
| பள்ளி | : | பாரதி வித்யா பவன் பதின்ம மேல்நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | **1178/1200** |

### மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | பி.தினேஷ்குமார் |
| த/பெ | : | பழனிச்சாமி |
| ஊர் | : | திருப்பூர் |
| மதிப்பெண் | : | **1178/1200** |

### சிறப்புப் பரிசு

| | | |
|---|---|---|
| பெயர் | : | வி.தயாநிதி |
| த/பெ | : | பி.கே.விஜயகுமார் |
| ஊர் | : | நாமக்கல் |
| மதிப்பெண் | : | **1069/1200** |

குறிப்பு : இவர் முழுக் கண் பார்வை இழந்தவர்

## 2018 ஆம் ஆண்டு 12-ஆம் வகுப்பு (CBSE) தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | கே.ஆர்.சரண் |
| த/பெ | : | கே.ராஜா |
| ஊர் | : | தி.நகர், சென்னை |
| பள்ளி | : | P.S.B.B. Sr.Sec.School |
| மதிப்பெண் | : | **477/500** |

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஆர்.ஜாகவி |
| த/பெ | : | ராஜேந்திரன் |
| ஊர் | : | பெருந்துறை, ஈரோடு |
| பள்ளி | : | Senthil Public School |
| மதிப்பெண் | : | **475/500** |

### மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | L.கிர்ஷாந்த் |
| த/பெ | : | S.லோகேஸ்வரன் |
| ஊர் | : | சென்னை |
| பள்ளி | : | Maharishi Vidya Mandir |
| மதிப்பெண் | : | **474/500** |

# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

22.07.2018 அன்று நடைபெற்ற 2018 ஆம் ஆண்டு

விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 1 | Running Race<br>Below 3 years | I ஜி.இனியன்<br>II பி.விஷாக்<br>III எம். தீரன்<br>IV பி.ஜே.சஷ்வின் |
| 2 | Running Race<br>4 to 5 years | I ஆர்.இழா<br>II வி. ஆத்விக்<br>III கே.ஸ்ரீகேசவ்குமார் |
| 3 | Running Race<br>LKG & UKG Std | I ஹித்தீஷ்<br>II எஸ்.தணிஸ்க்<br>III இ.ரித்திகா |
| 4 | Running Race<br>I to II Std. (Boys) | I டி.லோஜித் காந்தி<br>II ஆர்.கணேஷ் ஆகர்சன்<br>III கே.நகுல் வர்ஷன் |
| 5 | Running Race<br>IV to VIII Std. (Boys) | I ஏ.ஹரீஷ்<br>II இ.லிங்கேஷ்<br>III கே. கணேஷ் |
| 6 | Running Race<br>IX to XII Std. (Boys) | I எஸ்.சூர்யா<br>II எஸ்.திவாகர்<br>III ஆர்.அணிருதன் |
| 7 | Running Race<br>16 to 20 Years (Boys) | I எஸ்.மஹிந்தன்<br>II என்.விவின்<br>III ஆர்.கார்த்திகேயன் |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 8 | Running Race<br>21 to 30 Years (Men) | I எஸ்.கலைவாணன்<br>II பி.தினேஷ்<br>III வி.நர்மல் |
| 9 | Running Race<br>31 to 40 Years (Men) | I எஸ்.பாலாஜி<br>II எம்.துரைசாமி<br>III டி.கோபிசங்கர் |
| 10 | Running Race<br>41 to 50 Years (Men) | I அருண்ராஜா<br>II கே.பச்சியப்பன்<br>III சி.கேசவன் |
| 11 | Running Race<br>60 - 70 Years (Men) | I எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>II பி.சதாசிவம்<br>III கே.தேவராஜ் |
| 12 | Running Race<br>71 and above (Men) | I என்.இராமசாமி<br>II கே.வேலுசாமி<br>III ஆர்.ஸ்ரீரங்கராயன் |
| 13 | Ball Throw<br>V to X Std (Boys) | I சி.ஆதவன்<br>II கே.மிதிலேஷ்<br>III இ.லிங்கேஷ் |
| 14 | Ball Throw<br>13 - 20 Years (Boys) | I கே.ஜனா<br>II சிபி<br>III சூர்யா |
| 15 | Shotput<br>21 - 30 Years (Men) | I வி.நர்மல்<br>II ஆர்.சரண்ராஜ்<br>III எஸ்.தமிழ்ச்செல்வன் |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 16 | Ball Throw<br>31 - 40 Years (Men) | I எஸ்.பாலாஜி<br>II எம்.துரைசாமி<br>III பி.கார்த்திகேயன் |
| 17 | Ball Throw<br>41 - 50 Years (Men) | I எஸ்.ரவிக்குமார்<br>II கே.பச்சையப்பன் |
| 18 | Ball Throw<br>51 - 60 Years (Men) | I கே.இராஜாமணி<br>II பி.சதாசிவம்<br>III ஆர்.ஸ்ரீரங்கராயன் |
| 19 | Ball Throw<br>61 - 67 Years (Men) | I கே.சி.பழனிச்சாமி<br>II என்.இராமசாமி<br>III எம்.எஸ்.சங்கமேஸ்வரன் |
| 20 | Ball Throw (Men)<br>68 Years and above | I வி.பழனியாண்டி<br>II பி.கே.கந்தசாமி<br>III கே.ராமசாமி |
| 21 | சிலம்பாட்டம் (90 வயது) | I குமாரசாமி கவுண்டர் |
| 22 | Running Race<br>I - II Std (Girls) | I ஆர்.திஷா<br>II பி. ஷிவானி<br>III பி.ஜனனிஸ்ரீ |
| 23 | Running Race<br>IV - V Std (Girls) | I பி.மோனிகா<br>II எஸ்.காவியா<br>III என்.இனியா |
| 24 | Running Race<br>VII - IX Std (Girls) | I எஸ்.கவிநிதி சேவா<br>II டி.சாதணா<br>III ஏ.தன்வி |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 25 | Running Race<br>IX - XII Std (Girls) | I ஆர்.கார்த்திகா<br>II எம்.சதாஸ்ரீ |
| 26 | Running Race<br>16 - 20 Years (Girls) | I ஆர்.நிமிதா<br>II கே.கீர்த்தனா<br>III எஸ்.ஸ்ரீஅபிதா |
| 27 | Running Race<br>21 - 30 Years (Women) | I பி.அலமேலு<br>II ஏ.கவிதா<br>III பி.மேனகா |
| 28 | Running Race<br>31 - 35 Years (Women) | I எஸ்.தீபா<br>II சி.நித்தியா<br>III சி.அனிதா |
| 29 | Running Race<br>36 - 40 Years (Women) | I பி. சதாபிரியா<br>II எஸ்.கீதா<br>III எஸ்.ராஜலட்சுமி |
| 30 | Running Race<br>41 - 50 Years (Women) | I டி.லட்சுமி<br>II கே. சரஸ்வதி<br>III ஆர்.சித்ரா |
| 31 | Running Race<br>51 - 60 Years (Women) | I டி.சரஸ்வதி<br>II கே. ஜெயமணி |
| 32 | Running Race<br>61 and above (Women) | I மீனாட்சி<br>II ஏ.பார்வதி<br>III ஆர்.விஜயலட்சுமி |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 33 | Ball Throw<br>5 - 12 Years (Girls) | I கே.லக்ஷிஹா<br>II பி.மிருதுவர்ஷிணி<br>III எஸ்.கவிநிதி |
| 34 | Ball Throw<br>13 - 20 Years (Girls) | I ஓவியா<br>II மிருதுளா<br>III ஆர்.கார்த்திகா |
| 35 | Ball Throw<br>21 - 30 Years (Women) | I கவிதா மாதேஸ்வரன்<br>II எம்.கவிதா<br>III லிசோதா |
| 36 | Ball Throw<br>31 - 40 Years (Women) | I என்.ரத்னாபிரியா<br>I சங்கீதா<br>II கீதா செந்தில்குமார்<br>III ஆர்.ரஞ்ஜினி |
| 37 | Ball Throw<br>41 - 50 Years (Women) | I லட்சுமி திருமலைச்செல்வன்<br>II கே.சரஸ்வதி<br>III கே.மகேஷ்வரி |
| 38 | Ball Throw<br>51 - 60 Years (Women) | I ஜெ.ஜெயமணி<br>II பி.ஜோதி<br>III டி.சரஸ்வதி |
| 39 | Ball Throw<br>61 Years and above (Women) | I ஏ.பார்வதி<br>II மீனாட்சி<br>III சிவகாமி |
| 40 | Couple Game | I ஐ.இளவரசன் – சங்கீதா<br>II எம்.செந்தில்குமார் - ராஜலட்சுமி<br>III எஸ்.செந்தில்குமார் – கீதா |
| 41 | Lucky Corner | I லிசோதா<br>II ஏ.சர்மிளா தேவி<br>III ஆர்.ராஜம்மாள் |

# கயிறு இழுக்கும் போட்டி

| வ. எண். | முதல் பரிசு | இரண்டாம் பரிசு |
|---|---|---|
| 1 | வி.பி.வீரப்பன் | சி.அரவிந்தன் |
| 2 | கே.வி.நர்மல் | பி.ஸ்ரீதர் |
| 3 | ஜி.சுகந்த் | எஸ்.தமிழ்ச்செல்வன் |
| 4 | எஸ்.யுவராஜ் | எஸ்.என்.சுப்பிரமணி |
| 5 | பி.லோகேஷ் | பி.தினேஷ் |
| 6 | எஸ்.சுரேஷ் | எஸ்.பரமசிவம் |
| 7 | எஸ்.கார்த்திக்ராஜா | எஸ்.பாலாஜி |
| 8 | எஸ்.செந்தில்குமார் | எம்.செந்தில்குமார் |
| 9 | எம்.துரைசாமி | வி.ஜி.செல்வக்குமார் |
| 10 | கே.பச்சியப்பன் | எஸ்.ராமய்யா |
| 11 | டி.விஜயராஜா | காளீஸ்வரன் |
| 12 | வி.செந்தில்குமார் | எம்.பரத் |
| 13 | ஆர்.செந்தில்குமார் | ஸ்ரீரங்கராஜன் |

# தம்போலா விளையாட்டு

முதல் பரிசு — பி.ஸ்ரீசரண்

இரண்டாம் பரிசு — வி.அசோக்குமார்
பி.ஸ்ரீஜா

மூன்றாம் பரிசு — கே.கந்தசாமி
எஸ்.சூர்யா
சங்கவிதா
மைதிலி கார்த்திகேயன்
மகேஷ்வரி

# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

08.07.2018 அன்று வெள்ளி விழா இல்லத்தில் நடந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| | **கட்டுரைப் போட்டி** | |
| 1 | 1 முதல் 6 ஆம் வகுப்பு வரை | I ப.மோனிகா<br>II கா.பா.கங்கேஷ்<br>III ஜி.ஏ. அக்ஷரா |
| 2 | 8 முதல் 10 ஆம் வகுப்பு வரை | I ஆர்.கார்த்திகா<br>II ஜி.ஏ.நக்க்ஷத்ரா |
| | **கவிதைப் போட்டி** | |
| 3 | பள்ளி மாணவர்கள் | I கா.பா.கங்கேஷ்<br>II அ.தன்வி<br>III ப.மோனிகா |
| 4 | ஆறுதல் பரிசு | ர.வைஷ்ணவி |
| 5 | கல்லூரி மாணவர்கள் | I ஆர்.நிமிதா<br>II எஸ்.ஸ்ரீஅபிதா |
| | **பாட்டுப் போட்டி** | |
| **5** | PRE KG to 1 ஆம் வகுப்பு வரை | I பி.ஜெ.தேஷ்னா<br>II ஏ.ஆதிகுமரன்<br>III ஜி. இனியன் |
| 6 | 2 முதல் 5 ஆம் வகுப்பு வரை | I பி.மோனிகா<br>II எல்.ஜோஷிகா<br>III ஜி.ஏ.அக்ஷரா |
| 7 | 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை | I கே.பி.கங்கேஷ்<br>II ஜி.ஏ.நக்க்ஷத்ரா<br>III என்.மிருதுளா<br>IV டி.சாதனா |
| 8 | Special Category (Key board) | ஆர்.கார்த்திகா |

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 8 | **பேச்சுப் போட்டி** | |
| | 4 முதல் 6ஆம் வகுப்பு வரை | I கே.பி.கங்கேஷ்<br>II பி.மோனிகா<br>III சுகிர்தா வர்ஷிணி<br>IV ஜி.ஏ.அக்ஷரா |
| | 7 முதல் 8ஆம் வகுப்பு வரை | I ஜி.ஏ.நக்க்ஷத்ரா<br>II ஏ.தன்வி<br>III டி.சாதனா |
| 9 | **மாறுவேடப் போட்டி** | |
| | 2 yrs to Pre Kg வரை | I ஜி. இனியன்<br>I எஸ்.பி.பிரித்விகா |
| | LKG to 1st Std வரை | I எஸ்.இ.ரித்திகா |
| | 2 முதல் 4ஆம் வகுப்பு வரை | I ஜி.மகிழன் சின்னசாமி<br>II எஸ்.டி.கிருத்திக் |
| | 5 முதல் 7ஆம் வகுப்பு வரை | I கே.பி.கங்கேஷ்<br>II டி.பவிஸ்<br>III டி.சாதனா |
| | 8 முதல் 10ஆம் வகுப்பு வரை | I ஆர்.கார்த்திகா |
| 10 | **ஓவியப் போட்டி**<br>Pre KG to LKG | I எஸ்.இ.ரித்திகா<br>II ஏ.ஆதிகுமரன்<br>III ஜி.இனியன் |
| | ஆறுதல் பரிசு | ஜி.சம்யுக்தா |

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| | UKG to 1ஆம் வகுப்பு வரை<br><br><br>ஆறுதல் பரிசு | I பி.ஐ.தேஷ்னா<br>II ரித்திக் கணேஷ்<br>III குகன்<br>ஹரண் சிவசாமி |
| | 2 முதல் 3ஆம் வகுப்பு வரை<br><br><br>ஆறுதல் பரிசு | I ஜி.மகிழன் சின்னசாமி<br>II கே.அனுபிரபா<br>III லோக்ஜித் காந்தி<br>எஸ்.கே.அவினேஷ்<br>கனிக்ஷ் ஆகர்ஷன் |
| | 4 முதல் 5ஆம் வகுப்பு வரை<br><br><br>ஆறுதல் பரிசு | I ஜி.ஏ.அக்ஷரா<br>II பி.மோனிகா<br>III காவியஸ்ரீ<br>எஸ்.காவியா |
| | 6 முதல் 7ஆம் வகுப்பு வரை<br><br><br>ஆறுதல் பரிசு | I எஸ்.வர்ஷா<br>II பி.சாதனா<br>III கே.பி.கங்கேஷ்<br>எல்.சுகிர்தா வர்ஷிணி |
| | 7 முதல் 10ஆம் வகுப்பு வரை<br><br><br>ஆறுதல் பரிசு | I ஜி.ஏ.நக்க்ஷத்ரா<br>II என்.மிருதுளா<br>III ஆர்.கார்த்திகா<br>என்.சிபிஅமுதன் |
| | 18 வயதிற்குமேல் | I ஆர்.நிமிதா |

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 17 | **கோலப் போட்டி** | I வி.திலகம் அருண்ராஜ்<br>II கே.பாரதி காளீஸ்வரன்<br>III சித்ரா ரவிக்குமார்<br>IV ஆர்.நிமிதா |
| 18 | **நடனப் போட்டி**<br>Pre Kg முதல் UKG வரை | I ரித்திக் கணேஷ்<br>II ஜி.இனியன் |
| | 1 முதல் 2ஆம் வகுப்பு வரை | I கே.அணுபிரபா<br>II பி.ஜே.தேஷ்னா |
| | 3 முதல் 5ஆம் வகுப்பு வரை | I பி.மோனிகா<br>II எஸ்.டி. கிருத்திக் |
| | 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை<br>(ஜோடி நடனம்) | ஏ.தன்வி<br>ஆர்.கிருத்திகா |

## குலத்தின் சிறப்பு



குலம் : எங்களுடைய குலம் கூறை குலம்

கோயில் : சிவகிரி, தலைய நல்லூர், பொன்காளி அம்மன்

முன்னுரை : குலம்

கொங்கு வேளாளர்களில் பல கூட்டத்தார் உண்டு. ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாருடன் திருமண உறவு கொள்வது மரபு. ஒரே கூட்டத்தைச் சார்ந்தவர்கள் பங்காளிகள் எனப்படுவர். அதாவது உடன் பிறப்பு முறையுடையவர். பங்காளிகள் என்றால் இன்பம், துன்பம், செல்வம், வறுமை, வெற்றி, தோல்வி அனைத்திலும் பங்கேற்பவர் என்று பொருள். வேறு கூட்டத்தாரை மாமன், மைத்துனன் முறையுடையவராக மதிப்பர். கூட்டம், குலம் என்றும் சொல்லப்படும். கூட்டம் என்பது ஓர் ஆண் மூதாதையின் சந்ததியினர் என்ற பொருளில்தான் கொங்கு வேளாளரிடையே வழங்கி வருகிறது. ஒரு குலத்தை சார்ந்தவர் ஒரே கால்வழியினராக இருப்பர். எனவே குருதி உறவு கொண்ட இவர்களிடையே திருமண உறவு தடை செய்யப்படுகிறது. ஒரே குலத்தை சார்ந்த ஆணும், பெண்ணும் சகோதரன், சகோதரியும் (உடன் பிறப்புகளாக) கருதப்படுவர். ஒரே குலத்தினர் அண்ணன், தம்பி முறையினர். ஒரு குலத்திற்குள் திருமண உறவு இல்லை. பிற குலத்தாருடன் திருமண உறவு கொள்வர்.

பொருள் : (குலத்தின் சிறப்பு)

ஒவ்வொரு கூட்டம் அல்லது குலத்திற்கு ஒரு பெயர் உண்டு. பெரும்பாலும் அப்பெயர்கள் விலங்குகள். பறவைகள், தாவரங்கள், தொழில் அடிப்படையிலான பெயர்களாகவோ இருக்கும். ‘கூறை’ என்பது மணப்புடவை, புதுப்புடவை, பட்டுப் புடவை என்று பொருள்படும். புதுமை, மணம், பட்டு என்ற பொருளில் கூறை வருகின்றது. படைப்போர் கூறை குலத்தினர். வேணாட்டில் கூறை நாடு என ஒன்றும் உண்டு. அந்தக் கூறை நாட்டவரே கூறைக் குலத்தினர். கூறைக் குலத்தினரின் காணி இடம்

தலையநல்லூர். அவ்வூர்த் தெய்வம் பொன்காளியம்மான். இக்குலத்தினர் சென்னிமலை முருகனுக்கு விளக்கிட்டு நாணில் முதல் விளக்கு வைக்கும் உரிமை கொண்டவர்கள். தலையநல்லூர். மின்னாம்பள்ளி, சோமூர், சோழன் மாதவி, திருமால் நசியனூர், வெள்ளி யானை, மேச்சேரி, சௌதாபுரம், கொற்றனூர் பார்பதி, பிடாரியூர், மண்மலை, திண்டமங்கலம், நவணி, அரசிலாமணி, பொய்ப்புவியூர், தாளம்பாடி, களங்காணி ஆகிய ஊர்களை இவர்கள் காணியாகப் பெற்றுள்ளனர்.


மேலும் திருச்செங்கோடு, இராசிபுரம், நாமக்கல், சேலம், ஈரோடு, பெருந்துறை ஆகிய ஊர்களிலும் இக்கூட்டத்தினர் வாழ்ந்து வருகின்றனர். பொன்காளி அம்மனுக்குப் பங்குனி மாதத்தில் தேர்த் திருவிழா மற்றும் தீப்பந்தம், குதிரை துளுக்குப் பிடித்தல் போன்ற நிகழ்ச்சிகளைக் கூரை குல மக்கள் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

முடிவுரை :

கொங்கு வேளாளர்கள் பயிர்களை கால்நடைகளை, குடிமக்களை, நாட்டைக் காப்பதிலும், உறவு முறைகளைக் காப்பதிலும் வல்லவர் என்பது பொருள். காமிண்டர் என்னும் பட்டப்பெயரே கவுண்டர் என்றாயிற்று. கொங்கு வேளாளர் சமூகத்தில் ஒவ்வொரு குலமும் சிறப்பு வாய்ந்தது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | ப.மோனிகா |
| தகப்பனார் பெயர் | : | ப.பரமேஸ்வரன் |
| பள்ளி | : | இரவீந்திர பாரதி குளோபல் பள்ளி |
| வகுப்பு | : | ஐந்தாம் வகுப்பு |

## எனது குலத்தின் சிறப்பு



முன்னுரை :

எனது குலம் தூரன் குலம். “தூர் என்பது நெல் பயிர் திரண்டிருப்பது. கிணறு மற்றும் ஏரியில் நிறைந்த சேற்றை அகற்றுவதைத் தூர் எடுத்தல் என்கிறோம். வேளாண்மையில் தூர் கட்டி நெற்பயிர் வளர்த்தால் விளைச்சல் பெருகும். வரப்புயர நெல் உயரும் என்றார்.

ஔவையார். உழவுத்தொழிலை உழைப்பால் மிகுதிப்படுத்தி அதிக நெல் விளைச்சல் புரிந்தோர் தூரன் கூட்டத்தினர். தூரன் கூட்டத்தினர் கொங்கு தேச தொல் குடிகளுள் மிக முக்கியமானவர்கள். உத்தம குணநிபுண தூரர், நாடு புகழ் தூரர், நீதித் தூரர் சீர்கொண்ட தூரர், சாந்த மிளிர் தூரர் என்றெல்லாம் இலக்கியங்களில் புகழப்படுகிறார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த கூட்டமான தூரன் கூட்டத்தின் சிறப்புகளைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

தூரன் குலத்தின் சிறப்புகள் :

முன்பு சேரன் காலத்தில் கொங்கு நாட்டில் நாம் குடியமர்ந்த காலகட்டத்தில் வேட்டுவர் ஆதரவு பெற்ற பாண்டியர்களுக்கும் சேரனுக்கும் போர் மூண்டது. தூரன் கூட்டத்தினர் மந்திரியாக இருந்து சேரனுக்குத் துணை நின்று போர்நடத்தி வெற்றியும் தேடித்தந்தனர். அந்தப் போரின் வெற்றிக்குப் பிறகே கொங்கு தேசத்தில் கொங்கு வெள்ளாளர்கள் காலூன்றி நின்றோம். அந்த வகையில் கொங்கு தேசத்தில் கொங்கு வெள்ளாளர்கள் காலூன்றி நிற்க அடித்தளம் அமைத்ததே தூரன் கூட்டத்தினர் தான். கொங்கு தேசத்தின் மிகத் தொன்மையான காணிகளான காங்கேயம், திருச்செங்கோடு, தூரன்பாடி, கொத்தனூர் போன்ற ஊர்களில் காணி உரிமை பெற்றதைக்கொண்டே தூரன் கூட்டத்தாரின் தொன்மையை யூகிக்கலாம். இன்றுள்ள பட்டக்காரர்கள் முதல் பணக்காரர்கள் வரை அனைத்துக் கொங்கு வெள்ளாளக் கவுண்டர்களின் வாழ்வும் வளமும் தூரன் கூட்டத்தாரின் பங்களிப்பு என்றால் மிகை ஆகாது.

“யாரையும் வெல்லலாம் ஆனால்
தூரனை வெல்ல முடியாது”

என்ற பழமொழிக்கேற்ப நிதான குணம் நன்றாக வாய்க்கப்பெற்ற தூரன் கூட்டத்தினர் செல்லும் இடமெல்லாம் வேர்விட்டு வளர்ந்து வருகிறார்கள். இன்று திருச்செங்கோட்டில் பல முக்கியப் பதவிகளைத் தூரன் கூட்டத்தாரே வகிக்கிறார்கள். புதுசத்திரம் என்ற பெரிய ஊரே தூரன் கூட்டம் நடத்திய அன்னதான சத்திரத்தின் பெயரால் வந்ததே. திருச்செங்கோடு காந்தி ஆசிரமும் தூரன் கூட்டத்தினரின் கொடையே.

முடிவுரை :

இவை மட்டுமின்றி இன்னும் ஏராளமான சிறப்புகள் வாய்ந்த தூரன் குலத்தில் பிறந்ததற்கு நான் பெருமை கொள்கிறேன்.

“வாழ்க கொங்கு சமுதாயம்
வளர்க நம் கொங்கு சொந்தங்கள்”

| | | |
|---|---|---|
| பெயர் | : | கா.பா.கங்கேஷ் |
| தகப்பனார் பெயர் | : | கா.காளீஸ்வரன் |
| பள்ளி | : | வேலம்மாள் வித்யாஷரம் |
| வகுப்பு | : | ஆறாம் வகுப்பு |

# எனது குலத்தின் சிறப்பு



முன்னுரை :

"வேளாளர்" என்றவர்கள் உள்ளன்மையால்
மிக்கிருக்கும் தாளாளர்" –திருஞானசம்பந்தர்

இத்தகைய மரபு வழி வந்த பெருமைக்குரிய கொங்கு வேளாளக் கவுண்டர்களில் எனது குலமான ஈஞ்சன் குலத்தைப் பற்றிக் காண்போம்.

பொருள் : கொங்கு நாட்டின் முதற்குடிமக்கள், கொங்கு வேளாளர்கள் "ஒரு குடிப்பிறந்த பல்லோர்" கூட்டம் என்றனர். உற்றார் உறவினர்கள் "கூடிவாழ்ந்தால் கோடி நன்மை" என்ற பழமொழிப்படி சுற்றம் தழுவி வாழ்ந்தனர். கூட்டத்தையே குலப்பிரிவாக அமைத்தனர்.


ஈஞ்சன் குலம் : கொங்கு நாட்டு வறண்ட பகுதிகளில், புறம் போக்கு நிலங்களில் ஈஞ்சி வளர்ந்திருக்கும். மழை இல்லாத காலத்தில் கூட இது வளரும். அழியாமல் இருக்கும்.

குல தெய்வம் : ஈங்கூர் தம்பிரான்பிராட்டி அம்மன், மதுக்கரை செல்லாண்டியம்மன் கோயில் 88 ஊர்களுக்கும் ஈஞ்சன் குலத்தினர் காணியாளர்களாம்.

முடிவுரை : "கொங்கு நாட்டில் முதற்குடி மக்கள் கொங்கு வேளாளர். கொள்கை மறவர். சங்க நூல்கள் சாற்றும் இவர் புகழ். இங்கும் இன்றும் இவர்களே உயர்ந்தோர். இத்தகைய பெருமைக்குரிய குலப் பெருமை காண்போம்.

பெயர் : அக்ஷரா ஜி.ஏ.
தகப்பனார் பெயர் : ஜெ.ஜி.அருண்ராஜா
பள்ளி : வேல்ஸ் வித்யாஸ்ரம், பல்லாவரம்
வகுப்பு : நான்காம் வகுப்பு

# எனது குலத்தின் சிறப்பு



தலைப்பு : எனது குலத்தின் சிறப்பு

குறிப்புச்சட்டம் : முன்னுரை

- ❖ குலம் என்றால் என்ன ?
- ❖ வேளாளரே மண்ணின் மைந்தர்கள்
- ❖ என் குலமும் – சிறப்பும்
- ❖ முடிவுரை

முன்னுரை :

கொங்குநாட்டின் முதற்குடிமக்கள், பூர்வீகக் குடிகள், மண்ணின் மைந்தர்கள், கொங்கு வேளாளர்கள்தாம் என வரலாற்று மூலங்களான சங்க இலக்கியங்கள் இதற்குச் சான்று கூறுகின்றன. இப்பகுதியில் எனது குலமான மணியன் குலத்தினைப் பற்றியும் மற்றும் எனது குலத்தின் சிறப்பினைப் பற்றியும் விரிவாகப் பார்க்கலாம்.

குலம் என்றால் என்ன ?

பொதுவாக, குலம் என்பது குடிப்பிரிவு அல்லது வகை எனலாம். மொழிக்கே அன்றி மக்கள் வாழ்வியலுக்கும் இலக்கணம் கூறுவது ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியம். பொதுவாக, கொங்கு வேளாளர் குலம் அறுபது என்பர். உயர்திணை மக்கள் உயர்ந்த ஒழுக்கம் உடையவர். அவர்கள் தொடக்கக் கால முதலே பல கூட்டங்களாகப் பிரிந்து வாழ்ந்தனர். அவர்கள், "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பதால் கூட்டுக் குடும்ப வாழ்வியலை மேற்கொண்டனர்.

இந்தக் கூட்டுக் குடும்ப அமைப்புதான் "குலப்பிரிவு" என்பது. ஒரு கூட்டுக் குடும்பத்தினர் ஒருகால் வழியினராவர். இவர்களுக்கான தனிக் குலதெய்வம் உண்டு. ஒரு குல தெய்வ வழிபாட்டினர் பங்காளிகள் அண்ணன் தம்பி முறையினர். இவர்கள் அந்தந்தக் குலத்தில் கொள்வினை கொடுப்பினை வைத்துக்கொள்ள மாட்டார்கள். இது கொங்கு வேளாளரின் தனித்தன்மை உடைய பண்பாடியலாகும்.

வேளாளரே மண்ணின் மைந்தர்கள் :

கொங்கு வேளாளர்களே கொங்கு மண்ணின் மைந்தர்கள். இயற்கையோடு வாழ்ந்தவர்கள் தங்களது குலப்பெயர்களை இயற்கையாக அமைத்துக்கொண்டனர். விலங்கு, பறவை, பூப்பெயர்களோடு செயல்பாடுகளையும் சேர்த்தனர். சிறப்புப்பெயர் பூண்டனர். அறுபது தொண்ணூறு ஆகி நூற்றுநாற்பத்திரண்டாக வளர்ந்தன.

18ஆம் நூற்றாண்டுக்குப் பின் தோன்றிய அழகுமலைக் குறவஞ்சி 142 குலக்காணியாளர் பெயர்களைப் பட்டியல் இட்டுக் கூறுகின்றது. ஓதாலர் இதனைப் பாடினார். மேலும், மக்கள் வாழ்வியலுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர்கள் கொங்கு வேளாளர்கள்தான்.

என் குலமும் – சிறப்பும் :

நான் மணியன் குலத்தினைச் சேர்ந்தவள். மணியன் குலத்தார் கரூரைக் காணியாகக்கொண்டு கொங்கெங்கும் பரவினர். மணியன் குறிச்சியல் காணி பெற்றவர்கள். ''ஊரை ஆள்வோர் மணியக்காரர்கள்'' என்பார்கள். ஊர் மணியக்காரர் மரபு வழியாக ஊரை ஆள்பவர்கள். மோகூர் பழையன் கொங்கு வேளாளன். இவனையும் பிற ஏழு வேளாளர்களையும் செங்குட்டுவன் வென்று களவேள்வி செய்தான் என்று பதிற்றுப்பத்து கூறும். மணியன் குலத்தினர் நாமக்கல் வட்டத்தில் மிகுதியாக உள்ளனர். மோகனூர் மணியன், முத்தூர் மணியன் என்று பிரிவுபடுத்தினர். காங்கேயம் காணிப்பாடல், அரசர் புகழ்ந்த என் காணியூர், அதில் வரும் மணியனே என்று புகழ்கிறது. இவர்களின் குலதெய்வங்கள் கூட இவர்களின் முன்னோர்கள் தாம் என்பதை அறிதல் வேண்டும். தாய், தந்தையரைத் தெய்வமாக வழிபடும் இந்தக் குல மரபு, குலதெய்வ வழிபாடு போற்றுதற்குரியதாகும். கொங்கு வேளாளர்களின் குலதெய்வங்கள் அவரவர்களின் முன்னோர் வழிபாடாகத்தான் அமைந்துள்ளன. மணியன் குலத்தார் நான்கு பிரதான ஊர்களில் தங்கள் குலதெய்வக் கோயில்களைக் கொண்டு வழிபடுகின்றனர். அவை

1) ஸ்ரீ செல்லாண்டி அம்மன் மற்றும் நாவலடி கருப்புசாமி (அபட்டமரதான்), மோகனூர்

2) ஸ்ரீ செல்லாண்டி அம்மன் மற்றும் செக்கடி பெரியசாமி, கட்டம்பட்டி

3) ஸ்ரீசெல்வகுமார் சுவாமி மற்றும் குப்பனசுவாமி, முத்தூர்

4) கரிகாளி அம்மன், நத்தகடையூர்

முத்தூர், கரூர், மோகனூர், இடையாறு, மணியனூர், நல்லிபாளையம், நாமக்கல் ஆகிய ஊர்களில் மணியன் குலத்தினர் மிகுதியாக உள்ளனர். திருஞானசம்பந்தர் கொங்கு வேளாளர்களைப்பற்றிச் சிறப்பாகக் கூறுகின்றார்.

“வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால்
மிக்கிருக்கும் தாளாளர்”

“இன்மையாற் சென்றிரந்தார்க்கு
இல்லையென்னாது ஈந்து உவக்கும் தன்மையார்”

என்னு பாடுவார். வேளாளர்கள் வள்ளன்மை உடைய கொடையாளர்கள். முயற்சியால் கடன்படாது வாழ்பவர்கள். இல்லை என வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாது கண்ணன் போல் கொடுத்து மகிழ்பவர்கள் என்று புகழ்கிறார்.

சங்கப் பாடல்களிலேயே வேளாளர் குண இயல்பு கூறப்பட்டுள்ளது. கொங்கு வேளாளர்கள் கொலை, களவு கடிந்து நீக்கியவர்கள். இவர்கள் கடவுள் வழிபாடு உடையவர்கள். நான்கு வேதங்கள் அறிந்தவர்களை மதிப்பவர்கள். நுகர் பொருளாகிய பண்டம், உணவு ஆகியவற்றை விருந்தினர்களுக்குக் கொடுப்பவர்கள். பழிக்கு அஞ்சுகின்றவர்கள். வாய்மை உடையவர்கள்.

முடிவுரை :

கொங்கு நாட்டின் முதல் குடிமக்கள் கொங்கு வேளாளர்கள். இவர்கள் உண்மையையும், உழைப்பையும் முதலாகக் கொண்டவர்கள். ஒழுக்கத்தையும், மானத்தையும் உயிராகக் கண்டவர்கள். நமது குலம் வகைகளைப் பற்றியும், அதனுடைய சிறப்பினைப் பற்றியும் தகுந்த இலக்கியச் சான்றுகளுடன் விவரித்துள்ளேன்.

கொங்கினத்தான் எங்கும் என்றும் சிறப்பானாக!

பெயர் : ஆர்.கார்த்திகா
தகப்பனார் பெயர் : எஸ்.ரவிக்குமார்
பள்ளி : ஸ்ரீஆனந்த் ஜெயின் வித்யாலயா
மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
வகுப்பு : பத்தாம் வகுப்பு

## எனது குலத்தின் சிறப்பு



முன்னுரை :

கொங்கு நாட்டின் மண்ணின் மைந்தர்கள், பூர்வீகக் குடிகள் கொங்கு வேளாளர்கள்! 13 ஆம் நூற்றாண்டில் விஜய நகரப் பேரரசு கொங்கு நாட்டை 24 நாடுகளாகப் பிரித்தாண்டது. "ஒரு குடிப் பிறந்த பல்லோர்" கூட்டம். கூட்டத்தையே குலப் பிரிவாக அமைத்தனர். தற்போது 60 குலப் பிரிவுகள் உள்ளன. எனது குலம் "ஈஞ்சன் குலம்". இக்குலத்தைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பொருள் :

"தென்புலத்தார் தெய்வம், விருந்தொக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை – குறள்

கொங்கு வெள்ளாளன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தார். அவர்களை வானுறையும் தெய்வத்துள் வைத்துக் குலதெய்வமாக வழிபடுகின்றனர்.

ஈஞ்சன் குல வரலாறு :

கொங்கு நாட்டு வறண்ட பகுதிகளில் புறம்போக்கு நிலங்களில் ஈஞ்சி வளர்ந்திருக்கும். மழை இல்லாத காலத்தில் கூட இது வளரும். அழியாமல் இருக்கும். எத்தகைய துன்பத்தையும் தாங்கிக் கொள்ளும் குடிமக்கள் ஈஞ்சன் குலத்தினர்.

குலதெய்வம் :

ஈஞ்சன் குலத்தவரின் முதன்மை இடம் ஈங்கூர். குலதெய்வம் தம்பிராட்டி அம்மன், மதுக்கரை செல்லாண்டியம்மன் கோயில் 88 ஊர்களுக்கும் ஈஞ்சன் குலத்தினர் காணியாளர்களாம். காஞ்சிக்கோயில் சேவூர், குருமத்தூர், கவுந்தம்பாடி, தொட்டியம், பவுத்திரம் புகழூர் பிற காணியிடங்களாம்.

சிறப்பு :

"வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால்
மிக்கிருக்கும் தாளாளர்" – திருஞானசம்பந்தர்

கொங்கு வேளாளர்கள் மூவேந்தர்களிடமும் தொடர்புடையவர்கள். அவர்களின் சிற்றரசர்களாகவும், தானைத் தலைவர்களாகவும், படைவீரர்களாகவும், அமைச்சர்களாகவும் இருந்துள்ளனர்.

மரபுகள் :

ஈஞ்சன் குலத்தினர் ஈஞ்சன் மரத்தைப் போற்றுபவர்கள். எனவே ஈஞ்சன் துடைப்பத்தை உபயோகிப்பது இல்லை.


முடிவுரை :

‘மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும் கை
ஆழிதரித்தே அருளும் கை – சூழ்வினையை
நீக்கும் கை என்றும் நிலைக்கும் கை – நீடூழி
காக்கும் கை காராளர்கை! – கம்பர்

கொங்கு வேளாளர்கள் நாகரிகமும் பண்பாடும் உடையவர்களாவர். சங்க காலம் தொட்டு வந்த கொங்கு வேளிர் குலந்தழைக்க! கொங்கு மக்கள் பண்பு வாழ்க! எங்கும் உள்ளோர் என்றும் புகழ்வர்! குலப் பெருமையைக் காப்போம்!


| | | |
|---|---|---|
| பெயர் | : | நக்ஷத்ரா G.A. |
| தகப்பனார் பெயர் | : | G.A.அருண்ராஜா |
| பள்ளி | : | வேல்ஸ் வித்யாஸ்ரம், பல்லாவரம் |
| வகுப்பு | : | எட்டாம் வகுப்பு |

## நீரின்றி அமையாது உலகு



தண்ணீரைச் சேமித்து வைத்தால் – வரும்
தலைமுறை நம்மையே வாழ்த்தும் – இம்
மண்ணிலே தண்ணீர் இல்லாமல் – நம்
மனிதகுலம் என் செய்யும் எந்நாளும்

ஆறுகள் ஏரிகள் குளங்கள் – என
அடுக்கு மாடிகள் அமைத்தோம்
ஆற்றிலே பெருக்கெடுத்தோடும் – நீரில்
ஆலைக் கழிவுகளைக் கலந்தோம்

நீர்வழிப் பாதைகளை மறித்தோம் – நஞ்சை
நிலங்களைக் கூறுபோட் டொழித்தோம்
பசுமை வழிச்சாலை எனச்சொல்லி – நாம்
பல நூறு மரங்களை அழித்தோம்

ஆளுக்கொரு மரம் நட்டு வைப்போம் – அதை
அடுத்து வரும் தலைமுறைக்கும் சொல்வோம்
மரங்களே எங்கெங்கும் நிறைந்தால் – அந்த
மழை கூட நம்வாசல் தட்டும்

மழைநீரைச் சேமித்து வைப்போம் – நம்
மண்ணிலே நீர் வளம் காப்போம்
மாசு கலப்பினைத் தடுப்போம் – நம்
மூச்சினைச் சுத்தமாய் இழுப்போம்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | கா.பா.கங்கேஷ் |
| தகப்பனார் பெயர் | : | கா.காளீஸ்வரன் |
| பள்ளி | : | வேலம்மாள் வித்யாஷரம் |
| வகுப்பு | : | ஆறாம் வகுப்பு |

# நீரின்றி அமையாது உலகு



நீரின்றி அமையாது உலகே!
நீர்தான் வாழ்க்கைக்கு முதலே!
நீரே அமிழ்தம்....
நீரே சுவாசம்...

நீரின்றி உணவில்லை....
நீரின்றி உயிரில்லை!
உழவர் சிந்தும் வியர்வை நீரே
உயிர் தணிக்கும் அமுது நீரே!

வான் மழையாய்....
ஆழியாய்....
அமுதச் சுனை ஊற்றாய்
இப்புனலே புவியின் மலர்ச்சி!

மழைநீர் பொழிய மகிழ்ச்சியெங்கும்!
அழகின் சிரிப்பு அடடா எங்கும்!
உயிர்நீர் காப்போம்!
உயர்வைப் பெறுவோம்.


பெயர் : அ.தன்வி
தகப்பனார் பெயர் : எம்.அமராபதி
பள்ளி : பத்மா சேஷாத்ரி
வகுப்பு : ஏழாம் வகுப்பு

## நீரின்றி அமையாது உலகு



''பஞ்ச பூதங்களில் ஒன்றானாய்'' – நீரே!
எல்லாம் உயிர்களுக்கும் ''தாய்ப்பாலானாய்'' – நீரே!
உலக மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த
''உன்னதப் பொக்கிஷம்'' ஆனாய் – நீரே!


ஒவ்வொரு மனிதனின் கண்களிலும் ததும்பினாய் – நீரே!
உழவனின் உழைப்பில் ''வியர்வைத் துளிகளானாய்'' – நீரே!
அன்று ''பாரதத்தை வளமாக்கி உழவனின் பாரத்தை இறக்கினாய்'' – நீரே!
இன்று உழவனின் பாரத்தை ஏற்க மறுக்கிறாய்.

''பாரதத்தைக் கண்டு போராடும் மக்களின் ''கண்ணீரானாய்'' – நீரே!
காலி குடங்கள் ஏந்தி வரவேற்கிறோம் ''அந்த அணிவகுப்பை ஏற்றுக்கொள்வாய்'' – நீரே!
காற்று அனலாய் வீசும்போது மாயமானாய் – நீரே!
மலைகள், ஆறுகள், குளங்களிலும் வறண்டு போனாய் – நீரே!

''செவ்வாய்க் கிரகத்தில்'' தேடுதல் வேட்டை
நடத்தி அதன் விட்டத்தில் கூட காணாமல் போனாய் – நீரே!
நாங்கள் ''குடிநீருக்கும், பாசனத்திற்கும் போராட்டம் நடத்தி அதற்கு'' ''வாரியம் அமைத்தாய்'' – நீரே
ஒவ்வொரு துளி நீரும் இனி நமக்கு உயிராய் – நீரே!
உலகில் உள்ள அனைவரும் உணர்வீரே!
வரும் தலைமுறைக்குச் சேமிக்க வழிகாட்டுவோம், விலைமதிப்பற்ற – நீரை!

| | | |
|---|---|---|
| பெயர் | : | ப.மோனிகா |
| தகப்பனார் பெயர் | : | ப.பரமேஸ்வரன் |
| பள்ளி | : | இரவீந்ர பாரதி குளோபல் பள்ளி |
| வகுப்பு | : | ஐந்தாம் வகுப்பு |

# நீரின்றி அமையாது உலகு



சொட்ட சொட்ட மழை கொட்டும்,
மனதில் முட்ட முட்ட நிறையும்,
துறை இல்லாமல் ஊழி இல்லை
நீர் இல்லாம் ஊழி இல்லை

இவ்வுலகில் தண்ணீர் வற்றிப்போகும்,
ஏனால் நீரின்றி அமையாது உலகு;
மழையின் மழலை ஒலி கேட்காமல்,
மனிதனின் உயிர் இயலாது,


மனிதனின் மனம் இயலாது,
மொத்தத்தில் இவ்வுலகமே இயலாது,
ஏனால் நீரின்றி அமையாது உலகு;
நீரே, நீ ஆகாயத்தில் பிறக்கிறாய்!



பூமியில் சிலிர்க்கிறாய்!
வானவில்லைத் தோன்ற வைக்கிறாய்,
தொன்றுதொட்டு எங்களை நேசிக்கிறாய்,
ஏனென்றால், நீரின்றி அமையாது உலகு.


| | | |
|---|---|---|
| பெயர் | : | ஆர்.கார்த்திகா |
| தகப்பனார் பெயர் | : | எஸ்.ரவிக்குமார் |
| பள்ளி | : | ஸ்ரீஆனந்த் ஜெயின் வித்யாலயா மெட்லிக் மேல்நிலைப்பள்ளி |
| வகுப்பு | : | பத்தாம் வகுப்பு |

## வல்லமை தாராயோ



அஞ்சாத நெறிகளும்
அறிவாற்றல் கொண்டவளும்,
நேர்நிமிர்ந்த நன்னடை
போடும் மங்கையே;

தாயாகவும், தமக்கையாகவும், மனைவியாகவும்
இப்பாரில் வலம் வருபவளே!
இவள் பாதங்கள் இரண்டும்
நோகும் வரையல்ல – சாகும்

வரையும் நடப்பதற்கோ ?
துள்ளி விளையாடும் புள்ளிமான்கள் – போலவே
குழந்தைகளை அரவணைத்துக்
கொள்ளும் – மானோ இவள்
என்னைப் பக்குவப்படுத்திய – பொன் மொழிகளைக்
கூறிய பெண்ணே!



சோதனையைச் சாதனையாக மாற்றும் – கண் மணியே!
வீரவாளை ஏந்திய – வீரமங்கையே
நீயோ – இயற்கையின் மணிமகுடம்
வீரமும் நாமாக, வாழ்வே நாமாக
வல்லமை தாராயோ – நீ!


பெயர் : ஆர்.நிதித்தா
தகப்பனார் பெயர் : எஸ்.ரவிக்குமார்
பள்ளி : Cresent Institute of Science and Technology, Chennai
வகுப்பு : B.Tech.,

## வல்லமை தாராயோ



அச்சமின்றி வீரமாக வாழ
வல்லமை தாராயோ!
நியாயத்தைப் பேசித்
தர்மத்தை நிலைநாட்ட
வல்லமை தாராயோ!

தீமையை அழித்துப்
பூமியைப் புனிதப்படுத்த
வல்லமை தாராயோ!
இச்சகத்தைப் பொறுத்துக் கொண்டு
அறமுடன் வாழ
வல்லமை தாராயோ!

தவறுகளைக் கண்டித்து
திறமைகளைப் பாராட்ட
வல்லமை தாராயோ!
வாழ்க்கை என்னும் கடலைக் கடந்து
காயம், வழி, அவமானம் என்னும்
கண்ணீரைத் துடைக்க
வல்லமை தாராயோ!
வல்லமை தாராயோ! மனமே
வல்லமை தாராயோ!
உன்னில் கவிதை எழுத
வல்லமை தாராயோ!



வாழ்க வாழ்க வல்லமையே!
வளர்க வளர்க மனித இனமே!

கண்ணங்குல கவுண்டச்சி
செல்வி ஸ்ரீஅபிதாசெந்தில்குமார்
(CA Foundatoin) ஊரப்பாக்கம், சென்னை–603210



## நீரின்றி அமையாது உலகு



கங்கையின் பெருமை நீ
காவேரியின் சண்டை நீ
கோதாவரியின் வளம் நீ
நீரூற்றின் அழகு நீ

பூக்களின் அழகுக்கு நீ
மனிதனின் முகப்பொழிவுக்கு நீ
மீன்களின் உயிர் நீ
மேகச் சண்டையின் பரிசு நீ
தீயின் எதிரி நீ

விசுவாசியின் தோழன் நீ
உடலில் எழுபது சதவிகிதம் நீ
உணவின் வளர்ப்பில் நீ
உயிரின்றி உடம்பில்லை

ஆனால் நீயின்றி உலகேயில்லை.

| | | |
|---|---|---|
| பெயர் | : | சங்கவிதா செந்தில்குமார் |
| தகப்பனார் பெயர் | : | செந்தில்குமார் |
| பள்ளி | : | எஸ்.எஸ்.எம்.பள்ளி, பெருங்களத்தூர் |
| வகுப்பு | : | எட்டாம் வகுப்பு |

## நீரின்றி அமையாது உலகு



மழை நீர் உயிர் நீர் தான்!
அதனால் தான் உயிரே போனது
காவேரி நீரூக்காக!
நீர் இன்றி விவசாயம் இல்லை

விவசாயம் இன்றி உயிருக்கு உணவில்லை
உணவு இல்லையேல் இவ்வுலகம் இல்லை!
நீருக்காக மூன்றாம் உலகப்போரா!
எனக்குள் ஒரு கேள்வி

தாய்க்கு அடுத்துத் தாலாட்டுவது – மரம்
மரம் வளர, மழை வேண்டும்!
நீருக்காகக் கண்ணீர் சிந்தும்
நிலை வேண்டாம்!



மனித நேயத்துடன் மரம் வளர்ப்போம்!
மழை பெறுவோம்
“கொங்கு செழித்தால்
எங்கும் செழிக்கும்”

| | | |
|---|---|---|
| பெயர் | : | ர.வைஷ்ணவி |
| பள்ளி | : | பெத்தேல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி |
| வகுப்பு | : | பத்தாம் வகுப்பு |



# ஆனைக் காடு



ஆனைக்குப் பிடிக்கக் கூடாத "மதம்"
மனிதனைப் பிடித்துப் பிரித்தது நிதம்
ஆனைத் தடமமைத்துக் கட்டியது காடு
மனிதன் அதையழித்துக் கட்டினான் வீடு

ஆனைத்தடம் மறித்தான் மனிதன்
தடம்புரண்டது ஆனைக் கூட்டம்;
தெளிவறியாப் பாதையில் தடுமாறி
ஆனையுடன் மரித்தான் மனிதனும்

"ஆனைகளின் அட்டகாசம்" என
ஓலமிடும் ஒப்பாரிச் செய்திகள் பல;
அஞ்ஞானக் கொம்பன் நீ தொழுவது
ஆனைத்தலை ஞானக் கடவுள்?

காடு வளர்ப்பது ஆனையின் வேலை
கலை வளர்ப்பது மாந்தரின் கடமை
நூல் நூற்பது ஆடையை நெய்திட
நூல் யாப்பது மனதைச் செப்பனிட

பிழைப்பதை விடுத்து வாழ்ந்திடப்
பழகுவோம்;
வாழ்வியல் இலக்கணம் வாசித்து
வழிகாண்போம்;
அன்பின் வழியது உயிர் நிலை'
உயர்த்துணர்ந்து ஓதினோர்,
ஞாலத்தின் தாய்க்குடித் தமிழ்ச்சான்றோர்
பலவாறு;

ஆனந்த வாழ்வுதனை அவணியில்
ஆடிமகிழ
அன்புசால் தமிழறிவை யாவர்க்கும்
சேர்த்திடுவோம்!
இனியில்லை என்றுமில்லை, வாரீர்! வாரீர்!

– அழகன் கருப்பண்ணன் M.Tech.,
கோவை

# தீரன் சின்னமலை

குறிஞ்சிகுமரன்
9 வகுப்பு சச்சிதானந்தா ஜோதி நிகேதன் கல்லூரி மேட்டுப்பாளையம்

கொங்கு இனச்சொந்தங்களே!

தீரன் சின்னமலை என்று நமது உதடுகள் உச்சரித்தாலே உள்ளத்திலிருந்து வீர உணர்வுகள் கொப்பளிக்கும். ஆங்கில ஏகாதிபத்திய படைகள் அஞ்சி அலறிப் புறமுதுகுகாட்டி ஓடும்படி அடித்துத் துரத்தினார். அடிமை வாழ்வை அறவே வெறுத்து அந்நியர் ஆட்சிக்குக் கீழ் இருக்க மறுத்தார். தாய் நாட்டிற்காக, தாய் மண்ணை மீட்க மரணத்தை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார், கொங்கு மறவன்.

**1956**இல் பிறந்த தீர்த்தகிரி என்ற இயற் பெயர் கொண்ட சின்னமலை பதினாறாவது வயதில் குதிரையேறி ஊர்வலம் வந்த போழ்து தண்டற்காரன் ஒருவன் மைசூர் மன்னருக்கு வரிப்பணம் தர சங்ககிரி செல்வதாகக் கூறினான். ‘இந்த நாட்டை ஆள மைசூர் அரசர் எதற்கு ? வரிப்பணத்தை இங்கே கொடு; சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையில் சின்னமலை வாங்கிக் கொண்டதாகப் போய்ச் சொல்’ என்று அனுப்பினார் செயல்வீரன் சின்னமலை.

ஈரோட்டிலிருந்து தெற்கில் ஏறத்தாழ 38 கல் தொலையில் உள்ள மேலப்பாளையம் என்ற ஊரில் பிறந்த சின்னமலை நொய்யல் ஆற்றில் அடிக்கடி வெள்ளம் வந்து வடக்கே போகத் தடையாக இருந்தது. நொய்யலின் வடபுறம் குடியேற ஏற்ற இடம் “ஓடாநிலை” அவன் உள்ளத்தைக் கவர்ந்தது. புதியதாக அரண்மனை. கட்டிக் குடியேறினார் தீரன் சின்னமலை. மைசூர் அரசிடமிருந்து சேலம் அயல் நாட்டவர்களுக்கு மாறிவிட்டது. கோவை விரைவில் ஆங்கிலேயருக்குச் சொந்தமானாலும் ஆகக்கூடும். திப்பு நம்நாட்டின் ஒரு பகுதியைச் சேர்ந்தவன். எனவே திப்புவின் படையில் சேர்ந்து வெள்ளைக்காரனை இந்நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என முடிவு செய்தான். தீரன் சின்னமலை தம்பிமார்களுடன் கலந்து ஆராய்ந்து மூவரின் குதிரைகள் கோவை மாவட்ட மூலை முடுக்குகளெல்லாம் பறந்தன. வீரவுணர்ச்சி பெற்ற கொங்கு இனக் காளைமார்கள் கொக்கரித்துக் கொதித்து எழுந்தனர்.

சின்ன மலையின் தீரன் படைப்பயிற்சி, படை நடத்தும் திறமையை நேரில் கண்டுகளித்தார் திப்பு. சின்னமலையைச் சேனைத் தலைவர் ஆக்கினார். திப்புவின் பல வெற்றிகளுக்குச் சேனைத்தலைவர் சின்னமலையே காரணமானார். வெள்ளையர்கள் தீரனிடம் “உன்னை எங்கள் படைத்தலைவனாக வைத்துக்கொள்கிறோம். உன் விருப்பம் என்ன சொல்லுக” என்று கூறினர். “அரசனாக இந்நாட்டை ஆள வேண்டும் என்பது என் ஆசை அல்ல. அண்டிப் பிழைக்க வந்த அயல்நாட்டாராகிய நீங்கள் இங்கு இருக்கக்கூடாது. என்தாய்நாட்டு மக்கள் உங்களிடம் தலை குனிந்து நிற்கக் கூடாது, வாழ்க்கைக்காக. மானத்தை விற்கும் வழக்கம் எனக்கில்லை” என்று முழக்கமிட்டுத் தூக்குக் கயிற்றைச் சகோதரர்களுடன் முத்தமிட்டார் தீரன் சின்னமலை.

வாழ்க தீரன் சின்னமலை புகழ் வளர்க கொங்கு இனம்.

❖❖❖❖❖

# இயற்கை

தமிழ் மண்ணின்
தாகம் தீர்த்திடத்
தங்க மழைமேகம் வர வேண்டும்.
பச்சைப் புல்வெளி எங்கும் படர்ந்திடப்
பசும்பொன் மேகமே வரவேண்டும்
வெயிலில் வாடும்
மலர்கள் மலர்ந்திட
வெள்ளிப் பனிமழையே வரவேண்டும்
வையகம் வாழ்ந்திட
வைரமணித்துளியே வரவேண்டும்
பாரெங்கும் வற்றாமல்
நீரங்கு நிறைய வேண்டும்
உலகில் உள்ள
உயிர்கள் வாழ
உன் உள்ளம் உருக வேண்டும்
மனம் மகிழ்ந்து வாழ்த்திட
மழைத்தாயே நீ வரவேண்டும்
குளம் கிணறு ஆறுகளில்
குடி புகுந்து வரவேண்டும்
அகிலமெல்லாம்
அனைத்து வளம் பெருக
அம்மா நீ வரவேண்டும்
பூமித்தாயே உன் புகலிடம்
அது கொடுப்பது பலவும் பொன்தங்கம்
நீ பூகம்பம் கொள்ளும் பெண் சிங்கம்
நான் பார்ப்பது எல்லாம் உன் அங்கம்
நீதித்தாயே உன் நெஞ்சம் – அதை
நினைத்தால் கூட தீ அஞ்சும்
சுமைகள் தாங்கி உன் தேகம்
பல சுகங்கள் கொடுக்குது அது தியாகம்
உன்னைப் பார்க்கையில் வரும் மோகம்
அந்த எண்ணத்திலே எழும் பெரும் தாகம்
உன் பெண்மையில் கண்டேன் ஒரு பேரன்பு
அந்தப் பண்மையில் வாழுது பாரிங்கு
தாய்மை நெஞ்சத்தோடு என்னைத்
தாயே உன்மடி சாய்த்துக் கொள்வாய்!



க.நிவேதிதா
த/பெ.கணேசன்
ஊனாம்பள்ளம் புதூர்
காமராஜர் வீதி
மொடக்குறிச்சி (அநி)
ஈரோடு மாவட்டம்
த.பெ.எண். **638104**

❖❖❖❖❖

# <u>வழியெங்கும் கூடுதுறை</u>

லிங்காயன் – சாத்தந்தை குல திருமகன் இவன்.
பதிமூன்றாம் நூற்றாண்டின் முன்னோடிப் பொறியாளன்.
ஆழ – அகலம் கிஞ்சித்தும் பிசகாமல்
வளைத்து நெளித்து – வாகாய் கரை அமைத்து
பவானி ஆற்றின் இயற்கை நீளத்தை – மேலும்
ஐம்பத்தாறு மைலுக்கு நீடிக்க வைத்த சாதனையாளன்.

ஆம் –
பவானி நகரின் கூடுதுறையில் காவிரியுடன் கலந்து
தன்னைத் தொலைத்திடவிருந்த பவானியாற்றின் காதில்
நைச்சியமாய்ப் பேசி – கொஞ்சம் முன்பே தடுத்து
தடுப்பணை கட்டி சாகசம் புரிந்தவன் இவன்.

தடுப்பணை தாண்டி காவிரியில் கலந்திடு நீ !
கூடுதுறையென்ற பெயர் உருவாகட்டும் இங்கே !!

நான் கட்டும் கால்வாயின் மதகுகளிலிருந்தும்
சீறிப்பாய்ந்திடு நீ – உன் வழியெங்கும்
நெல், மஞ்சள், கரும்பு, வாழையென விளையட்டும்.
அதனால் செழிக்கட்டும் கொங்கு மண்டலம்.
புதிய கால்வாயின் ஒவ்வொரு மதகின் முடிவிலும்
காவிரியுடன் நீ கலந்து – கூடுதுறைகளாகட்டும் ஆங்காங்கே !!

பவானி நதியிடம் இப்படி வேண்டி – சொன்னதைச் செய்து
புண்ணியம் தேடிக்கொண்ட சூட்சுமக்காரன் இவன்.
உழவு செழித்து – உலகு தழைக்க வழிகண்டவன் இவன்.

சாதுர்யம் மிக்க இவன் செயல் திறம்கண்டு
பாண்டிய மன்னன் வீரபாண்டியன்
**'காலிங்கராயன்'** இவனென பட்டம் சூட்டி மகிழ்ந்தனன்.

புகழ் மழையில் – நெறிதனை மறந்தவனில்லை இவன்.

பதினாராயிரம் ஏக்கர் பாசனமென்றாலும்
எம் சாத்தந்தை குல வம்சத்தவர் எவரும்
இதன் பயனாளியாய் இருந்திடலாகாதென
வினயமாய் விண்ணப்பம் வைத்த **மேலோன் இவன்.**

இந்த எழுநூற்று முப்பத்தைந்தாண்டுகளில்
எத்தனையோ தலைமுறைகள் வாழ்ந்து களித்தது
தனியொரு மனிதனிவனின் பொதுநலத் தொண்டால்.

இன்று –
மேலோன் இவனின் – கால்வாய் இதனில்
ஆலைக் கழிவுகளும் – சாயக் கழிவுகளும்.

வேண்டாம் விளக்கம் !? சுயநலம் தவிர்ப்போம் !!



**கே.சுவாமிநாதன்**
13, லோகியா வீதி, காட்டுப்பாளையம்,
மொடக்குறிச்சி – 638 104.
**செல் : 99765 62828**

# காலிங்கராயன் நதிகள் இணைப்பின் முன்னோடி

கொங்குமாமணி புலவர் செ.இராசு

இந்திய நதிகள் இணைப்பைப் பற்றிக் கடந்த முப்பது ஆண்டுகளாகப் பேசிக்கொண்டே இருக்கிறோம். முதலில் தென்னிந்திய நதிகளை இணைக்க வேண்டும், தமிழக நதிகளை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் உண்டு. இன்றைய நிலையில் இந்தியாவின் சில பகுதிகளில் பெரும் வெள்ளப்பெருக்கு. அதே சமயம் வேறு சில இடங்களில் கடுமையான வறட்சி. இந்த நிலை இந்திய நதிகள் இணைப்பால் மாறும்.

இந்திய நதிகள் இணைக்கப்பட்டால்
இரண்டு மடங்கு நீர் மின்சாரம் உற்பத்தியாகும்.
மூன்று மடங்கு விவசாய நிலம் பயன்படும்
நீர்வழிப் போக்குவரத்துச் சாத்தியமாகும்.
குடிநீர்ப் பற்றாக்குறை அறவே நீங்கும்
இந்திய ஒருமைப்பாடு வலுவடையும்.
எனவே நதிகள் இணைப்பு, காலத்தின் கட்டாயம்.

நூறு ஆண்டுகட்கு முன்னரே நதிகள் இணைப்பு முயற்சிக்குக் கால்கோள் நாட்டியவர் தேசிய கவி பாரதியார்.

''வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்'' என்பது பாரதியார் பாடல்

கி.பி.13ஆம் நூற்றாண்டிலேயே பவானி, நொய்யல், அமராவதி ஆகிய மூன்று ஆறுகளையும் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு ஓரளவு வெற்றியும் கண்டவர் நம் காலிங்கராயன்.

முதலில் பவானியாற்றில் தடுப்பணை கட்டி வாய்க்கால் மூலம் பாசனம் பெறச்செய்து உபரி நீரை நொய்யலாற்றில் கலக்கச் செய்தார். இதன் மூலம் பவானி நொய்யல் இணைப்பு ஏற்பட்டது. இதைக் கார்மேகக் கவிஞரின் கொங்கு மண்டலச் சதகம் புகழ்கிறது. இன்று நாமும் நேரடியாகக் காணுகிறோம்.

''காவிரி யோடு கலக்குறு வானியைக் கட்டணைநீர்
பூவிரி செய்களுக்கு ஊட்டிநற் காஞ்சி புகுதவிசை
தேவர்கள் சாம்பவர் பாவாணர் எல்லாம் தினம்மகிழ
மாவிச யம்பெறு காலிங்க னும்கொங்கு மண்டலமே''
என்பது கொங்குமண்டலச் சதகப் பாடலாகும். (காஞ்சி, நொய்யலின் பழைய பெயர், வானி – பவானி, செய் – வயல்)

அடுத்து நொய்யல் – அமராவதி இணைப்புத் திட்டத்தைக் காலிங்கராயன் மேற்கொண்டார். காலிங்கராயன் கால்வாய் நொய்யலில் கலக்கும் இடத்தில் அணை கட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அணையிலிருந்து தெற்கு நோக்கி விதரி

அத்திப்பாளையத்திலிருந்து வாய்க்கால் வெட்டும் பணியும் தொடங்கப்பட்டது. இந்நிலையில் காலிங்கராயன் அமரர் ஆனார். திட்டத்தைத் தொடர்ந்து நடத்துபவர் எவரும் இலர்.

நொய்யலில் காலிங்கராயன் கட்ட முற்பட்ட அணை இன்று ஒட்டைஅணை என்ற பெயரில் சிதைந்து கிடக்கிறது. விதரி அத்திப்பாளையத்தின் தெற்கே காலிங்கராயனால் அமராவதி நோக்கி வெட்டப்பட்ட கால்வாய் அடையாளம் பல இடங்களில் உள்ளது.

புலவர்கள் பலர் இம்முயற்சியைப் பாராட்டிப் பாடல் பாடினர்.

''வாய்த்தபுகழ் சாத்தந்தை காலிங்க ராயர் அணை
வரத்தினால் கட்டி வைத்தார்
வானிமுதல் ஆதிகரூர் அறுகாத மும்வளர்
வெகுசனம் பிழைக்க வேதான்''

என்பது ஒரு தனிப்பாடல் பகுதி.

''அனதரு வான கனமா மேரு
திண்டிறல் வானியில் கண்டனை கட்டி
கருவூர் வரைக்கும் வரிசையாய் வாய்க்கால்
நடத்தும் உதாரன் படைக்குயர் தீரன்
தாலங்கள் புகழும் காலிங்க ராயன்''

என்பது சாமிநாதக் கவிராயர் பாடிய வெள்ளோடு பெரியண்ணன் குறவஞ்சிப் பாடலாகும்.

நின்று போன காலிங்கராயனின் நொய்யல் – அமராவதி இணைப்புத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வெட்டர்பர்ன் என்பவர் 1872 ஆம் ஆண்டு ஒரு திட்டம் தந்தார்.

''30,000 ஏக்கர்களுக்கு மேல் பாயக்கூடிய அளவு தண்ணீர் அணையிலிருந்து விடப்படுகிறது. ஆனால் பெரும்பகுதித் தண்ணீர் வீணாகிறது'' என்று ஹன்னான் கூறிய குறையை நீக்கவே இத்திட்டத்தைத் தயாரித்துள்ளார் என்றறிகின்றோம். ''காலிங்கராயன் கால்வாய் இப்பொழுது நொய்யல் வரைதான் செல்லுகிறது. கால்வாய் இறுதியில் நொய்யலாற்றில் கலக்கிறது. ஒரு கால்வாயின் வழியாக மீதியாகும் தண்ணீரை நெய்யலைக்கடந்து செல்லச் செய்து அமராவதி (கரூர்) வரை கொண்டு சென்றால் புதிதாக 13,000 ஏக்கர்கள் பாயும் என்று காலிங்கராயன் விரிவுத் திட்டத்தை 27–03–1872 அன்று ரூபாய் 8,71,000 செலவில் தயாரித்துக்கொடுத்தார் வெட்டர்பர்ன். அரசு அனுமதி கொடுத்தும் போதிய பணம் இல்லாத காரணத்தால் இத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

காலிங்கராயன் அவர்களைக் கொங்கு மாமேதை எனப் போற்றி விழா எடுக்கும் இவ்வேளையில் நொய்யலையும், அமராவதியையும் இணைத்து அவர் கண்ட கனவை நினவாக்க நாம் அனைவரும் உறுதி ஏற்போம். அதுவே நாம் அவருக்குச் செலுத்தும் நன்றியாகும்.